32°c
கூடிய வெப்பநிலை 40°c
குறைந்த வெப்பநிலை 27 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

29 APR 2014



விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 ■ கதிர்: 154 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 16, செவ்வாய் 29.04.2014

# பயங்கரவாத தடைச் சட்டம் உடன் ஒழிக்கப்பட வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை வாழ் தமிழ்த் தேசியத்தின் இன ஒடுக்கு முறைச் சட்டமாக தமிழ் மக்கள் மீது காலத்துக் காலம் ஆட்சியில் அமரும் அரசுகள் நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. அத்தகைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தைக் கோரும் தீர்மானம் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் எட்டாவது அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றைய அமர்வில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகனால் குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பிரேரணையைச் சமர்ப்பித்து அவர் உரையாற்றும்போது,

"பயங்கரவாத தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் 1979 ஆம் ஆண்டு மூன்று வருடங்களுக்கு மட்டும் வலுவில் இருக்கும் என்ற அடிப்படையில், அப்போது இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கொண்டு வரப்பட்டது. இருந்தும் அதை இரத்துச் செய்யாது தொடர்ந்து வந்த அரசுகள் 1982 ஆம் ஆண்டு, 1988 ஆம் ஆண்டுகளில் நிறை

21ஆம் பக்கம் பார்க்க



## உறுதியளித்ததைச் செய்யாது ஜனாதிபதி நொண்டிச் சாட்டு

### நேற்றைய அமர்வின்போது வடமாகாண முதலமைச்சர் காட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.29
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது, நொண்டிச்சாட்டுகளைக் கூறிக் கொண்டிருக்கின்றார் என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் எதிர்க்

21ஆம் பக்கம் பார்க்க



## பேச்சுகளின் போது நடந்தவை என்ன?

### விரைவில் வெளிப்படுத்துவேன் என்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

ஜெனிவா, ஏப்.29
இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே இடம்பெற்ற அமைதி முயற்சிகளின் போது என்ன நடந்தது என்பதை எனது நூலில் நேர்மையாக வெளிப்படுத்துவேன் - என்று தெரிவித்துள்ளார் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

21ஆம் பக்கம் பார்க்க

## திருவடிநிலைக் கடலின் கீழ் கண்டெடுக்கப்பட்ட தெய்வம்



யாழ்ப்பாணம், ஏப்.29
சுழிபுரம் திருவடிநிலையில் கடலில் இருந்து 200 மீற்றர் ஆழத்தில் கருங்கல்லினாலான வைரவர் சிலை நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது .

21ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்த கோரியதாலேயே நாங்கள் தலையிட்டோம்

### நல்லிணக்க முயற்சிகள் குறித்து மனம் திறந்தார் ராமபோஷ

ஜொகன்னர்ஸ்பேர்க், ஏப்.29
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமோவை கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தென்னாபிரிக்க அரசு தலையிட்டது - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்காக தென்னாபிரிக்க

21ஆம் பக்கம் பார்க்க

## கமலைக் குற்றவாளி என்று கட்சி தீர்மானித்தது வேதனை

### வடக்கு முதலமைச்சர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப்.29
நீதிமன்றம் குற்றவாளி என்று இனங்காண்பதற்கு முன்னதாகவே அவரது கட்சி அவரைக் கட்சியிலிருந்து நீக்கி நண்பர் தவராஜாவை இங்கு கொண்டு வந்தது வேதனையாக இருக்கின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

21ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்குள் புலனாய்வு உடன் நிறுத்துமாறு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.29
யாழ்.பல்கலைக் கழக வளாகத்தினுள் இராணுவம் அதன் புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் பிரவேசிப்பதையும், தலையீடு செய்வதையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெரிவித்து வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் ஏகமனதாக தீர்மா

21ஆம் பக்கம் பார்க்க

## சுற்றாடல் பொலிஸார் இணைக்கப்பட்டால் நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு இல்லை

### அபாய எச்சரிக்கை விடுக்கின்றது அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.29
வடக்கு மாகாண சுகாதார அமைச்சு டெங்கு உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுற்றாடல் பொலிஸாரின் உதவியை நாடுமானால் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விலகிக் கொள்வார்கள் என்று எச்சரித்துள்ளார் அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண.

சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் நிலையில் வடக்கு மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட பணிகளுக்கு சுற்றாடல் பொலிஸாரை இணைக்கத் திட்டமிட்டுள்ளது என்று

21ஆம் பக்கம் பார்க்க

**வடக்கு மாகாண சபையில் நேற்று 23 தீர்மானங்கள் நிறைவேறின**

விரிவான தகவல்கள் 19ஆம் பக்கத்தில்

## வாகனக் கொள்வனவில் உறுப்பினர்கள் ஆர்வம்

### 6 மாதங்கள் உறுப்பினரான இருந்தவர்களுக்கு தீர்வையற்ற வாகனம் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.29
ஆறு மாதங்கள் மாகாண சபை உறுப்பினர்களாக இருந்தவர்கள் தீர்வையற்ற வாகனம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது - என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

21ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய மே நாள் 2014
உரிமையை வென்றெடுப்போம்! உழைக்கும் வர்க்கமே ஒன்றுபடு!!
எம் மண்ணில் நம் தமிழாட்சி
எம் உரிமையை அங்கீகரி
இடம் : சாவகச்சேரி கலாசார மண்டபம்
நேரம் : பி.ப.2 மணி
அழைக்கின்றோம்! அணி திரள்வோம் !!
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


# இராணுவ ஆள்சேர்ப்பை எதிர்த்து வடமாகாண சபையில் தீர்மானம்

## முதலமைச்சரைத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.29
வடக்கில் நடைமுறைக்குப் புறம்பான வகையில் இடம்பெறும் இராணுவ ஆள்சேர்ப்பை வடக்கு மாகாணசபை கண்டிப்பதுடன், அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து மேற்கொள்ளப்படும் வேலைவாய்ப்பு நேர்முகத் தேர்வு நடவடிக்கைக்கு எதிராக முதலமைச்சர் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'இராணுவத்தால் அண்மைக் காலமாக தமிழ் - இளைஞர் யுவதிகள் சம்பந்தமாக நடத்தப்படும் முறையற்ற செயல்கள் மக்களிடத்தே பீதியை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய செயல்களில் இராணுவம் தொடர்ந்து ஈடுபடுவதை இந்தச் சபை கண்டிப்பதாக' வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய அவர், எமது மக்களின் வாழ்வாதாரம் நசுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் ஓரளவேனும் தமது இன்னல்களுக்காக குரல் கொடுப்பவர்களும் குடும்ப வாழ்வாதாரத்தின் அத்திவாரமாக இருப்பவர்களும் தேசத்தின் இளைய சமூகத்தினரே.

ஆனால் இன்று பல்வேறு வழிகளில் அவர்களின் குரல்கள் நசுக்கப்பட்டு, பயங்கரவாதியாக் கப்படுகின்றனர். அவர்களின் குடும்ப வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. இதன் காரணமாகப் பலர் சொந்த மண்ணில் இருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்கின்றனர். எமது மக்கள் மீதான அடக்கு முறைகளை எதிர்த்து நிற்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது கைகளிலேயே உள்ளது என்பதை இங்குள்ள அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தற்போது வடக்கில் வீடுகளுக்குச் சென்று மிரட்டி பொய்யான தகவல்களை கூறி இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் இராணுவத்தின் கட்டாய ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை கண்டித்து உரையாற்றினர். உலகிலேயே ஆட்டோ மூலம் அறிவிப்புக் கொடுத்து அரச வேலை வழங்கும் ஆச்சரியமான நாடு எமது நாடு தான் என்று தெரிவித்த உறுப்பினர்கள், அவ்வாறு ஆள்சேர்ப்பு செய்வதாகத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் யார் அதை விநியோகித்தார்கள் என்று எதுவுமில்லை. ஆனால் நேர்முகத் தேர்வு இராணுவ உடையில் இருப்பவர்களால் நடத்தப்படுகின்றது.

இது பிழையான நடவடிக்கை. இது தொடர்பில் முதலமைச்சர், வடக்கு பிராந்திய பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி அவ்வாறு செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. (ஐ5)

## விடுதியில் சூதாட்டம்; ஐவருக்கு அபராதம்

மன்னார் உப்புக்குளம் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்த 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா பணம் அரசுடமையாக்கப்பட்டது.

மன்னார் நகர சபையில் ஆளுங்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரது விடுதியிலேயே சூதாட்டம் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸாரால் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். (ற-4-5)

## நோர்வேயில் நெடியவன் தலைமறைவாம்

கொழும்பு, ஏப்.29
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கையில் முன்னெடுத்தார் என்று தெரிவித்து சர்வதேசப் பொலிஸ் ஊடாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள நெடியவன் என்று அழைக்கப்படும் பேரின்பநாயகம் சிவபரன் நோர்வேயில் தலைமறைவாகியுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சர்வதேசப் பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்ட சிவப்பு அறிவிப்பை அடுத்து, நோர்வேயில் நெடியவன் அடிக்கடி சென்று வரும் இடங்கள் அந்நாட்டுப் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன என்றும், இருப்பினும் அவர் அவ்விடங்களில் காணப்படவில்லை என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

தற்போது நோர்வேயில் இருந்து வெளியேறக் கூடிய வழித்தடங்கள் அனைத்திலும் நெடியவனைத் தேடிப் பொலிஸார் வலை விரித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தத் தகவல்களை நோர்வே அரசோ அல்லது அந்நாட்டுப் பாதுகாப்புத் தரப்பா உத்தியோகபூர்வமாக [illegible]டுத்த வில்லை. (ற)

## "பட்டமரமாக பட்டத்துடன் நிற்கின்றோம் எம்மை துளிர் விட்டு வளர செய்யுங்கள்"

### வடமாகாண சபை அலுவலகம் முன்பாக மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.29
மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"எமக்குப் பல ஆண்டுகளாக நியமனம் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுக் கற்கை நெறியைக் கொண்டது மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா. அந்தப் பாடநெறியைக் கற்ற 65 பேருக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை. எமக்கு நியமனம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்"- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

"2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டுவரை கல்வி கற்றுவிட்டு, பட்டத்தை மட்டும் பெற்றுக் கொண்டு பட்டமரம் போன்று நாம் நிற்கின்றோம். எங்களைத் துளிர் விட்டு வளரச் செய்யுங்கள்", "எங்கள் வாழ்வு உங்கள் கரங்களில்", "எம்மை மட்டும் கைவிட்டது ஏன்?", "எம் வாழ்விலும் ஒளி ஏற்றுங்கள்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாண சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர். வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலந்துரையாடியதுடன், தமது கோரிக்கை தொடர்பான மனு ஒன்றையும் அவரிடம் கையளித்தனர். அவர்களுடைய பிரச்சினை தொடர்பாக ஆராய்வதாக முதலமைச்சர் உறுதியளித்தார். (ற-4)

## கலைப் பட்டதாரிகளின் விவரம் கல்வி அமைச்சுக்கு

### யாழ். பல்கலை ஆசிரியர் சங்கத்தால் அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
கலைப்பட்டதாரிகள் உரிய தகுதியைக் கொண்டிருக்காததால் அவர்களுக்கு வேலை வழங்க முடியாதுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ள நிலையில், அவர்கள் (சுமார் 800 பேர்) தகுதியுடையவர்கள் என்று நிரூபிப்பதற்கான நேர்முகத் தேர்வுக்கு அவர்களது பெயர் விவரங்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு உயர் கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தனர். அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கலைப்பீட மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் கணினி அறிவுகளைக் கொண்டிருக்கவில்லை என்றும் அதனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியாதுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கூறியிருந்தார்.

அதனை மறுத்த ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப் பட்டதாரிகள் உரிய தராதரங்களைக் கொண்டுள்ளனர் என்று கூறியது. அப்படியெனின் அவர்கள் பற்றிய பெயர் விவரங்களைத் தந்தால் அவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைக்க முடியும் என்று அமைச்சின் செயலாளர் கூறியிருந்தார்.

இதனையடுத்து யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வேலையற்ற கலைப்பட்டதாரி மாணவர்களது பெயர் விவரங்கள் கடந்த வாரம் சேகரிக்கப்பட்டன. இதில் 800 வரையான கலைப் பட்டதாரிகள் பதிவுகளை மேற்கொண்டனர். இவர்களது விவரங்கள் [illegible] கலைக்கழகம் ஊடாக உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டவுள்ளது என்று ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்தது. (ஐ-4)

## வடமாகாண சபை உறுப்பினர்களின் பன்முக நிதி 40 லட்சமாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29
வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியை 40 லட்சம் ரூபாவாக அதிகரித்து ஒதுக்குவது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் யாழ்.பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாணசபை கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எடுக் கப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டம் கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலா 2.5 மில்லியன் ரூபாவும் (25 லட்சம் ரூபா), மாகாண அமைச்சர்களுக்கு 5 மில்லியன் ரூபாவும், முதலமைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் மாகாணசபை உறுப்பினர்கள் தமக்கான நிதியை அதிகரித்துத் தருமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்திலும் உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பல உறுப்பினர்கள் 4 மில்லியனாக தொகையை அதிகரித்து வழங்க வேண்டும் இல்லா விட்டால் இந்த நிதியே தமக்குத் தேவையில்லை என்று கடுமையாகத் தெரிவித்திருந்தனர். அத்துடன் அமைச்சர்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்காக 45 மில்லியன் ரூபா நிதியை வீண்செலவு செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டி கடுமையாக காரசாரமாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இறுதியில் கைதடியில் அமைக்கப்பட்டு வரும் வடக்கு மாகாண பேரவைச் செயலக கட்டிடத்தின் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட 90 மில்லியன் ரூபா நிதியில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை வழங்குவதற்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் சம்மதித்திருந்தார்.

இதற்கமைய வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 33 பேருக்கும் 40 லட்சம் ரூபா நிதி வழங்குவ தென முடிசெய்யப்பட்டது. (ஐ-5)

## நல்லிணக்க முயற்சியை ஊக்குவிக்க வேண்டும்

### ஜப்பான் கூறுகின்றது

கொழும்பு, ஏப்.29
இலங்கை நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும். எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் தீர்மானங்களை ஒருபோதும் ஜப்பான் ஏற்றுக் கொள்ளாது- இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்நாட்டின் சிரேஷ்ட வெளிவிவகார பிரதியமைச்சர் நொரியோ மிட்சுயா.

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னாகொட வுக்கும், பிரதியமைச்சர் நொரியோ மிட்சுயாவுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

அந்தச் சந்திப்பின்போதே மிட்சுயா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது, இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தின் அடுத்த நிலை மற்றும் அபிவிருத்தி அம் சங்களை அறிந்து கொள்ள ஆர்வமாக இருக்கின்றோம்."- என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் இயல்புநிலை, நல்லிணக்கச் செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திகள் குறித்து கரன்னாகொட ஜப்பான் பிரதியமைச்சருக்கு விளக்கினார். விடுதலைப் புலிகள் மற்றும் அவர் களின் ஆதரவாளர்கள் மேற் குலக நாடுகளில் மேற்கொண்டு வரும் பொய்ப் பரப்புரைகள் காரணமாகவே நல்லிணக் கச் செயற்பாடுகள் தாமதப் படுத்தப்படுகின்றன என்றும் அவர் அங்கு சுட்டிக்காட் டியுள்ளார். (ற)

## வவுனியாவில் கைகலப்பு சம்பவம்

வவுனியா. ஏப்.29
வவுனியா நகரப் ப்குதியில் கைகலப்பில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.
இது தொடர்பாகத் தெரியவரு வதாவது:-
நேற்று முற்பகல் 11.45 மணி யளவில் நகரப் பகுதியில் நடை பாதை வியாபாரம் மேற் கொள்ளும் ஒருவருக்கும் வவுனியா பஸ் நிலையத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் ஒருவருக்கும் இடையே தோன்றிய வாக்குவாதம் இறு தியில் கைகலப்பாக மாறியது.
தகவல் அறிந்து அங்கு வந்து பொலிஸார் இருவரையும் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (க-421)

# காணிப் பிரச்சினைகள் தொடர்பில் நீதிமன்றங்களின் ஊடாகத் தீர்வு

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஏப்.29
வடக்கு மாகாணத்தைப் பொறுத் தவரை காணிப் பிரச்சினை என்பது தீர்க்கப்படமுடியாத பெரும் பிரச்சினையாக நீண்டு செல்கின்றது. கடந்த காலங் களில் ஏற்பட்ட இடப்பெயர்வு களே இந்தப் பிரச்சினைகளுக் குக் காரணம். தீர்வுகள் எட் டப்பட முடியாத காணிப் பிரச் சினைகள் தொடர்பில் நீதிமன் றங்களின் ஊடாக தீர்வு காண் பது என்று தீர்மானித்துள் ளோம்- இவ்வாறு தெரிவித் துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன்.
யாழ்.பொதுநூலக வளாகத்தில் உள்ள மாகாண சபைக் கட்ட டத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-
"வட பகுதியில் பெரும் பிரச்சி னையாக உருவெடுத்துள்ளது காணிப் பிரச்சினை. இடம் பெயர்ந்த மக்கள் தங்களின் இடங்கள் தெரியாமல் வேறு இடங்களில் சென்று குடியே றுகின்றனர். அதேவேளை அரச தரப்பினரும் மக்களை குடியேற்றுகின்றனர். அதனால் ஏற்பட்டுள்ள காணிப் பிரச் சினை நீண்டு கொண்டே செல்கின்றது.
அதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணி களுக்கு சென்று மீள்குடியேறி வாழ முடியாத நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு ஒரு காணிக்கு இரண்டுமூன்று பேர் உரிமை கோரும் போது யாருக்கு அந்தக்காணி சொந் தம் என்பதில் பிரச்சினை எழு கின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப் பத்தில் காணிகள் எவ்வாறு பகி ரப்படுகின்றன என்பது தொடர் பாகமாகாணகாணிஆணையா ளர் விளக்கமளித்துள்ளார். ஆயினும்காணிப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வில்லை.
வடக்கிலுள்ள அரசகாணிகளை யார் குத்தகைக்கு கொடுக்க முடியும்? மத்திய அரசுக்கா. மாகாண சபைக்கா அந்த அதிகாரம் உள்ளது என்பது குறித்து நீதிமன்ற தீர்ப்புகளும் உள்ளதால் அவைகளும் கருத்தில் எடுக்கப்படவேண்டி யுள்ளது.
தீர்வுகள் எட்டப்பட முடியாத காணிப் பிரச்சினைகள் தொடர் பில் நீதிமன்றங்களின் ஊடாக தீர்வு காண்பது என்று தீர் மானித்துள்ளோம்."- என்று தெரிவித்தார். (ற-5)

# உரிய தகுதிகளின் அடிப்படையிலேயே பதில் தொழிலாளருக்கு நியமனம்

## யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் தெரிவிப்பு



பதில் தொழிலாளி ஒருவருக்கு மாநகரசபை ஆணையாளர் நியமனக் கடிதம் வழங்கியபோது...

யாழ்ப்பாணம்.ஏப்.29
உரிய தகுதிகளின் அடிப்படை யில் நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட் டுள்ளது. இதில் கட்சி பேதங் கள் எதுவும் பார்க்கப்பட வில்லை. இதனுடாக நியம னம் பெற்றவர்கள் நிரந்தர மாக வாழ்வாதாரத்தை நிறை வேற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று யாழ். மாநகர சபையின் ஆணை யாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையில் பதில் தொழிலாளர்களாகக் கடமை யாற்றிய தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று சபையின் கேட் போர் கூடத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வின் போது உரை யாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில்:
யாழ்.மாநகர சபையில் பத விகளுக்கு வெற்றிடம் ஏற் படும்போது சபை உறுப்பினர் களின் பரிந்துரையின் அடிப் படையில் தகுதியானவர்களை தெரிவு செய்யலாம். இது மரபு ரீதியாக நீண்ட காலமாக உள்ள நடைமுறை. இவற் றில் கட்சி வேறுபாடு காட்டப் படுவதில்லை. உறுப்பினர்கள் தமக்குத் தெரிந்தவர்களை தற் காலிக உத்தியோகத்தர்களில் திறமையாக வேலை செய் பவர்களை பரிந்துரை செய்ய லாம். தற்காலிக தொழிலா ளர்கள் நிரந்தர தொழிலாளர் களைவிட நன்கு வேலை செய்பவர்களாக இருப்பர்.
போரின் பின்னர் விசேட தேவைகள் சபைக்கு ஏற் பட் டன. சபை இயங்காமல் இருந் ததால் வேலையின் அளவு அதிகமாக இருந்தது. பெண் தொழிலாளர்களுக்கான பொருத் தமான வேலைகள் குறை வாகவும் இருந்தது. இந்த நிலையில் இழுபறியில் நிய மனம் வழங்கப்படாமல் இருந் தது. இதனால் ஆணையாளர் களுக்கும் உறுப்பினர்களுக் கும் இடையில் நியமனம் வழங்குவது தொடர்பில் விவாதம் இருந்தது. எனினும் சபையின் சட்டங்களுக்கு அமைவாக திறமையான தகுதியுடைய வரை நியமனத்துக்கு தெரிவு செய்ய வேண்டி இருப்பதால் நேர் முகத்தேர்வு வைக்கப்பட்டது.
இதன் அடிப் படையில் மாநகர சபையில் வேலை செய்தவர் களுக்கு நேர்முகத்தேர்வின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, நாடாளு மன்ற உறுப்பினர்சில்வேஸ்திரி அலன்ரின், மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ் வரி பற்குணராஜா மற்றும் சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
இதில் வேலைத்தொழிலாளி 72 பேருக்கும், மேசன் தொழி லாளி 3 பேருக்கும், தச்சுத் தொழிலாளி ஒருவருக்கும், நகர மண்டபக்காப்பாளர் 4 பேருக்கும், மெக்கானிக் ஒருவ ருக்கும்,இயந்திர இயக்குநர் 2பேருக்கும், சாரதி 4 பேருக் கும் என 87 பேருக்கு நிய மனம் வழங்கப்பட்டது.
ஏனைய சுகாதாரத் தொழிலா ளர்கள் 56 பேருக்கும், வேலைத் தொழிலாளர் 12 பேருக்கும் அடுத்தவாரம் நியமனம் வழங் கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-14)

# மர்மப்பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

**இரு தடவைகள் துப்புரவு செய் யப்பட்ட காணி யில் வளர்ந்திருந்த சம்புப் புற்களை மண் வெட்டியால் வெட்டும்போது இந்த மர்மப் பொருள் வெடித்ததாகக் கூறப்பட்டது.**

தென்மராட்சி, ஏப்.29
காணி துப்புரவு செய்வதில் ஈடு பட்டுக்கொண்டிருந்த குடும் பஸ்தர் ஒருவர் காணிக்குள் கிடந்த மர்மப்பொருளொன்று வெடித்ததில் படுகாயமடைந் தார்.
இந்தச் சம்பவம் நேற்று கிளா லியில் இடம்பெற்றது.
மீளக்குடியமர அனுமதிக்கப் பட்ட பின்னர் இரு தடவைகள் துப்புரவு செய்யப்பட்ட காணி யில் மீண்டும் வளர்ந்திருந்த சம்புப் புற்களை மண்வெட்டி யால் வெட்டும்போது இந்த மர்மப் பொருள் வெடித்ததாகக் கூறப்பட்டது.
அதே இடத்தைச் சேர்ந்த ஜெப நேசு எட்வேட் தவரத்தினம் (வயது-48) என்பவர் காய மடைந்த நிலையில் சாவ கச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
கடந்த வாரம் கிளாலிப் பகுதி யில் வெடிப்பொருள் அகற்றும் பணியில் ஈடுபட்ட படைச் சிப்பா யொருவர் குண்டு வெடித்ததில் கண்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9-115)

# மே தினப் பேரணி

யாழ்ப்பாணம். ஏப்.29
புதிய ஜனநாயக மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சியின் புரட்சி கர மே தினக்கூட்டம் நாளை மறுதினம் முதலாம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பா ணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த மேதினத்துக்கான பேரணி அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆரம்பமா கும். கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர் காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேள் உட்படப் பலர் உரையாற்று வார்கள். (ஓ-173)

# இழுபறியில் இருந்த மாநகரசபை பதில் தொழிலாளர் நியமனம் முடிவுக்கு

**தொழிலாளர்கள் தொழில் இழந்த நிலையில் இந்த வருட ஆரம்பத்தில் இருந்தே பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.**

யாழ்ப்பாணம்.ஏப்.29
யாழ்.மாநகர சபையில் வரு டக்கணக்கில் இழுபறியில் இருந்துவந்த பதில் தொழி லா ளர்களின் நிரந்தர நிய மனப் பிரச்சினைக்கு நேற்று தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது.
நியமனம் பெற்றவர்கள் அரசி யல் தலைவர்களினதும். அரச அதிகாரிகளினதும் கால்களில் விழுந்து தமது நன்றியை தெரிவித்ததுடன் அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.
யாழ்.மாநகர சபையின் பதில் தொழிலாளர்களாகக் கடமை யாற்றிவந்த தொழிலாளர்க ளுக்கு பல வருடங்கள் ஆகியும் நிரந்தர நியமனம் வழங்காமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது. எனினும் பாதிப்படைந்த தொழி லாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர். இந்தநிலை யில் சபையின் சட்டம் மற்றும் அரசியல் காரணங்கள் கூறப் பட்டு நியமனம் வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளர் கள் தொழில் இழந்த நிலை யில் பல்வேறு பிரச்சினைகளை இந்த வருட ஆரம்பத்தில் இருந்தே எதிர்கொண்டனர்.
இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் நியமனம் வழங்கப் படும் எனும் உறுதி மொழிக் கடிதம் மாநகர சபையால் தொழிலாளர்களுக்கு வழங் கப்பட்டது. அதனையடுத்து நேற்று 87 தொழிலாளர் களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
நிரந்தர நியமனம் கிடைக்கப் பெற்றதால் தொழிலாளர்கள் மன மகிழ்வும் திருப்தியும் அடைந்தனர்.
எனினும் நியமனம் கிடைக்கப் பெறாத தொழிலாளர்கள் மண் டபத்துக்கு வெளியே நீண்ட நேரம் காத்திருந்தனர். (வ-14)

# கால்நடை வளர்ப்பை ஊக்குவித்து புரதத் தேவையை நிறைவு செய்யும் திட்டம்

## கிளிநொச்சியில் 'ஜெய்க்கா' நிறுவனம் முன்னெடுப்பு



கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றபோது

கிளிநொச்சி, ஏப்.29
கிளிநொச்சி மாவட்டத்தில் கால் நடை வளர்ப்பை ஊக்கு வித்து புரத உணவுத் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் ஜப்பான் 'ஜெய்க்கா' நிறுவனத் தினர் இரண்டு வருட செயற் றிட்டத்தை மேற்கொள்ளவுள் ளனர்.
வேள்ட் விஷன் நிறுவன அனு சரணையுடன் மேற்கொள்ள வுள்ள இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த 30 சமூக வலு வாளர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வர னின் ஏற்பாட்டில் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ் வரன் தலைமையில் நடை பெற்றது.
இந்தத் திட்டம் 4 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# ஓட்டோவில் அறிவித்து அரச வேலை வழங்கும் ஆச்சரியமான நாடு இலங்கை மட்டும்தான்

## இராணுவ ஆள்சேர்ப்பு விவகாரம் குறித்து நேற்று சபையில் காரசாரம்

தி.அமுதன்

உலகிலேயே ஓட்டோவில் அறிவிப்புச் செய்து அரச வேலை வாய்ப்பு வழங்கும் ஒரே நாடு இலங்கை மாத்தி ரமே என்று இராணுவத்திற்கான முறையற்ற ஆள்சேர்ப்பை கடுமையாகச் சாடிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கில் இராணுவத் தலையீடு தொடர்பில் கண்டனக் குரல்களையும் எழுப்பினர்.

இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவராக நேற்றைய அமர்வுக்கு வந்திருந்த சி.தவராசா அடிக்கடி சபை ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி ஆளுங்கட்சி உறுப்பினர்களின் வாய்க்கு நல்ல தீனி போட்டு விட்டதால், சபை அமர்வுகள் கொஞ்சம் காரசார மாக நடந்ததுடன், அரசியலமைப்பை எரிப்போம் என்கின்ற வரைக்கும் அந்தக் காரசாரம் சென்றது.

### பிரேரணைகளின் சபை

வடக்கு மாகாணசபையின் எட்டாவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு அமர்வு ஆரம்பமானது. பிரேரணைக்கான கட்டுப்பாடுகள் அவைத் தலைவரால் விதிக்கப்பட்டது. வடக்கு மாகாணசபை பிரேரணைகளின் சபை என்று நக்கலாகச் சொல்லப்படுவதையும் சுட்டிக்காட்டிய அவைத் தலைவர் ஓர் அமர்வில் 15 பிரேரணைகள் தான் எடுக்கப்படும் என்றார். அத்துடன் உறுப்பினர்கள் தங்கள் பாதுகாப்புத் தொடர்பில் தமது பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

வடக்கு முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரை வரவேற்று உரையாற்றியதுடன் கமலேந்திரனை அவரது கட்சியே குற்றவாளி என்று தீர்மானித்து விட்டதாகத் தெரிவித்து அதற்காக வருத்தமும் தெரிவித்தார். அத்துடன் தவராசா வடக்கு மாகாணசபைக்கு வந்தமையால் இனி அமர்வுகள் காரசாரமாக இருக்கும் என்றும் தெரிவித்தார். இதன் பின்னர் அமைச்சர் ஐங்கரநேசனினால் இரணைமடுக் குளம் தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் விளக்கம் கேட்க எழுந்த எதிர்க்கட்சித் தலைவரை, கன்னியுரையாற்றுமாறு அவைத் தலைவர் பணித்து விட்டார்.

அவரும் தனது கன்னியுரையை தனது அரசியல்கட்சியின்பால் நின்று நிகழ்த்தினார். பழைய பத்திரிகைகளையும் தனது உரைக்கு ஆதாரங்களாகக் கொண்டு வந்து அவையில் சமர்ப்பித்தார். அவரது உரை ஒரு தாளில் என்றால் அதற்கான ஆதாரங்கள் ஐந்தாறு பக்கங்களில் இருந்தன. அவரது உரையில் வடக்கு மாகாண சபையின் தவறுகளைச் சுட்டிக்காட்டினார். தமிழ்மொழியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட் டுப்போராடி விட்டு, வடக்கு மாகாண பேரவைச் செயலகமே தனி ஆங்கில மொழியில் கடிதம் அனுப்புவதையும் சுட்டிக்காட்டினார்.

தவராசா உரையாற்றிக் கொண்டிருக்கும் போது வழமை போன்று ஆளுங்கட்சி உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் வீறு கொண்டெழுந்தார். அவர் பேச முற்படவே, எதிர்க்கட்சித் தலைவர் இது முறையல்ல. ஒருவர் பேசும் போது மற்றவர் குறுக்கிடக்கூடாது என்று காட்டமாகத் தெரிவித்தார். அத்துடன் அவைத் தலைவரிடம் முறையிட்டார். அதன் பின்னர் சிவாஜிலிங்கம் அமர்ந்து விட்டார். ஆனாலும் தவராசாவின் உரை ஆளுங்கட்சி உறுப்பினர்களை கொதிப்படையச் செய்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் கடும் சிரமத்தின் மத்தியிலும் தவராசாவின் உரைக்கு குறுக்கீடு செய்யாமல் தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருந்தனர்.

### முதலமைச்சருக்கும் கண்டிப்பு

தவராசா தனதுரையில் முதலமைச்சர் அண்மையில் ஆசிரியர்களை தறுதலை என்று பேசியது தொடர்பில் பிரஸ்தாபித்தார். போர்க் கால சூழ்நிலையில் இங்குள்ள ஆசிரியர்கள் வெளிநாடு, கொழும்பு என்று ஓடிவிட மாணவர்களுக்கு தொண்டர்களாக கற்பித்தவர்களையே நாம் தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்கியிருந்தோம். அவ்வாறு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் நானும் பங்கெடுத்திருந்தேன் என்றும் தவராசா தெரிவித்திருந்தார். அத்துடன் முதலமைச்சர் தனது உரைகளில் சொல்லும் குற்றச்சாட்டுக்களை எல்லாம் கண்டித்திருந்தார்.

அவரது உரை எப்போது முடியும், எப்போது பதிலடி கொடுக்கலாம் என்று காத்திருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தவராசாவின் உரைக்கு கடுமையான பதிலடி கொடுத்தனர். முதலில் எழுந்த சிவாஜிலிங்கம், கன்னியுரை என்ற போர்வையில் அரசியல் நிகழ்த்தியிருக்கின்றார் என்றார். அத்துடன் முதலமைச்சர் தறுதலைகள் என்று தொண்டர் ஆசிரியர்களைச் சொல்லவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், நீங்கள் ஏன் அவர்களுடன் கோர்த்து விடுகின்றீர்கள் என்று பதில் கேள்வியையும் கேட்டார். அத்துடன் நீங்கள் இவ்வாறு சொல்வது ஏதோவொரு அரசியல் நோக்கம் கருதியதாக இருக்கின்றது என்றும் சிவாஜிலிங்கம் கருத்துரைத்தார்.

### நிதி மோசடி செய்தவர்கள் ஈ.பி.டி.பியினரே

அத்துடன் வெளிநாட்டு நிதியில் ரான் அமைப்பின் கோடிக் கணக்கான பணத்தை ஈ.பி.டி.பியே நிதி மோசடி செய்தது என்று அவையில் புதியதொரு தகவலை போட்டுடைத்தார் சிவாஜி. அத்துடன் முல்லைத்தீவு மக்கள் இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்த போது விட்டுச் சென்ற படகைக் கூட படையினர் ஈ.பி.டி.பியின் அமைப்பாளரிடம் கையளித்துள்ளனர். அதனை நீங்கள் மக்களிடம் கையளிக்கவில்லையே என்று குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநரை சனியன் என்று விளித்துப் பேசிய உறுப்பினர், அந்தச் சனியன் இந்த ஜூன் மாதத்துடன் போய்த் தொலையட்டும் என்றார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்றுமே பிரிக்கப்பட முடியாத வடக்கு - கிழக்கு என்று சொன்னவர்கள் இன்று இணக்க அரசியல் மாத்திரமே நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்று ஈ.பி.டி.பியைச் சாடினார் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்.

### ஒழுங்குப் பிரச்சினையால் சூடான சபை

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைக்குச் சென்று படிப்பிக்காதவர்களுக்கும் தொண்டர் ஆசிரியர்களாக இருந்தார்கள் என்று சொல்லி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது என்று உண்மையைப் போட்டுடைத்தார். இதன் பின்னர் அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை சீராக இயங்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சித் தலைவர், அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் இராணுவத்தினர் இருப்பதை ஏற்றுக்கொண்டு அவர்களை வெளியேற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று இடக்குமுடக்கான கேள்வியை கேட்டார். பதிலை தயார்பண்ணிக் கொண்டு வராத எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, நான் கன்னியுரை நிகழ்த்தினால் அதில் நீங்கள் கேள்வி கேட்கலாமா ? இதுதான் சபை. ஒழுங்கா என்று ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பினார். இந்த விவாத்துடன் முதல் பாதி நேரம் முடிவுக்கு வர தேநீர் இடைவேளை விடுக்கப்பட்டது. அதன் பின்னர் மீளவும் விவாதம் தொடங்கியது.

### சமாளிக்கப்பட்ட பிரச்சினை

வடக்கின் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கும் விடயத்தை ஆளுங்கட்சி உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார். பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கடந்த 50 தினங்களாக பகிஷ்கரிப்பில் இருப்பதைச் சுட்டிக்காட்டி அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சுகாதார அமைச்சர் மீதும் முதலமைச்சர் மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பின்னர் தேசிய கீத விடயத்தில் அடுத்த சர்ச்சை பூதாகரமாக வெடித்தது. பாடசாலை நிகழ்வில் இராணுவத்தினரை கட்டாயம் அழைக்க வேண்டியிருக்கின்றது. அவ்வாறு வரும் இராணுவத்தினர் சிங்களத்தில் தேசிய கீதத்தை பாட நிர்பந்திக்கின்றார்கள். இந்த விடயத்தை பா.அரியரத்தினம் சுட்டிக்காட்டிய போது, எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், ஏன் இராணுவத்தை அழைக்க வேண்டும் என்று சின்னப்பிள்ளைத்தனமான கேள்வியைக் கேட்டார்.

### இராணுவத்துக்குப் பயமா ?

நடைமுறை யதார்த்தத்தை உணர்ந்து கதையுங்கள். இராணுவத்தை அழைக்க வேண்டியது கட்டாயம். அவ்வாறு அவர்களை அழைக்காது விட்டால் அந்த நிகழ்வை ஒழுங்கமைப்பவர்களுக்கு பிரச்சினை வரும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்க, ரிப்கான் பதியுதீன் மீண்டும் இராணுவத்துக்குப் பயமா என்று மீண்டும் சிறுபிள்ளைத்தனமாகவே கேட்டார். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவரின் கதையை ஒரு கட்டத்துக் மேல் கணக்கில் எடுக்காமல் தமது விடயத்தை நகர்த்தினர்.

இலங்கையின் எந்தப் பாகத்திலும் தமிழில் தேசிய கீதம் பாடலாம் என்று அரசியலமைப்புச் சொல்வதாக அவைத் தலைவர் தெரிவித்தார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆவேசமாக, நாங்கள் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தை எரித்துக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்றார். அவைத் தலைவர் உடனடியாகவே இதனை ஹன்சாட்டிலிருந்து நீக்குவதாகத் தெரிவித்தார்.

### கொடிகாமம் சிங்களப் பெயர்!

இதன் போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்கவில்லை என்றால், உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்யாமல் விட்டிருக்கலாமே என்று சிவாஜிலிங்கத்துக்கு கடி போட்டார். இதன் பின்னர் சர்வேஸ்வரனின் பிரேரணையில் ஊர்களின் பெயர்கள் தமிழில் மாற்றப்பட வேண்டும் என்பது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் கொடிகாமம் என்ற பெயர் கூட சிங்களப் பெயரிலிருந்து வந்ததென்ற குண்டைத் தூக்கிப் போட்டார். சபையின் உறுப்பினர்கள் உண்மையில் ஆடிப் போய்த்தான் விட்டார்கள்.

இதன் பின்னர் எழுந்த அஸ்மின், அவையை அவைத் தலைவருக்கு நடத்த தெரியும். இவ்வளவு காலம் அவை நடவடிக்கைகள் நடந்ததுதானே. இந்த அவையை தரக்குறைவான வார்த்தை பாவித்து பேசியதற்காக தவராசா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருக்க, அவைத் தலைவர் அதைப்பற்றி அக்கறை கொள்ளாமல் அடுத்த விடயத்துக்குத் தாவினார்.

### இணங்கிப் போன முதல்வர்

இதன் பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர் பரஞ்சோதியினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் எதிர்கட்சித் தலைவர் திருத்தம் சொன்னார். அதை ஏற்ற முதலமைச்சர் அவருடன் இணங்கிப் போய் அந்தத் திருத்ததுக்கு அமைவாக பிரேரணையை நிறைவேற்றினார்.

இதன் பின்னர் இராணுவத்துக்கான முறையற்ற ஆள்சேர்ப்பு தொடர்பிலான பிரேரணையில் கடுமையான விவாதங்கள் இடம்பெற்றன. இதன் போது உரையாற்றிய பிரதி அவைத் தலைவர், இராணுவம் அழகான பொம்பிளைப் பிள்ளைகளைத்தான் எடுக்கிறாங்கள் என்று நக்கலாகச் சொல்ல வார்த்தைப் போர்களால் சூடாகியிருந்த அவையில் மெல்ல சிரிப்பொலியும் கேட்டது. அத்துடன் உறுப்பினர் சுகிர்தன், அரச வேலையை ஓட்டோவில அறிவிச்சு கொடுக்கிற முதல் நாடு இலங்கையாகத் தான் இருக்கும் என்று தெரிவித்தார்.

அடுத்த அமர்வு எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி இடம்பெறும் என்று அவைத் தலைவர் தெரிவித்தார்.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **கனகசபை காலிங்கராஜா**

(சின்னமணி)

மண் மகிழ - 20. 01. 1933 விண் தழுவ - 10. 05. 2013

ஓர் ஆண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷசம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

இணுவில் தெற்கு.

(47462)



தண்ணீர் குட்டையைத் தேடிச் செல்லும் மாடு

## மக்களும் கால்நடைகளும் நீருக்காக அலையும் நிலை

கொழும்புத்துறை, ஏப்.29
தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலையால் யாழ். மாவட்டத்திலுள்ள நீர்நிலைகள், கிணறுகள் என்பவை வற்றி வருவதால் மக்களும், கால்நடைகளும் நீரைப் பெறுவதற்காக பல்வேறு இடங்களையும் நாடி அலையும் நிலை காணப்படுகிறது.

சில இடங்களில் கிணறுகளில் உள்ள சிறிதளவு நீர் மக்கள் அள்ளியவுடன் வற்றிவிடுவதால் ஏனையோர் நீர் மீண்டும் ஊறும் வரை காத்திருந்து நீரைப் பெறவேண்டியுள்ளது.

பெரும்பாலான குளங்கள் துரிதமாக வற்றி வருவதால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக குளங்கள் மாறி வருகின்றன.

தீவகப் பகுதிக் குளங்களில் நீர் முற்றாக வற்றிய நிலையில் பட்டிமாடுகள், கட்டாக்காலி கால்நடைகள் நீருக்காக அலைந்து திரிவதைக் காண முடிகிறது.

கடந்த வருடம் மழை குறைவடைந்தமையும் இந்த வருடம் சித்திரை மழை இன்னமும் ஆரம்பிக்காமையும் நீர்நிலைகள் விரைவாக வற்றி வருவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதேவேளை பெரும்பாலான குளங்களின் தூர்வெடுத்து ஆழப்படுத்தும் பணிகள் பல தசாப்தங்களாக நடைபெறாமையால் நீர் சேகரிப்பின் கொள்ளளவும் குறைவடைந்தமையும் சுட்டிக்காட்டப்படுகிறது. (வ-135)

## கவனிப்பின்றி காணப்படும் கொழும்புத்துறை 'ஜெற்றி'




கொழும்புத்துறை, ஏப்.29
கொழும்புத்துறை துறைமுகம் (ஜெற்றி) சேதமடைந்த நிலையில் கவனிப்பாரின்றி மீன்பிடித் தொழில் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலபோர்ச்சூழ்நிலைக்கு முன்புவரை பயன்படுத்தப்பட்டு வந்த இந்தத் துறைமுகம் இராணுவ நடவடிக்கைகளினால் பெரிதும் சேதமடைந்திருந்ததை அடுத்து பயன்படுத்தப்படாதுள்ளது.

தற்போது மீன்பிடித் தொழிலாளர்கள் தமது வள்ளங்களை கடலில் குறிப்பிட்ட தூரத்துக் கப்பால் நிறுத்தி மீன் வலைகளை கரைக்கு தூக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

பல வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் துறைமுகத்தினூடாக அந்நாள்களில் கொழும்பு, வன்னிப் பகுதிகளுக்கான பயணங்களை மன்னர்களும், மக்களும் மேற்கொண்டு வந்தமை குறித்து வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னமாகிய துறைமுகத்தை புனரமைப்புச் செய்து பாதுகாப்பதோடு மீன்பிடித் தொழிலுக்கும் வசதியானதாக பயன்படுத்த இயலுமெனச் சுட்டிக்காட்டப்படுவதுடன் அதனைப் புனரமைத்துத் தருமாறு மீனவர்களால் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

# கணினி திருத்தப்படாததால் அலுவலகப் பணிகளில் தடங்கல்

### வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில்

வலி.தென்மேற்கு, ஏப்.29
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள கணினி எட்டு மாதங்களுக்கு மேலாகியும் திருத்தப்படாமல் இருப்பதால் வேலைகளில் தடங்கலும் தாமதமும் ஏற்பட்டுள் ளதுடன் பொதுமக்களும் வீண் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பிரதேச சபை உறுப்பினர் குமணன், அதிகாரிகளின் அசமந்தப்போக்கே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்குகின்றன.

இந்த உப அலுவலகங்களில் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திலுள்ள கணினி இயங்க முடியாதவாறு பழுதடைந்துள்ளதால் புதிய கணினி வழங்குவது குறித்து பிரதேச சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, புதிய கணினி வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை புதிய கணினி வாங்கப்படாமல் காலம் கடத்தப்படுவதால் நாளாந்த வேலைகளில் தடங்கலும் தாமதமும் ஏற்படுவதுடன் பொதுமக்களும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

இது குறித்து பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:
கணினியை வாங்குமாறு சம்பந்தப்பட்டவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் உடனடியாக வாங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கணினி வாங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:
பிரதேச சபையால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவது செயலாளரின் கடமையாகும்.
ஆனால் அவர் சபையுடன் ஒத்துழைக்காமல் தனித்து இயங்குவதால் இது போன்ற குறைபாடுகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (வ-115)



காரைநகர் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கலாசார கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பீ.ஏக்கநாயக்கவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (வ- 250)

## உடுவில் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம் திறப்பு

வலி.வடக்கு, ஏப் .29
உடுவில் பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலைய திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் கந்த ரோடையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசார மற்றும் கலை பண்பாட்டு அலு வல்கள் அமைச்சர் ரி.பீ.ஏக்க நாயக்க கலந்து கொள்வார். (வ-86)

## சாவகச்சேரி மருத்துவமனையில் 5 மருத்துவர்கள் கடமையில்

தென்மராட்சி, ஏப்.29
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் ஐந்து மருத்துவர்கள் கடமையாற்றுவதால் வெளிநோயாளர் பிரிவுக்குச் செல்லும் நோயாளர்கள் உடனுக்குடன் சிகிச்சை பெற முடிவதாக நோயாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் முதியோர்கள், குழந்தைகள், மாற்று வலுவுள்ளோர், மாணவர்கள் , படையினர் போன்றோருக்கு தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மருத்துவர் கடமையாற்றுவதால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவருவோர் உடனுக்குடன் சிகிச்சை பெற்று வெளியேறுகின்றனர். (வ-9)

# பலத்த போட்டிக்கு மத்தியில் புதிய இயக்குநர் சபை தெரிவு

### நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப்.29
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பலத்த போட்டியின் மத்தியில் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டது.

நேற்றுக்காலை சங்கத்தின் பொதுச்சபை, முன்னாள் சங்கத் தலைவரும் நல்லூர் பிரதேச செயலருமான செந்தில்நந்தனன் தலைமையில் கூடியது.

இந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் 99 பொதுச்சபை உறுப்பினர்களில் 97 உறுப்பினர்கள் சமுகம் கொடுத்திருந்தனர்.

புதிய இயக்குநர் சபைத் தெரிவுக்காக இரண்டு அணிகள் போட்டியிட்டன. அதை அடுத்து இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற ஏழு பேர் இயக்குநர்களாகத் தெரிவாகினார்கள்.

சங்கத்தின் புதிய தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பெ.கனகசபாபதியும் உபதலைவராக எஸ்.பத்மராசாவும் தெரிவாகினர்.

மற்றும் ஐந்து பேர் கொண்ட இயக்குநர் சபையும் தெரிவாகியது. (ஒ-17)

# நெடுந்தீவு மருத்துவமனையின் தேவைகளை நிறைவேற்றித் தருக

### மருத்துவ அதிகாரி வடக்கு சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.29
நெடுந்தீவு மருத்துவமனையின் நோயாளர் விடுதிக்கு புதிய கட்டில் மெத்தைகள், பற் சிகிச்சைப் பிரிவுக்கு புதிய இருக்கை வசதிகள், மருத்துவமனை அலுவலகத்துக்கு கணினி, புகைப் படப் பிரதி இயந்திரம் என்பன தேவையாகவுள்ளன.

எனவே அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு மருத்துவமனை மருத்துவ அதிகாரி திருமதி விமலினி, வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெடுந்தீவுக்குப் பயணம் செய்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நெடுந்தீவு மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து மருத்துவ அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

இதன்போது மருத்துவமனை அதிகாரி மருத்துவமனைக்கான புதிய பெயர்ப் பலகை, மழைநீர் சேகரிப்புத் தொட்டியைப் புனரமைத்தல், அவசர சிகிச்சைப் பிரிவு அறை புனரமைப்பு, மருந்தகத்துக்கு குளிர்சாதனப்பெட்டி, மருத்துவர் விடுதிக்கான தளபாடங்கள், மின்விசிறி வசதிகள், சமையலறை புனரமைப்பு மற்றும் உபகரணங்கள், சக்தி சேமிப்பு மின்குமிழ்கள், அவசர சிகிச்சைப் பிரிவுக்கான படுக்கைகள் என்பன உடனடித் தேவையாக உள்ளன. எனவே அவற்றை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை விஷக் கடிக்கான சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பவற்றை விரைவில் ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நெடுந்தீவு மக்களுக்கு உறுதியளித்தார்.

நெடுந்தீவில் விஷக்கடி சிகிச்சை இன்மை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளதாகவும் மருத்துவமனையில் இந்தச் சிகிச்சைக்கான வளங்கள் இன்மையால் விஷக் கடியால் பாதிக்கப்படுவோரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் விஷக்கடிக்கு இலக்கானவர் சில சமயங்களில் உயிரிழக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

நெடுந்தீவில் விஷப் பாம்புகள் அதிகமாக உள்ளதால் அனைத்து வசதிகளும் நிறைந்த விஷக்கடிச் சிகிச்சை நிலையம் அவசியம் என்று பொதுமக்களுடன் வைத்திய அதிகாரிகளும் எடுத்துக்கூறினர். அதையடுத்து இந்த விடயம் தொடர்பாக விரைந்து நடவ டிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரனும் இந்த நிகழ்வில் உடனிருந்தார். (வ-7)

## தீவிரவாதிகளுடன் மோதலில் தமிழக ராணுவ அதிகாரி சாவு

சென்னை,ஏப்.29
காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் நடந்த மோதலில் கொல்லப் பட்ட முகுந்த் வரதராஜனின் குடும்பத்தினருக்கு பத்து லட் சம் ரூபா வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் அறி வித்துள்ளார். அவரது உடல் இன்று இரவு சென்னைக்குக் கொண்டுவரப்படுகிறது.

தெற்கு காஷ்மீரின் சோபி யான் பகுதியில் இந்திய ராணு வத்துக்கும் தீவிரவாதிகளுக் கும் இடையில் கடந்த வெள் ளிக்கிழமையன்று இரவில் நடந்த மோதலில் 44ஆவது ராஷ்ட்ரிய ரைபிள்ஸ் பிரி வைச் சேர்ந்த மேஜர் முகுந்த் வரதராஜன் கொல்லப்பட்டார். இவருடன் வேறு ஒரு வீரரும் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலில் 3 தீவிரவாதி களும் கொல்லப்பட்டனர்.

அன்று காலையில் இடிக்கப் பட்ட கட்டடத்தின் இடிபாடு களில் ராணுவம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது, அந்த இடிபாடுகளில் ஒளிந்திருந்த ஒரு தீவிரவாதி சரமாரியாகச் சுட்டதில் முகுந்த் வரதராஜன் கடுமையாகக் காயமடைந்தார். ஸ்ரீநகரின் பதாமி பாகிலிருக்கும் மருத்து வமனைக்கு கொண்டு செல் லும் வழியில் அவர் உயிர் பிரிந்தது.

சென்னைக்கு அருகில் உள்ள சேலையூர் பகுதியைச் சேர்ந்த முகுந்த் வரதராஜன், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித் தவர்.

சென்னை அதிகாரிகள் பயிற்சி அக்கடமியில் 2004 ஆம் ஆண்டில் தனது ராணுவப் பயிற்சியைப் பெற்றவர்.

3ஆம் வகுப்புப் படிக்கும் போதி ருந்தே ராணுவத்தில் சேர வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்த முகுந்த், இத ழியலில் பட்டம் பெற்றவர். (கு)




லக்னோவில் நடைபெற்ற பிரசாரப் பேரணியில், வேட்பாளருடன் பா.ஜ.கவின் தலைவர் ராஜ்நாத் சிங் கலந்துகொண்டார். (கு)

## சோனியா மருமகன் வாங்கிக் குவித்த நிலப் பட்டியலை வெளியிட்டது பா.ஜ.க



சோனியா காந்தியின் மருமகன் றொபர்ட் வத்ரா மனைவி பிரியங்காவுடன்

புதுடில்லி, ஏப். 29
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகனான றொபர்ட் வத்ரா வாங்கி குவித்த நிலங்களின் பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் நேற்று முன்தினம் 6 பக்க புத்தகத் தையும் கூடவே காணொலி யையும் வெளியிட்டார்.

அதில் ராஜஸ்தான், ஹரி யானாவில் றொபர்ட் வத்ரா வாங்கிய நிலங்கள் குறித்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து பிரசாத் கூறுகை யில்; குஜராத் வளர்ச்சி குறித்து விமர்சிக்கும் பிரியங்கா காந்தி, தன்னுடைய கணவர் றொபர்ட் வத்ராவின் தனிப் பட்ட வளர்ச்சி குறித்து பதில் சொல்ல வேண்டும்.

ஹரியானா மற்றும் ராஜஸ் தான் மாநிலங்களில் நூற் றுக்கணக்கான ஏக்கர் நிலங் களை றொபர்ட் வத்ரா வாங் கியுள்ளார். காங்கிரஸ் ஆட்சி புரியும் மாநிலங்களில் மட்டும் றொபர்ட் வத்ரா நிலம் வாங் குவது ஏன்?

2 ஜி அலைக்கற்றை விவ காரத்தில் எவ்வாறு ப.சிதம் பரம் காப்பாற்றப்பட்டாரோ, ரயில்வே ஊழல் வழக்கில் எவ்வாறு பவன்குமார் பன் சால் காப்பாற்றப்பட்டாரோ, நிலக்கரி ஊழல் வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங் எவ்வாறு காப்பாற்றப்பட்டு வரு கிறாரோ, அதேபோல் றொபர்ட் வத்ராவையும் காப் பாற்ற முயற்சிநடைபெற்றுவருகிறது.

மேலும் வத்ரா நிலம் வாங்கி யதில் விதிமுறைகள் மிகப் பெரிய அளவில் மீறப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளார். (கு)

# மோடியின் பேச்சில் கண்ணியம் இல்லை

## ராகுல் சரமாரி தாக்குதல்



ராகுல் காந்தி

புதுடில்லி, ஏப்.29
பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி, எதிரணித் தலைவர்களை விமர்சித்துப் பேசும்போது கண்ணியத் தைக் கடைப்பிடிப்பதில்லை என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கடு மையாகச் சாடினார்.

காங்கிரஸ் துணைத் தலை வர் ராகுல் காந்தி நேற்று பஞ் சாப் மாநிலத்தில் தமது கட்சி வேட்பாளர்மன்ப்ரீத்சிங்படாலை ஆதரித்து பிரசாரம் மேற்கொண் டபோது பேசியதாவது:-

பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, 'குஜராத் மாதிரி என்பதற்கான பெருமை களை அவரே பெற்றுக் கொள்ள நினைக்கிறார்.

அதேபோல, ஊழல் விவகாரத் திலும் அவர் இரட்டை வேடம் போடுகிறார். அவர் எதிரணித் தலைவர்களை தொடர்ந்து கண்ணியம் இல்லாமல் விமர்சித்து வருகிறார்.

நீங்களே (மக்கள்) குஜராத் முதல்வரின் பேச்சைப் பாருங் கள். என்னுடைய பேச்சை யும் பாருங்கள். சோனியா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களின் பேச்சையும் பாருங்கள். எங்களின் பேச் சில் அன்பும், மதிப்பும் மட்டுமே நிறைந்துள்ளன. நீங்கள் தேர்வு செய்து அனுப்பியவர் தான் பிரதமர் மன்மோகன் சிங், கடந்த 10 ஆண்டுகளில் அவருடைய பேச்சைக் கேட்டு இருப்பீர்கள். நாங்கள் ஒரு போதும் வெறுப்புத் தன்மையு டன் பேசுவதே இல்லை.

ஆனால், பா.ஜ.கவின் பிரத மர் வேட்பாளர் மோடி உள்ளிட்ட அக்கட்சியின் தலை வர்கள் பேச்சில் எப்போதும் கண்ணியம் இருந்ததில்லை. அவர்களால் நன்றாக பேசவும் முடியாது. மக்களுக்கு நன்மை செய்யவும் முடியாது.

பா.ஜ.கவினர் தொடர்ந்து மோடியை மட்டும் முன்னிறுத் துகின்றனர். அவர்கள் கடந்த 60 ஆண்டுகளாக குஜராத்தில் எந்தவித வளர்ச்சியும் ஏற்படா தது போன்ற ஒரு பிம்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

குஜராத் மற்றும் பஞ்சாப் மக்கள் உழைப்புக்கு பெயர் போனவர்கள். ஆனால் இந்த நாட்டு மக்கள் கடந்த 60 ஆண்டுகளாக எதுவுமே செய் யாதது போலவும், மோடிதான் அந்த மாநிலத்தையே முன் னேற்றியதாகவும் பேசுகின் றனர்.

நாங்கள் ஏழைகளின் பிள் ளைகள் தொழிலதிபர்களாக வும், விவசாயிகளின் பிள்ளை கள் விமானிகளாகவும் பறக்க வேண்டும்என்றுதான் ஆசைப் படு கிறோம். இந்தியாவில் உள்ள அனைத்து மக்களின் கனவும் நிறைவேற ஆசைப் படுகி றோமே தவிர, சில தொழில திபர்கள் மட்டுமே வளர்ச்சி பெறவிரும்பவில்லை என் றார் ராகுல். (கு)

# ஜெயா,சசிகலா மீதான வழக்கு ஒத்திவைப்பு



ஜெயலலிதாவுடன் சசிகலா

சென்னை,ஏப். 29
தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரு டைய தோழி சசிகலா மீதான வருமானவரிக் கணக்கை தாக்கல் செய்யாதமை தொடர் பான வழக்கு மே 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

இவர்கள் இருவரும் எப்போது நேரில்முன்னிலையாகவேண் டும் என்பது அன்றைய தினம் முடிவு செய்யப்படும் என சென்னை பெருநகர குற்றவி யல் நீதிமன்ற நீதிபதி தட் சிணாமூர்த்தி தெரிவித்தார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா 1993-1994 ஆம் ஆண்டில் ...ருமானம் குறித்த ... வருமான வரித் துறைக்கு சமர்ப்பிக்கவில்லை என வருமான வரித் துறை யால் 1996 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்டது.

அதற்குப் பிறகு 93-94 ஆம் ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என சசிகலா மீதும் 1997ல் வருமான வரித் துறை வழக்குத் தொடர்ந்தது.

அதேபோல, 91-92, 92-93 ஆகிய ஆண்டுகளில் சசி எண் டர்பிரைசும் அதன் பங்கு தாரர்களான ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோரும் வருமான வரிக்கணக்கைத் தாக்கல்செய்யவில்லை எனக் கூறி, 1997 இல் மேலும் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது வருமானவரித் துறை.

இந்த வழக்குகளைத் தள்ளு படி செய்யவேண்டுமெனக் கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய் யப்பட்ட மனுக்கள் 2006இல் நிராகரிக்கப்பட்டன. பிறகு, உச்ச நீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம் நான்கு மாதங் களுக்குள் விசாரணையை முடிக்கும்படி பெருநகர நீதி மன்றத்திற்கு கடந்த ஜனவரி 30 ஆம் திகதியன்று உத்தர விட்டது.

சென்னைப் பெருநகர குற்ற வியல் நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கு தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு, ஏப்ரல் 10ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழகத் தில் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு முடியும்வரை, வழக்கைஒத்திவைக்கவேண்டு மென ஜெயலலிதா தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கு, ஏப்ரல் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையில், வழக்கை முடிப்பதற்கு வழங்கப்பட்ட மூன்று மாத கால அவகாசம் போதாது எனக் கூறி, உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பில் மேலும் கால அவகா சம் பெறப்பட்டது. அந்த உத் தரவை நேற்று நீதிமன்றத் தில் சமர்ப்பித்த ஜெயலலிதா தரப்பினர், தேர்தல் நடை முறைகள் முடியும் வரை வழக்கை ஒத்திவைக்கும்படி கோரினர். அதன்படி வழக்கு மே 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. முதல்வர் ஜெயலலிதா வும் அவரது தோழி சசி கலாவும் எப்போது நேரில் முன்னிலையாக வேண்டு மென்பது அப்போது முடிவு செய்யப்படும் என நீதிபதி தட் சிணாமூர்த்தி தெரி வித்தார். (கு)

## விற்பனையில் களை கட்டும் இளவரசர் ஜோர்ஜின் ஆடை




லண்டன்.ஏப் 29

இளவரசர் ஜோர்ஜ் மேற்கொண்ட சுற்றுபயணத்தில் அணிந்த உடைகள் மிகவும் விறுவிறுப்பாக விற்பனையாகி வருகின்றன.

இளவரசர் ஜோர்ஜ் தனது பெற்றோருடன் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு 19 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

சுற்றுப்பயணத்தில் அனைவரின் கண்களும் கேட் உடைகளின் மேல் இருந்தாலும், வித விதமான ஆடைகளை அணிந்து அசத்தியவர் குட்டி இளவரசர் ஜோர்ஜ் தான்.

இளவரசர் ஜோர்ஜ் சிட்னி விமானம் நிலையத்தில் இறங்கும் போது அணிந்திருந்த உடை மிக அதிகமாக விற்பனையாகிவருகிறது எனத் தெரியவந்துள்ளது.

மேலும் நியூஸிலாந்தில் குழந்தைகளுடன் விளையாடும் போது அணிந்திருந்த நீல வண்ண உடையும் விற்பனையில் களைகட்டியுள்ளது. (கு)

## விமானத் தேடுதல் புதிதொரு கட்டத்தில்

### ஆஸி. பிரதமர் கூறுகிறார்

கான்பரா.ஏப் 29


காணாமல் போன மலேசிய விமானத்தைத் தேடும் பணி புதிய கட்டத்தை அடைந்துள்ளது என்று கூறுகிறார் ஆஸ்திரேலியப் பிரதமர் ரோனி அபாட்.

அந்த விமானத்தின் சிதிலங்கள் இனியும் இந்தியப் பெருங்கடலின் மேற்பரப்பில் கிடைக்கும் என்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் நீருக்கு அடியிலான தேடுதல் பணி மேலும் பரந்த அளவிலான பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக நீருக்கு அடியில் தேடும் நடவடிக்கைகளுக்கு ப்ளூபின் வகை நீர்மூழ்கி இயந்திரம் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்றாலும், சோனார் ஸ்கான் வழியில் தேடுதலை முன்னெடுக்கும் பணி வர்த்தக ரீதியில் ஒப்பந்த அடிப்படையில் இதில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் என ஆஸ்திரேலியப் பிரதமர் கூறுகிறார்.

காணாமல் போன விமானத்தை தேடும் நடவடிக்கை பல மாதங்கள் தொடரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கு)



அமெரிக்காவின் மத்திய மற்றும் தென் பிராந்தியங்களில் ஏற்பட்ட கடும் சூறாவளி காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். ஆர்கஸ் மாநிலத்தில் அமைந்துள்ள லிட்டில் ரொக் புறநகர் பகுதியில் 11 பேர் பலியானதுடன் ஒக்லாமா மாகாணத்தின் வட கிழக்கு நகரத்தில் கட்டட இடிபாடுகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கடும் காற்று காரணமாக 50 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (கு)

## மலேசிய எதிர்க்கட்சிகளை சந்திக்கவில்லை ஒபாமா

### அவை கடும் சீற்றத்தில்

கோலாலம்பூர்.ஏப் 29

மலேசியாவுக்குப் பயணம் செய்த அமெரிக்க அதிபர் ஒபாமா தங்களைச் சந்திக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் குறை கூறியுள்ளன.

அதேபோலமலேசியாவில்மனித உரிமைகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை ஒபாமா ஆதரித்துள்ளதையும் எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

எந்தவொரு நாட்டுக்கு அமெரிக்க அதிபர் சென்றாலும், அரச தரப்பினரை சந்திக்கும் அதே வேளை எதிர்கட்சியினரையும் சந்தித்து பேசுவது மரபு என்றும், ஆனால் மலேசியாவில் அது கடைபிடிக்கப்படவில்லை என்றுஒருஎதிர்க்கட்சியானஜனநாயகசெயல்கட்சியின்துணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம் குலசேகரன் தெரிவித்தார்.

தமது நாட்டில் எதிர்கட்சி உறுப்பினர்களை அமெரிக்க அதிபர் ஒபாமா சந்திக்காதது தங்களுக்கு வருத்தமும், அதிர்ச்சியையும் அளிக்கிறது என்று அவர் கூறுகிறார்.

அவரது வருகைகூட எதிர்கட்சிகளுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும், அவர்கள் ஊடகங்களின் வாயிலாகவே இதை அறிந்துகொண்டனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

நாடாளுமன்ற வளாகத்தில் அமெரிக்க அதிபர் உறுப்பினர்களைச் சந்திக்கும்போது ஆளும் கட்சியினருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டது எனவும் எதிர்கட்சியினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் குலசேகரன் கூறுகிறார்.

ஒபாமாவைச் சந்திக்க நேரம் கோரி தாங்கள் கோலாலம்பூரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திடம் நேரம் கேட்டிருந்ததாகவும், அதுவும் வழங்கப்படவில்லைஎன்றும்அவர்மேலும் தெரிவித்தார்.

எனினும் நாட்டில் நிலவும் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில், உரிய தகவல்கள் ஆவணங்கள் ஆகியவற்றை, அமெரிக்க அதிபரின் பார்வைக்கு அந்நாட்டு தூதரகம் மூலமாக அனுப்பிவைக்கப்படும் எனவும் ஒரு முக்கிய எதிர்கட்சியான ஜனநாயக செயல்கட்சியின் துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம் குலசேகரன் கூறுகிறார். (கு)

# பராக் ஒபாமா ஒரு 'புரோக்கர்' தென்கொரிய அதிபர் விபச்சாரி

## பட்டம் கொடுத்தது வடகொரியா

பியோங்யாங்,ஏப் 29

ஒபாமா ஒரு புரோக்கர் என்று வடகொரியா கடுமையான வார்த்தைகளால் தாக்கியுள்ளது.

தென் கொரியா தலைநகர் சியோலுக்கு 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஒபாமா, தென் கொரியாவின் பெண் அதிபர் பார்க்ஷியுன் ஹையை சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் அவர்கள் இருவரும் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தனர். அப்போது, அண்டை நாடான வட கொரியா 4ஆவது அணுகுண்டுச் சோதனை நடத்த தயாராகி வருகிறது. அது செயற்கை கோளின் புகைப்படங்கள் மூலம் தெட்டத் தெளிவாக தெரிகிறது. எனவே அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் தென்கொரிய அதிபர்.



தென்கொரிய ஜனாதிபதியுடன் ஒபாமா சந்திப்பு

அதற்குப் பதில் அளித்த அமெரிக்க அதிபர் ஒபாமா, வட கொரியா இது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் சர்வதேச நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்படும். மேலும் பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என எச்சரித்தார்.

இது வடகொரியாவுக்கு கடும் எரிச்சலையும், ஆத்திரத்தையும்ஏற்படுத்தியுள்ளது. அதைப் பிரதிபலிக்கும் வகையில் இரு நாட்டு அதிபர்களையும் ஆபாச வார்த்தைகளால் கடுமையாகத் தாக்கியுள்ளது.

இது குறித்து வடகொரியாவின் கொரிய சமாதான மறுசீரமைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த சில நாள்களாக தென் கொரிய அதிபர் பார்க் மற்றும் அமெரிக்க அதிபர் ஒபாமா ஆகியோரின் நடவடிக்கைகள் மிகவும் கீழ்த்தரமாக உள்ளன. தென்கொரிய அதிபர் பார்க் அறிவு வளர்ச்சியற்ற ஒரு பெண். அவரது செயல் தனக்கு பிடிக்காதவர்களை ரவுடிகளை ஏவிவிட்டு தாக்கும்படி கெஞ்சுவது போன்று உள்ளது.

அல்லது ஒரு புத்திசாலித்தனமான விபச்சாரி, ஒருவரை அழிக்கப் பலமிக்க புரோக்கர் (ஒபாமா) ஒருவரிடம் தனது உடலை விற்பது போன்று கருத வேண்டியுள்ளது.

அவர்கள் இருவரும் வேறு நாட்டின் விவகாரங்களில் தலையிடுவதை சகித்துக் கொள்ள முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

வடகொரியாவின் இந்தக் கருத்து வெளிப்பாடு ஒழுக்கங்கெட்ட செயல் என தென் கொரியா கண்டனம் தெரிவித்து உள்ளது. (கு)

## மலேசிய விமானத்தை தேடுவதற்கு ஒத்துழைப்பு

### மலேசியாவில் ஒபாமா தெரிவிப்பு



கோலாலம்பூர்.ஏப். 29

காணாமற் போன மலேசிய விமானத்தைத் தேடும் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் தமது நாடு அர்ப்பணிப்புடன் உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக்குடன் கோலாலம்பூரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பராக் ஒபாமா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படையின் ஆளில்லா நீர் மூழ்கிக் கப்பல் விமானத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள போதிலும் இது வரை எந்தவொரு பயனும் கிடைக்கவில்லை.

இதேவேளைசீரற்ற வானிலை காரணமாக வான் மற்றும் கடல் பரப்புத் தேடுதல் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாகச் சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த மாதம் 8 ஆம் திகதி 239 பேருடன் காணாமற் போன மலேசிய விமானம் தொடர்பில் இதுவரை நம்பகரமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

## மேர்ஸ் வைரஸினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு

### சவூதி அரேபியாவில்

றியாத்.ஏப். 29

சவூதி அரேபியாவில் மேர்ஸ் என்ற உயிர்க்கொல்லி வைரஸினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஐத் தாண்டியுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் பரவிவரும் இந்த வைரஸினால் பீடிக்கப்பட்ட 8 பேர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளதாக சவூதி அரேபிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வைரசினால் பீடிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென தலைநகர் ரியாத் ஜெட்டா மற்றும் தமாம் ஆகிய நகரங்களில் நிபுணத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நிமோனியா மற்றும் சிறுநீரக செயலிழப்பு என்பன இந்த வைரஸ் தாக்கத்துக்கான அறிகுறிகளாகும் என சவூதி அரேபிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்த வைரஸ் பரவும் வீதம் அதிகரித்துள்ளதுடன் வைரசினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஆய்வுகளை மேற்கொள்ள உதவி வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் இந்த வைரஸினால் பீடிக்கப்பட்ட மேலும் 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சவூதி அரேபிய சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (கு)

**நிமோனியா மற்றும் சீறுநீரக செயலிழப்பு என்பன இந்த வைரஸ் தாக்கத்துக்கான அறிகுறிகளாகும் என சவூதி அரேபிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**





வவுனியா சிதம்பரபுரம் யாத்திரிகர் மலை ஸ்ரீ திருப்பழனி முருகன் ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்ட படிக் கட்டுக்களை வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பதையும் அருகில் படிக்கட்டுமானப் பணிக்கு நிதியுதவி வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள். ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் திருப்பணிச் சபை உறுப்பினர்கள் நிற்பதையும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட படிக்கட்டுக்கள் ஊடாக பக்தர்கள் சகிதம் வடமாகாண மீன்பிடி வர்த்தகத்துறை அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் மற்றும் பிரமுகர்கள் ஆலயத்துக்குச் செல்வதையும் காணலாம். (க-421)



கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் அதிபர் க.மதுரநாயகம், கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம், தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் ஆகியோரையும் காணலாம். (க-18)







கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் இயங்கி வருகின்ற (ஐ.லீட்) தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற 170 மாணவர்களை ஐ.லீட் நிறுவன வடமாகாண அதிகாரி கெனடி சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். இதில் இயந்திரவியல், கணினி அழுகுக்கலை என்பவற்றில் தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயிற்சியை முடித்த இம்மாணவர்கள் ஒவ்வொரு வரும் சுயமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-500)



கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளின்போது ஓட்டப் போட்டிக்குத் தயாராகும் சிறுவர்கள். (க-18)







வவுனியா மாவட்டத்தில் இடர் முகாமைத்துவ நிலையத்தினரால் பாலமோட்டை பகுதியில் உள்ள மக்களுக்கு இடர்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய ஒத்திகைக் கருத்தரங்கு இடம்பெற்ற போது வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சூரியராஜா விளக்கமளிப்பதையும், பாதுகாப்பு உடை அணிந்து காட்டுவதையும், ஓமந்தை பொலிஸ் பிரிவின் சிறுகுற்றப் பிரிவைச் சேர்ந்த சி.வித்தியானந்தன் உரை நிகழ்த்துவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களையும் காணமுடிகின்றது. (க-421)

## தண்ணீர்தேடி அலையும் மக்கள்

கிளிநொச்சி, ஏப்.29
கிளிநொச்சி, வட்டக்கச்சி, மாயவனூர் கிராம மக்கள் கடும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.
இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் நாள்தோறும் குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் அலைந்து திரிகின்றனர்.
வடமாகாணசபை புமுதியாற்றில் ஏற்று நீர்ப்பாசனம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றது.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் குடிதண்ணீர் நெருக்கடிக்கு தீர்வுகாணும் விதத்தில் தண்ணீர் விநியோகத்தை சீர் செய்ய தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இடர்முகாமைத்துவப் பிரிவு என்பவை மேற்கொள்ளும் என்று முடிவுகள் எடுக்கப்பட்டன. எனினும் மாயவனூர் கிராமத்துக்கு இதுவரை குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்தனர். (ச-18)

# நன்னீர் மீன் வளர்ப்பு இம்முறை வெற்றி

### பொறுப்பதிகாரி பாலசந்திரன் புகழாரம்

கிளிநொச்சி, ஏப்.29
வீடுகளில் நன்னீர் மீன்களை வளர்க்கும் முயற்சி வெற்றியளித்துள்ளது என்று வவுனியா மாவட்ட பிராந்திய நீர் வளர்ப்பு அதிகார சபை விரிவாக்கல் அலுவலகப் பொறுப்பதிகாரி நிருபராஜ் பாலசந்திரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வீடுகளில் மீன் வளர்க்கும் முறைமை வவுனியாவில் வளர்ச்சி கண்டு வருகின்றது. கனகராயன்குளத்தில் 3 வீடுகள், ஓமந்தையில் 5 வீடுகள், வீரபுரத்தில் 3 வீடுகள், கன்னாட்டியில் 3 வீடுகள், பெரிய கட்டில் 2 வீடுகள், தாலிக்குளத்தில் 3 வீடுகள், மடுகந்தையில் 3 வீடுகள், சேமமடுவில் 3 வீடுகள் என நன்னீர் மீன்களை வளர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
500 சதுர அடி மீன் வளர்ப்புத் தொட்டியில் நன்னீர் மீன்களை வளர்ப்பதன் மூலம் மூன்று லட்சம் ரூபா வரை வருமானத்தை பெற முடியும்.
இந்த முறை வவுனியாவில் உள்ள குளங்களில் வளர்ப்புக்கென மீன்குஞ்சுகள் விடப்படவில்லை. இந்த ஆண்டு மழையின்மையால் குளங்கள் வற்றியுள்ளன. போதியளவு நீர் குளங்களில் இன்மையால் மீன் குஞ்சுகளை நாம் விடவில்லை. மாறாக வீடுகளில் நன்னீர் மீன்களை வளர்க்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அதற்குப் போதியளவு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. வவுனியாவில் நன்னீர் மீன்களுக்கு தற்போது நிலவும் பற்றாக்குறை வீடுகளில் மீன் வளர்ப்பதன் மூலம் நிவர்த்திக்கப்படும் வாய்ப்பு உள்ளது. பலருக்கு சுயதொழில் வாய்ப்பும் கிடைத்துள்ளது-என்றார். (ச-402)

> 500 சதுர அடி மீன் வளர்ப்புத் தொட்டியில் நன்னீர் மீன்களை வளர்ப்பதன் மூலம் மூன்று லட்சம் ரூபா வரை வருமானத்தை பெறமுடியும்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

### ரூ.42 மில்லியன் செலவில்

கிளிநொச்சி, ஏப்.29
இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 42 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
நான்கு மில்லியன் ரூபா செலவில் கல்மடுக் குளத்தின் அணைக்கட்டு புனரமைப்பு வேலைகளும், ஆறு மில்லியன் ரூபா செலவில் அக்கராயன்குளம் அணைக்கட்டு வேலைகளும், 32 மில்லியன் ரூபா செலவில் புமுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் வேலைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.
தற்போது இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.
32 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் புமுதியாறு ஏற்று நீர்ப்பாசன வேலைத் திட்டத்தின் மூலம் மாயவனூர் பகுதியில் உள்ள சுமார் 840 வரையான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். அங்கு நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கும் தீர்வு காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-55)




புதிதாக அமைக்கப்பட்ட பூநகரி வைத்தியசாலை

# பூநகரி வைத்தியசாலை விரைவில் திறப்பு

கிளிநொச்சி,ஏப்.29
கிளிநொச்சி, பூநகரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
கிளிநொச்சி, பூநகரி பிரதேச வைத்தியசாலை கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை பூநகரி வாடியடியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் இயங்கி வருகின்றது. நான்கு வருடங்களாக தனியார் வீட்டில் இயங்கிவரும் இந்த வைத்தியசாலை வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதுடன், நோயாளர்களும் உரிய முறையில் சிகிச்சை பெற முடியாத நிலை காணப்படுகின்றது.
பூநகரிப் பிரதேச வைத்திய சாலைக்குரிய நிரந்தரக் கட்டடம் இன்று வரை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. இந்த நிலையில் குறித்த வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் பூநகரி, கணவாய்ப்பள்ளம் என்ற பகுதியில் உள்ள மாறுகாணி ஒன்றில் 105 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் பணிகள் நிறைவடைந்து ஆறுமாதங்கள் கடந்தும் இன்று வரை அது திறந்து வைக்கப்படவில்லை.
இந்த விடயம் குறித்து பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் ப. கார்த்திகேயன் தெரிவித்ததாவது:-
கட்டட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன, வைத்தியசாலை வளாகம் மிக ஆழமான பகுதியாகக் காணப்படுவதால் அதனை மண் இட்டு நிரப்ப வேண்டியுள்ளது. அதற்கு மூன்று மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் விரைவில் வைத்தியசாலை திறந்து வைக்கப்படும் - என்றார். (ச-55)

## பாதுகாப்பு நிலையம் இயங்காது

வவுனியா, ஏப்.29
நாளை மறுதினம் வியாழக்கிழமை முதலாம் திகதி பொது விடுமுறை நாள் என்பதால் அன்றைய தினம் வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் சேவைகள் இடம்பெற மாட்டாது என்று நிலையத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.
வவுனியா வர்த்தக சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இந்த நிலையத்தில் தூர பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்யும் பயணிகள் தங்களின் மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றை விட்டுச் செல்வது வழமையாகும்.
எனவே இந்தப் பயணிகள் எதிர்வரும் முதலாம் திகதி வேறு இடத்தில் தங்கள் சைக்கிள்களை விட்டுச்செல்லுமாறு பாதுகாப்பு நிலையத்தின் நிர்வாகம் கேட்டுள்ளது. (ச-421)



கிளிநொச்சியின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் நீர் வற்றிய நிலையில் வறண்டு காணப்படுகின்றது. (ஓ-க-18)

# கடும் காற்றுடன் மழை

வவுனியா,ஏப்.29
வவுனியாவில் காற்றுடன் கூடிய மழை பெய்ததில் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன.
நேற்றுமுன்தினம் மாலை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காற்றுடன் கூடிய மழை பெய்ததில் நெடுங்குளம், அட்டஸ்கம பகுதியில் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.
இந்த வீடுகளின் கூரைப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். தட்டான்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மின்னல் தாக்கி வீட்டின் சுவர் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-421)

# வவுனியா ஆசிகுளத்தில் புதிய உபதபாலகம் திறப்பு

வவுனியா, ஏப்.29
வவுனியா ஆசிகுளத்தில் புதிதாக நிறுவப்பட்ட உப தபாலகம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. உப தபாலகத்தை வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.
குறித்த பகுதியில் உபதபாலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். அதையடுத்து வடமாகாண சுகாதார அமைச்சர், மத்திய அஞ்சல் சேவை அமைச்சருடன் தொடர்புகொண்டு விடுத்த கோரிக்கையை அடுத்து அந்தப் பகுதியில் உபதபாலகம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து வடமாகாண அஞ்சல் மா அதிபர் உபதபாலகம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற உபதபாலக திறப்பு நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல் மாஅதிபர் என்.ரட்ண சிங்கம், வவுனியா பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் திருமதி எம்.ஜி.எல்காடோ, வவுனியா பிரதம தபால் அதிபர், ஆசிகுளம் கிராம சேவகர், பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் முக்கிய பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.
உபதபாலகத்தைத் திறந்து வைத்துஉரையாற்றிய அமைச்சர் ப.சத்தியலிங்கம்,
'ஆசிக்குளம் மக்கள் விடுத்த திருந்த கோரிக்கையை அடுத்து இந்த உபதபாலகம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அஞ்சல் சேவைகள் அமைச்சருக்கு இந்தப் பிரதேச மக்கள் சார்பாக நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
இன்று எமது இனம் அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. 30 வருட போர் பலவழிகளிலும் எம்மை பாதித்துள்ளது. எனவே அவர்களுக்கான உடனடித் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டிய கடப்பாடு இந்த மாகாண சபைக்குள்ளது.
அதேவேளை, அதற்குச் சமாந்தரமாக தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய வேலைத்திட்டங்கள் மூத்த அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன'- என்று தெரிவித்தார். (ற-422-421)



உப தபாலகத்தை திறந்து வைத்தார் வடமாகாண சுகாதார அமைச்சர்

# தொழில்நுட்ப அறிவை வளர்த்தால் நன்மை

### அதிபர்களுக்கு ஆலோசனை

பூநகரி, ஏப்.29
தொழில்நுட்ப அறிவை அதிபர்கள் பெற்றுக் கொள்வதன் மூலம் மாணவர்கள் மத்தியில் கணினி அறிவை வளர்க்க முடியும். இவ்வாறு பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் சு.தர் மரட்ணம் தெரிவித்தார்.
பூநகரி கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான மடிக்கணினி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கணினிஅறிவுஇன்றையகல்வியுலகுக்கு முக்கியமானதாகும். பூநகரி கிராமம் பின்தங்கிய மிகவும் பின்தங்கிய மாணவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் கணினி அறிவு கூடுதலாக கிடைக்க வேண்டும்.
இலவசமாக கிடைக்கின்ற பொருள்களை எல்லோரும் அலட்சியப்படுத்தாமல் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் -என்றார். (ச-18)

# அடாவடித்தனத்தில் ஈடுபடும் பிக்குகள்

## அவர்களால் நாட்டின் அமைதி சீர் குலைவு என்கிறார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,ஏப்.29
பௌத்த பிக்குகள் அரசியலை ஆயுதமாகக் கையில் எடுத்துக்கொண்டு இன்று நாட்டில் அடாவடித்தனத்தில் ஈடுபட்டு அமைதியைக் குழப்புகின்றனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு, மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி. விளையாட்டுக் கழகத்தின் 86 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்துக் குருமார்கள் இறைவனுக்கு சமய அனுஷ்டானங்களைச் செய்யும்போது, பௌத்த குருமார்கள் அரசியலில் நுழைந்து அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்றனர்.


கோவிந்தன் கருணாகரன்

பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதங்கள் மனிதனின் வாழ்வியலை நல்வழிப்படுத்தும் முறைகளைப்போதிக்கின்றன. அவை ஏனைய மதங்களைபரஸ்பரம், புரிந்துணர்வு, சமத்துவத்தை மதிக்க வேண்டும் என்றும் கூறுகின்றன.

மாறாக பௌத்த பிக்குமார்கள் அரசியலை ஆயுதமாகக் கையில் எடுத்துக்கொண்டு இன்று நாட்டில் அடாவடித்தனத்தில் ஈடுபட்டு அமைதியைக் குழப்புகின்றனர். இவர்கள் மதத் தலைவர்கள் என்பதால் அவர்களின் அடாவடித்தன செயற்பாடுகளை யாரும் கண்டு கொள்வதில்லை.

அண்மையில் பட்டிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் பெரும்பான்மையின மக்களின் குடியேற்றத்துக்காகப் பௌத்த மதகுரு ஒருவர் பிரதேச செயலகத்தினுள் புகுந்து பிரதேச செயலரை அச்சுறுத்தி அடாவடித்தனத்தில் ஈடுபட்டார்.


இந்தச் சம்பவம் இப்போது நீதிமன்றம்வரை சென்றுள்ளது. தமிழர்களின் இருப்பிடம் மற்றும் தமிழ் இனப்பரம்பலைக் கட்டுப்படுத்த அவர் முயலுகின்றார்.

தமிழர்களின் இன, மத, கல்வி, கலாசார மற்றும் அரசியல் அபிலாஷைகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில் அஹிம்சை

**பௌத்த பிக்குமார்கள் அரசியலை ஆயுதமாகக் கையில் எடுத்துக் கொண்டு இன்று நாட்டில் அடாவடித் தனத்தில் ஈடுபட்டு அமைதியைக் குழப்புகின்றனர்.**

ரீதியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதனை முன்னெடுக்க முடியாத நிலையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்பு ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனுக்காக இன்று சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் மீண்டும் அஹிம்சை வழியில் போராட ஆரம்பித்துள்ளது. இதற்கான தீர்வுகள் மிக விரைவில் சர்வதேசத்திட மிருந்து எமக்குக் கிடைக்கும்- என்றார். (ச)


மேதின துண்டுப்பிரசுர விநியோகத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## மே தினத் துண்டுப் பிரசுரம் கூட்டமைப்பால் விநியோகம்

### மட்டக்களப்பு நகரில்

மட்டக்களப்பு,ஏப்.29
மே தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் நகரில் துண்டுப்பிரசுரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தத் துண்டுப் பிரசுர விநியோகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், கி.துரைராஜசிங்கம், இரா.துரைரெட்ணம், ஞா.கிருஸ்ணபிள்ளை, பிரசன்னா இந்திரகுமார் உட்படப் பலர் ஈடுபட்டுள்ளனர்.

உழைக்கும் உறவுகளோடு ஒன்றிணைந்து உரிமைக் காகக் குரல் கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மே தினம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள மே தின நிகழ்வில், பிரதான உரையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நிகழ்த்தவுள்ளார். (ச)

## சட்டவிரோத மதுவை ஒழிப்பதற்கு முயற்சி

ஏறாவூர்.ஏப்.29
களுவன்கேணி, பெரியமடுக் கிராமத்தில் சட்டவிரோத மது பாவனையை ஒழிக்க முயற்சி எடுத்து வருகிறேன் என்று ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலர் யு. உதயஸ்ரீதர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோத மது ஒழிப்பு விடயத்தில் பொலிஸாரின் ஒத்துழைப்பும் முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்படும். அவர்களும் இந்தக் கிராமத்தில் நிலவும் சட்டவிரோத மது தயாரிப்பையும், விற்பனையையும் ஒழிப்பதற்குப் பூரண ஒத்துழைப்புத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

கிராம மக்கள் வறுமையால் பாதிக்கப்படுவதற்கு மது பாவனைதான் காரணமாகும்.

ஆரோக்கியமான உணவுக்கும் கல்விக்கும் செலவிடுகின்ற பணம் போதைப் பொருள் பாவனைக்குச் சென்று விடுவதால் குடும்பம் நிலை குலைந்து ஆரோக்கியம் குன்றி சீரழிந்து விடுகின்றது.

உழைத்துச் சம்பாதிக்கின்ற பணம் மதுப் பாவனைக்காக வீண் விரயமாக்கப்படுகின்றது- என்றார். (ச)

## சுற்றுலாத் தலமாக மாறும் மண்முனைப் பாலம்

மட்டக்களப்பு,ஏப்.29
மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்களின் சுற்றுலாத் தலமாக மண்முனைப் பாலமும் கொக்கட்டிச்சோலைப் பிரதேசமும் மாறி வருகின்றது.

கிழக்கில் படுவான்கரையையும் -எழுவான்கரையையும் இணைக்கும் புதிய மண்முனைப் பாலத்தைப் பார்வையிடத் தினமும் பெரும் திரளான தமிழ்,முஸ்லிம் மக்கள் வருகை தருவதோடு கொக்கட்டிச் சோலைப் பிரதேசத்தையும் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்தப் பாலத்தைப் பார்வையிட வரும் பொது மக்கள் தங்களின் பொழுது போக்குத் தலமாகவும் இதனை கருதுகின்றனர்.


மண்முனைப் பாலத்தைப் பார்வையிடத் திரண்டு வரும் சுற்றுலாப் பயணிகள்

இதனால் சிற்றுண்டி உணவுகள், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்யும் அங்காடி வியாபாரிகள் பெரும் நன்மையடைந்துள்ளனர்.(ச)

## தனித்துவத்தைப் பேணிக்காப்பது தமிழ்மொழி

### கிழக்குப் பல்கலைத் துணைவேந்தர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.29
எமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணிக் காப்பது தாய்மொழியான தமிழ்மொழியே ஆகும் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் பரிசளிப்பு விழா கல்லடி சிவானந்தா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-


கிழக்கு மாகாண தமிழ்மொழித் தின பரிசளிப்பு விழாவில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் எஸ்.முகம்மட் இஸ்மாயில், பேராசிரியர் கலாநிதி ஏ.சண்முகதாஸ், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் பேசும் மக்களின் மொழி, கலாசார விழுமியங்களைக் கட்டிக்காப்பது தமிழ்மொழியே ஆகும். உலகில் 3,000 மொழிகள் உள்ளன. எனினும் எழுத்து வடிவில் நூற்றுக்கும் குறைவான மொழிகள் உள்ளன. அவற்றில் செவ்விய மொழிகளில் பழைமை வாய்ந்ததும் புதுமொழியாகக் காணப்படுவதுடன், இன்றும் பேச்சு வழக்கிலுள்ளதுமான மொழி தமிழ் மொழியே ஆகும்.

மொழி மனிதனின் ஒரு பலம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாய்மொழியை மாணவர்கள் மறக்கக் கூடாது-என்றார்.

இந்த நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.முகம்மட் இஸ்மாயில், பேராசிரியர் கலாநிதி ஏ.சண்முகதாஸ், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## தபால் நிலையம் உடைப்பு

மட்டக்களப்பு,ஏப்.29
மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு தபால் நிலையம் உடைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. எனினும் அந்தப் பகுதியில் ரோந்து வந்த பொலிஸாரைக் கண்டதும் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் திருடுவதற்காக கொண்டுவந்த உபகரணங்களையும் தபால் நிலையத்தில் விட்டுச்சென்றுள்ளனர் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பொதுபல சேனாவின் செயலை ஏற்கமுடியாது

## சாடுகிறார் அசாத் சாலி

கொழும்பு.ஏப்.29



அசாத் சாலி

பொதுபல சேனாவின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக பொதுபல சேனா அமைப்பு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது என்று அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் அரசு எந்தவிதக் கவனமும் செலுத்துவதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். பொலிஸாரால் பொதுபல சேனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத காரணத்தினால், விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை ஜனாதிபதி நிறுவியுள்ளார் என்று அவர் கூறினார்.

பொதுபலசேனா இயக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஒற்றுமையைச் சீர்குலைக்க இடமளிக்கப் போவதில்லை

## பொதுபல சேனா அமைப்பின் செயலைக் கண்டிக்கிறார் டிலான்

கொழும்பு.ஏப்.29

எந்தவகையான பொதுபல சேனாக்கள் உருவெடுத்தாலும், நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு இடம்கொடுக்கமாட்டோம்.

இவ்வாறு வெளிநாட்டுவேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி சேவைகள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கமாட்டோம். இந்த நாட்டின் சரித்திரத்தில் கிடைத்த மிக உயர்ந்த பௌத்த தர்மத்தை விற்பதும், பௌத்த தர்மத்தைக் கூறுபோட்டு அவர்களின் சட்டைப் பைகளை நிரப்புவதுமே பொதுபல சேனா அமைப்பின் வேலையாகும். பௌத்த தர்மத்தை சரியாகப் புரிந்து நடைமுறைப்படுத்தும் பௌத்த மத குருமார்களை தலைமேல் வைத்து மதிக்கின்றோம். அவ்வாறான பௌத்த மத குருமார்களை நாம் என்றும் மதிப்போம். மக்களை கூறுபோடும் எந்த ஒரு சேனாவுக்கும் நாட்டில் இடமில்லை- என்றார். (ச)



டிலான் பெரேரா



ஜப்பானின் கடல் வழி தற்பாதுகாப்பு படையினருக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் நல்லெண்ண அடிப்படையிலான வருகையாகக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

# வங்கிக் கொள்ளையுடன் ஜே.வி.பிக்குத் தொடர்பு

## உயர்கல்வி அமைச்சர் சந்தேகம்

கொழும்பு.ஏப்.29



எஸ். பி. திஸாநாயக்க

நாடு முழுவதும் தற்போது நடந்து வரும் தொடர் வங்கி கொள்ளைகளின் பின்னணியில் ஜே.வி.பிக்கும், முன்னிலை சோசலிஷக் கட்சிக்கும் தொடர்பு இருக்கலாம் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி போன்றவை கட்சிகள் அல்ல. அவை வெறுமனே குழு அணிகள். அவர்கள் உணர்வுகளுக்கு அடிமையாகி சொர்க்கபுரிகளில் வாழும் நபர்கள்.

அவர்களுக்குக் கொள்ளையடிப்பும், பயங்கரவாதமுமே பழக்கம்.

தற்போது வங்கிகளில் கொள்ளையிடப்படும் சம்பவங்களைப் பார்க்கும் போது அதில் ஏதேனும் அரசியல் பின்னணி இருக்குமா என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது.

அதில் ஜே.வி.பியும் முன்னிலை சோசலிஷக் கட்சியும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்- என்றார். (ச)

# யானைகளுக்குக் காச நோய்; நாளாந்தம் ரூ.15,000 செலவு

## சாகச விளையாட்டுக்கள் நிறுத்தம்

கொழும்பு.ஏப்.29

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் உள்ள 5 யானைகளுக்குக் காசநோய் ஏற்பட்டுள்ளது. அதனால் யானைகளின் சாகச விளையாட்டுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த 5 யானைகளும் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. காச நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு யானைக்கும் நாளாந்தம் வைத்திய சிகிச்சை அளிப்பதற்கு 10ஆயிரம் ரூபா முதல் 15ஆயிரம் ரூபா வரை செலவு ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது.

இந்த நோய் காற்றின் மூலம் பரவுகிறது என்று தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை பணிப்பாளர் அனுர டி சில்வா தெரிவித்தார்.

சகல யானைகளின் இரத்தத்தையும் பரிசோதனை செய்வதன் மூலமே எத்தனை யானைகளுக்குக் காசநோய் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை வைத்திய பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் அசோக்கா தங்கொல்ல தெரிவித்தார்.

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையின் யானையின் சாகச நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டதால் இந்த மிருகக்காட்சிச் சாலைக்கு வரும் பொது மக்களும் சிறுவர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புகைப்பிடித்தல், மது பாவனையால் வருடாந்தம் 2,80,000 பேர் சாவு

## சுகாதார அமைச்சு தகவல்

*கொழும்பு.ஏப்.29*



கோப்புப்படம்

*புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனையால் இலங்கையில் வருடமொன்றுக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இந்தநிலையில் போதையற்ற சமூகம் 2014 என்ற தேசிய வேலைத் திட்டத்தைச் சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.*

*இந்த வேலைத் திட்டத்தின் கீழ் புகைப்பிடித்தல் மற்றும் மதுபாவனை தொடர்பாக கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்கள் அண்மையில் அறிவூட்டப்பட்டனர். பாடசாலைப் பிள்ளைகள் புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பாவனை பழக்கங்களுக்கு உள்ளாவதைத் தவிர்க்கும் வகையில் சுகாதார அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றன.*

*மதுப்பாவனை அற்ற சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான வருடமாக இந்த வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*எமது நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 1,200 பேர் பிறக்கின்றார்கள். சுமார் 1,000 பேர் உயிரிழக்கின்றார்கள். உயிரிழப்பவர்களில் 60 வீதமானோர் தொற்றா நோய்களாலேயே உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)*

# கோட்டே நகர சபை தலைவருக்கு பிடியாணை

கொழும்பு.ஏப்.29

கோட்டே நகர சபைத் தலைவர் ஜனக்க ரணவக்க மீது கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நகர சபைத் தலைவர் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு ஒன்றை பரிசீலித்த போது நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியதால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு சொந்தமான காணியை முறைக்கேடாக பயன்படுத்தியமை தொடர்பில் அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. (ச)

# மூலிகை பட்டை கடத்தியவர் கைது

பொகவந்தலாவ, கூருளாகந்த தோட்ட மாவெளி வனபகுதியில் சட்டவிரோதமாக மூலிகை பட்டை கடத்திய ஒருவரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மூலிகை பட்டைகளை பொகவந்தலாவ நகரத்துக்கு வியாபாரி ஒருவருக்கு விற்பதற்காக கொண்டு வந்த போது இந்த நபர் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# உண்மையான பொதுவேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான்

## இப்படிக் கூறுகிறார் கெஹலிய

கொழும்பு.ஏப்.29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நாட்டின் உண்மையான பொது வேட்பாளர் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் முன் செல்ல முடியாத சில தோல்வியடைந்த அணியினர் மறைந்து கொண்டு பொது வேட்பாளர் பற்றி பேசினாலும், நாடும் பொதுவாக கோரும் பொது வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாட்டுக்குள் ஏற்பட்ட மிகப் பெரிய பிரச்சினையான பயங்கரவாதத்துக்கு ஜனாதிபதி தீர்வை வழங்கினார்.

நாட்டுக்குத் தேவையான உண்மையான பொது வேட்பாளரின் கடமைகளையும் பொறுப்புகளையும் கடந்த 10 வருடங்களாக ஜனாதிபதி நிறைவேற்றித் தந்துள்ளார். இதனால் மக்களின் உண்மையான பொது வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஆவார்- என்றார். (ச)



கெஹலிய ரம்புக்வெல

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசின் காதில் விழ வேண்டும் சீன அமைச்சரின் அறிவுரை

இப்பொழுது சீனாவும்– இலங்கையின் மிக நெருங்கிய நட்பு நாடு– இடித்துக் கூறிய பிறகும், அரசு மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங் கைக்கு எதிரான தீர்மானத்தின் மீதான தனது நிலைப் பாட்டை மாற்றிக்கொள்ளாமல் இருக்குமானால், அது இந்த நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட வர்கள் பலருக்கும் கவலையளிப்பதாகவே இருக்கும். அந்தத் தீர்மானத்தை இலகுவானதாக எடுத்துக் கொள் ளக்கூடாது. அதன் தீவிரத் தன்மையைக் கருத்தில் கொண்டு அரசு செயற்படாவிட்டால் அதனால் பாரதூரமான விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்பட இடமுண்டு என்ற வகையில் சில தினங்களுக்கு முன் இலங்கைக்கு வருகை தந்திருந்த சீன துணை வெளிவிவகார அமைச்சர் லியூசென் மின்னே கூறியிருந்ததாக செய்திகள் கசிந்துள் ளன. தீர்மானத்தை பாரதூரமாக எடுத்துக்கொண்டு செயற்படாது போனால், அரசு பாதகமான விளைவுகளைச் சந்திக்கக் கூடும். அவ்வாறான ஒரு சூழ்நிலை யில் சீனாவி னாலும் இலங்கைக்கு உதவ முடியாமல் போகலாம் என் பது சீன துணை வெளிவிவகார அமைச்சரின் அறிவுரை. இலங்கை அரசுத் தலைவர் முதற்கொண்டு அரசைச் சார்ந்த அனைவருமே தீர்மானத்தை திட்ட வட்டமாக நிரா கரித்துவிட்டார்கள். சிலர் நவநீதம்பிள்ளை அம்மையா ரையே தனிப்பட்ட முறையில் விமர்சித்திருந்தார்கள். தீர் மானம் விவாதிக்கப்படுவதற்கு முன்னதாக அதனை முறி யடித்து விடுவதற்கு தன்னாலான சகல முயற்சிக ளையும் செய்து பார்த்துவிட்ட இலங்கைத் தரப்பினர் முடியாத நிலையில் நிராகரிப்பு என்ற நிலைப்பாட் டுக்கு வந்துவிட்டார்கள்.

மனித உரிமை சபையில் உறுப்புரிமையுடன் இருக்கும் ஒரு நாடு, அதன் செயற்பாடுகளில் சகல விதங்களிலும் பங்களிப்புகளை செய்துள்ள நாடு, அதன் தீர்மானம் மட்டும் தனக்கு எதிராக இருக்கிறது என்பதற்காக நிரா கரிப்பது எந்தவிதத்திலும் நியாயமாகத் தோன்ற வில்லை. இது நாம் சொல்வதல்ல. இவ்வாறு செய்வத னால் பெரிய விளைவுகளை சந்திக்க நேரும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மட்டுமல்ல, ஐநா. நிபுணர் குழுவில் பணி புரிந்தவரான யஸ்மின் சூகா மற்றும் பலர் எடுத்துக் கூறியுள்ள கருத்தாகும்.

இம்மாதிரி மனித உரிமை சிக்கல்களை எதிர் கொண்ட வேறு பல நாடுகளின் அனுபவங்களை நேரில் கண்டு உணர்ந்தவர்கள் அவர்கள். இவற்றுக்கும் மேலாக ஐநா. செயலாளர் நாயகம் பான் கீ–மூனே அண்மையில் இது பற்றி வாய் திறந்து எச்சரிக்கை விடுத்திருந்தார். கொடூரக் குற்றங்களைப் புரிந்துவிட்டு– இது உள் நாட்டு விவகாரம். சர்வதேசம் இதில் தலையிடக் கூடாது என்று எந்த நாடும் கூறிவிட முடியாது என்று அவர் சூசகமாக இலங்கைக்கு அறிவுறுத்தியிருந்ததை இலங் கைத் தரப்பினர் இன்னமும் உய்த்துணர்ந்திருப்ப தாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையில்தான் சீன துணை அமைச்சரின் அறிவுரை வெளிப்பட்டிருக்கிறது. இலங்கைக்கு பல வகை யிலும்– பொருளாதாரம், இராணுவம் மற்றும் ராஜ தந்திர முறையிலும் கூட தூரத்திலிருந்த போதும் நேசக் கரம் நீட்டி ஊக்கமும் உற்சாகமும் அளித்துவரும் ஒரு பெரிய நாட்டின் முக்கிய துணை அமைச்சர் ஒரு வர் இங்கு வந்து இவ்வாறான அறிவுரையொன்றை வழங்குவாரானால் அதனை ராஜபக்ஷ அரசு புறந் தள்ளிவிட மாட்டாது என்றே கருத வேண்டும்.

தீர்மானத்தை புறக்கணிப்பதன் மூலம் பெரிய எதிர் விளைவுகள் ஏற்படலாம் என்று மட்டும் சீன துணை அமைச்சர் கூறி நிறுத்திவிடவில்லை. அம்மாதிரியான ஒரு நிலை ஏற்படுமானால் சீனாவினால் கூட இலங் கைக்கு உதவ முடியாமல் போகலாம் என்பது அவர் விடுத்துள்ள எச்சரிக்கையாகும். இதற்குப் பின்னரும் அரசு இது விடயமாக சற்று ஆழமாக யோசிக்காமல் அடம்பிடிப்பது சரியாகத் தோன்றவில்லை.

ஏற்கெனவே, இலங்கையின் மனித உரிமை நிலைப் பாடுகள் தொடர்பாக நான்கு ஆண்டுகள் காலத்துக்கு ஐநா. இலங்கை மீது கண்காணிப்பு மேற்கொள்வதற் கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணையாளர் செய்திருப்பதாகத் தகவல் வந்துள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படா மல் இருக்கும் நிலை பற்றி ஆய்வு செய்ய ஐநா. சிறப்பு அறிக்கையாளர் பிரான்சிஸ் கிரிடியூ விரைவில் இலங்கை வரவிருக்கிறார்.

தீர்மானம் நிறைவேறிய பிறகும் தாங்கள் வெற்றி பெற்று விட்டதாகக் கணக்குப் போடும் பேராசிரியர்க ளையும் இராணுவக் கெடுபிடிகளையும் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு இந்தக் கட்டத்திலாவது ஆக்க பூர் வமாகச் சிந்தித்து நாட்டை எதிர்கால சிக்கலில் இருந்து காப்பாற்ற தலைவர்கள் முற்படுவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

# ஓயாத வன்முறைகள், சீரழிவுகள் இலங்கையில் அமைதி வருமா?

சேரலாதன்

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் மக்கள் நிம் மதியாக வாழ்வதற்கு உகந்த நாடு எது என்பது தொடர்பானதொரு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் சின்னஞ்சிறிய டென்மார்க் நாடே அத்தகைய தகுதி கொண்ட நாடாகத் தெரிவு செய் யப்பட்டது. மிகப் பெரிய பொருளாதார வளமோ, இராணுவப் பலமோ அந்த நாட்டிடம் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஆய்வில் அந்த நாடே தெரிவு செய்யப்பட்டது. இந்த உலகில் உள்ள அனைத்தையும் விட நிம்மதிதான் மனிதனுக்கு முக்கியமானது என்பது இதிலிருந்து புரிகிறது.

எமது நாட்டிலுள்ள மக்கள் இன்று அந்த நிம்மதிக்காகத்தான் ஏங்கி நிற் கின்றனர். பல்வேறு அழுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள அவர்கள் அவற்றி லிருந்து விடுபடுவதற்கான வழி தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டுவரை இங்கு ஏற்பட்ட ஒவ்வொன்றுக்கும் போரே காரணமாகக் காட்டப்பட்டது. மக்களும் போர் தொடர்பான பயத்தில் மூழ்கிக் கிடந்தனர். ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரைக் காரணமாகக் கூறும் நிலையில் இந்த நாடு இல்லை. ஆனால் எல்லா வகை யிலும் மக்கள் பாதிக்கக் கூடியதொரு நிலை உருவாகிவிட்டது. குறிப்பாக சட்டமும் ஒழுங்கும் மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளன. கொலை, கொள்ளை, திருட்டு, துஷ்பிரயோகங்கள் சட்டத்தை மீறும் செயற்பாடுகள் என்பவை வர லாறு காணாத அளவில் பெருகிக் காணப்படுகின்றன. சட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டியவர்கள் பக்கம் சார்ந்து செயற்படுவதால் நீதி மறுக்கப்படுகின்றது.

போர் ஓய்ந்து அமைதி நிலவுவதாகக் கூறப்படும் தமிழர் பகுதிகளில் நிலைமை மிகவும் மோசமாக மாறி விட்டதென்றே கூற வேண்டும். தின மும் ஏதாவதொரு வன்முறைச் சம்ப வம் இங்கு இடம்பெறுவது வாடிக் கையாகவே மாறிவிட்டது. கட்டுக் கடங்காத நிலைக்குச் சென்று விட்ட சட்டவிரோதக் குழுக்கள் எத்தகைய அச்சமும் இல்லாது ஆயுதங்களைப் பிரயோகிப்பதும் பல்வேறு வகையிலும் பொதுமக்களைத் துன்புறுத்துவதும் அமைதி குலைவதற்கான முக்கிய காரணங்களாக மாறியுள்ளன. சட்ட மும், ஒழுங்கும் இறுக்கமாகக் கடைப் பிடிக்கப்படுமாயின் இந்த அவலநிலை தோன்றியிருக்க மாட்டாது

ஒரு நாட்டின் சட்டம் என்பது அனை வருக்கும் பொதுவானது என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதுதான் உலக நியதியாகும். ஆனால் எமது நாட்டில் அது சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரிய வில்லை. நாட்டின் தலைநகரில் அமைந்துள்ள அமைச்சர் ஒருவரின் அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து தேடுதல் வேட்டையில் ஒரு குழுவினர் ஈடுபடும் அளவுக்கு நிலைமை மோச மாக மாறியுள்ளது.

இலங்கையை ஒரு ஜனநாயக நாடு என்று தான் அழைக்கிறார்கள். ஆனால் இங்கு ஜனநாயக நடைமுறையைக் காண்பது தான் அரிதாக மாறி வருகின்றது. ஒரு தரப்பினரின் ஏவல் குழுக்களாக காவல்துறையும், படைத் தரப்பும் இருக்கும் வரை ஜனநாயகம் தழைத்து ஓங்கவே முடியாது. போர் ஓய்ந்த பின்னர் இந்து மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. ஒருமதப் பிரிவினர் தமது இஷ்டத்துக்கு ஏற்றாற் போன்று சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டதுடன் ஏனைய மத பிரிவினருக்கு அச்சுறுத்தல் விடும் பாணியிலும் நடந்து கொள்கின்றனர். இவ்வாறு பல சம்பவங்கள் நடந் துள்ளன. ஆனால் இத்தகையவர் களுக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை.

இலங்கையின் அந்நியச் செலாவ ணியை ஈட்டும் ஒரு முக்கிய துறையாக உல்லாசப் பயணத்துறை விளங்கி வருகின்றது. அதுவும் போர் ஓய்ந்ததன் பின்னர் வெளிநாட்டு உல்லாசப் பய ணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதற்குக் குந்தகம் விளை விக்கும் செயற்பாடுகளும் இங்கு இடம் பெற்று வருகின்றன. அம்பாந்தோட்டை யில் இடம்பெற்ற உல்லாசப் பயணி களுக்கு எதிரான மோசமான சம்பவங் கள் மிகவும் மோசமான உணர் வலைகளை ஏற்படுத்தின. அதன் தாக்கம் ஓய முன்னர் ஜேர்மன் நாட் டைச் சேர்ந்த உல்லாசப் பயணியாக வருகை தந்த பெண் ஒருவர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த போது அவர் தங்கியிருந்த விடுதியின் ஊழியர் ஒருவரால் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள் ளாக்கப்பட்டதாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மோசமான சம்பவங்கள் நாட்டின் கீர்த்திக்குப் பெரும் களங்கம் விளைவிப்பதுடன் உல்லாசப் பயணத் துறையையும் வெகுவாகப் பாதித்து விடும். எனவே சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதற்குப் பொறுப்பானவர்கள் இத்தகைய செயல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண் டும்.


அண்மையில் அம்பாந்தோட்டைக்குச் சென்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மிகக் கேவலமான வகையில் நடத்தப்பட்டுள்ளனர். இதில் ஆளும் கட்சியின் பிரதான உள்ளூர் அரசியல்வாதியொருவருக்குத் தொடர்பி ருந்ததாகப் பகிரங்கமாக குற்றச்சாட் டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இன்று அவரது கைகளில் இருந்தது உண்மையான துப்பாக்கியா அல்லது விளையாட்டுத் துப்பாக்கியா என்ற விவாதமே இடம்பெறுகின்ற தேயொழிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட வர்கள் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

அண்மையில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் ஆளும் கட்சி மீது மக்களுக்கு ஏற்பட்டுவரும் வெறுப்பை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள் ளன. தேர்தல் இடம்பெற்ற போது ஜெனி வாச் சமரும் நடைபெற்றதால் அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள ஆளும் தரப்பினர் முயன்ற போதிலும் அது முழு மையான பயனைக் கொடுக்க வில்லை என்றே கூற வேண்டும். ஜெனிவாப் பூச் சாண்டி இல்லாதிருந்தால் நிலைமை இன் னமும் மோசமாக மாறி யிருக்கக் கூடும். மேலும், தமிழர் பகுதிகளில் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் சம்பவங்களும் அங்கு வாழும் மக்களின் தூக்கத்தைக் கெடுத்து வருகின்றன். போர் ஓய்ந்த போதிலும் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பாத இந்த மக்கள் நிம்மதியான ஒரு வாழ்க் கைக்காகவே ஏங்கி நிற்கின்றனர்.

ஆகவே அரசு இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதை முதலில் நிலைநாட்ட வேண்டும். இங்கு வாழும் சகல மக்களும் சம உரிமை பெற்றவர்களாக, அச்சமின் றித் தமது வாழ்வைத் தொடரக் கூடிய தொரு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கைப் பொறுத்த வரையில் பாகுபாடுகள் காட்டப்படலாகாது. வன் முறையைத் தூண்டும் குழுக்களின் நடவடிக்கைகள் கடுமையான வகையில் ஒடுக்கப்படல் வேண்டும் எந்த விதத்தி லும் வன்முறைகள் இடம்பெறாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்வதற்கு உகந்த நாடாக இலங்கை மாறுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும்.

இந்த நாட்டின் எதிர்காலம் ஆளும் தரப்பினரின் கைகளிலேயே தங்கியுள் ளது. பொறுப்பை உணர்ந்து அவர்கள் இனியாவது நடந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்போம்.

> ஒரு நாட்டின் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதுதான் உலக நியதியாகும். ஆனால் எமது நாட்டில் அது சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை.





கல்வியியலாளர்களை
கருத்தொருமிக்கச் செய்த

# கல்விச் சிந்தனை மறுசீரமைப்புச் செயலமர்வு

தி.அபராஜிதன் (ஆசிரியர்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த சித்திரைத் திங்கள் 23ஆம், 24ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மிகவும் எழுச்சியுடனும் ஏற்றம் காணும் வகையிலும் நடைபெற்ற கல்வி ஆலோசனைச் செயலமர்வு இலங்கைத் தீவின் கல்விச் சிந்தனையாளர்களை சங்கமிக்கச் செய்து கருத்தொருமித்த குரலில் வடபுலக் கல்வி மறு சீரமைப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்தத் தூண்டி உள்ளது. சுமார் மூன்று தசாப்த காலப் போரியல் துன்பங்களையும் சீரான கல்விச் செயற்பாட்டின் நெருக்கீடுகளையும் சந்தித்த வடமாகாணம் தனக்கென மாகாண சபை முறைமையைத் தன்வயப்படுத்திய பின்னர் மத்திய மாகாண அரசுகளின் அனுசரணையுடனும் கல்விப் புலம் சார் சிந்தனையாளர்களின் ஆதரவுடனும் ஒருமித்த குரலில் வடபுல மாணவர்களின் கல்வியில் சீராக்கங்களை மேற்கொள்வது தொடர்பான செயலமர்வு ஒன்றை மேற்கொண்டு ஏனைய மாகாணங்களுக்கு முன்மாதிரியாக செயற்பட எண்ணியதையிட்டு வடமாகாண கல்வி அமைச்சரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

காலத்துக்குக் காலம் கல்விச் சீராக்கம் தொடர்பான கொள்கை வகுப்பாளர்களும் கொள்கைகளும் கொழும்பில் இருந்தோ அல்லது கல்வி அமைச்சின் ஊடாகவோ அல்லது தேசிய கல்வி நிறுவனம் ஊடாகவோ பிறப்பெடுக்க வேண்டும் என்ற கோட்பாட்டை மறு சீரமைக்கக் கூடிய வகையில் கல்வியை நேரடியாகப் பெறக் கூடியப் பயனாளிகளையும் அவற்றை அதன் புலத்திலே நின்று வழங்கக் கூடிய கல்விப் புலம்சார் அங்கத்தவர்களையும், சமூக அங்கத்தவர்களையும் ஒன்று கூடச் செய்து கடந்த ஆறு மாதங்களாகத் திட்டங்கள் வகுத்து நீண்ட கருத்துப் பகிர்வுடனான ஆய்வுகளுக்கு உட்படுத்தி அதனை இறுதி வடிவம் கொடுப்பதற்காக மேற்படி செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்படி திட்டத்தின் அச்சாணியாக சர்வதேசத்துக்கு தனது பெயரை பொறிக்கச் செய்த தமிழ் மகான் கலாநிதி எதிர்வீரசிங்கம் செயற்பட்டிருக்கின்றார் என்றால் மாற்றுக் கருத்திருக்க முடியாது. கல்வியியலாளராகிய ஜோன் டூயியின் கருத்தாகிய "அனுபவமே கல்வி" என்பதற்குச் சான்றாக சுமார் தன்னுடைய ஆறு தசாப்த கால கல்வி விளையாட்டுத் தொடர்பான சர்வதேச அனுபவத்தின் வெளிப்பாடாக கிடைத்த இம்மனித வளம் இலங்கை கல்வியியலாளர்களால் மெச்சத்தக்க வகையில் தனது பணியை செவ்வனே ஆற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

பின்வரும் வடபுலக் கல்வி மறு சீரமைப்பு தொடர்பான பத்து விடயதானங்களில் கவனம் செலுத்தி அதனை எதிர்வரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கான முன் மொழிவுகள் மேற்படி செயலமர்வில் முன்வைக்கப்பட்டு அவை செயலமர்வில் கலந்து கொண்ட சபையோரினதும் சான்றோரினதும் சில முன்வைப்புக்களுடன் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன:-

- ✦ வட மாகாண கல்வி முறைமையை மறுசீரமைத்தல் செயல்முறை.
- ✦ மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சமூக உளவியல் நலன்.
- ✦ கற்றல் கற்பித்தலும் ஆசிரியக் கல்வியும்.
- ✦ நிதி. உத்தியோகத்தர்கள் தேவைப்பாடுகளும், செலவினமும், ஆசிரியர் சம்பளமும்.
- ✦ நிர்வாகமும் ஆசிரியர் பிரச்சினைகளும்.
- ✦ கணினி மயப்படுத்தப்பட்ட திட்டமிடல் தரவுத் தளம் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.
- ✦ வடக்கின் முன்பள்ளிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி.
- ✦ விசேட கல்வி.
- ✦ பிள்ளைமைய, பிள்ளை நேயக் கல்விமுறைமை.
- ✦ வடமாகாண கல்வி நிர்வாக அமைப்புக்குரிய மாற்றீடுகள்.



மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக கல்வித் துறைசார்ந்த நிபுணர்கள், ஓய்வு நிலை கல்வியியலாளர்கள், மாகாணக் கல்வி அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாகாண கல்வித் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மற்றும் தேசியகல்வியியற் கல்லூரிகளின் துறைசார் நிபுணர்கள், தேசியகல்வி நிறுவனம் மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சின் பதவி நிலை சார் உத்தியோகத்தர்கள், உலக வங்கிப் பிரதிநிதிகள், கல்விப் பங்காற்றும் சர்வதேச நிறுவன பிரதிநிதிகள், பன்னிரண்டு வலயங்களினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடபுலத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பன்னிரண்டு கல்வி வலயங்களிலிருந்து பாடசாலைகளின் வகைகளுக் கேற்ப தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்றி தங்களது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிப்பதற்கான களமாக அமைந்திருந்தமை தொடர்பான வெளிப்படைத் தன்மைக்கு சான்றாய் இருந்தது. மேற்படி முன்மொழிவுகளை சாதகமான சாத்தியப்பாடுகளுடன் நடைமுறைப்படுத்துவதற்கான வழி வகைகள் பற்றியும் ஆராயப்பட்டமை கவனிக்கத்தக்கது.

நீண்டு நிலைத்திருக்கக் கூடிய நடத்தை மாற்றமே 'கற்றல் எனப்படும். இந்தக் கற்றல் சமகால உலக ஒழுங்கில் அனைவருக்கும் கிடைக்கின்றதா? அல்லது கிடைக்கச் செய்வதில் காணப்படுகின்ற இடர்பாடுகள் என்ன? வெறுமனே நூற் கல்வியை மாத்திரம் இலவசமாக பெற்றுக் கொள்கின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் சமூகப் பொருத்தப்பாடுடைய பொருத்தமான வேலை உலகினுள் பிரவேசிக்கக் கூடிய வகையில் கல்வி முறைமைகள் உலகளாவிய ரீதியில் மாற்றமுறுகின்ற வேளையில் நம்மவரிடையே இம்மாற்றம்





ஏற்பட்டுள்ளதா? என்பது கேள்விக் குறியாக உள்ள இந்த நிலையில் இனம், மதம், மொழி பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்கின்ற நிலை கடந்து மாணவர்கள் என்கின்ற பொதுமையில் பொருத்தமான கல்வியை அதனோடு கூடிய அறிவு திறன் மனப்பாங்கை எம் எதிர்காலச் சந்ததிக்கு கையளிக்க நாம் எல்லோரும் கருத்தொருமித்து உழைக்க வேண்டும். உழைப் போம் எனும் உறுதியை மத்திய அரசின் கல்வி அமைச்சர் மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் தேசியகல்வி நிறுவன தகைமை சார் உத்தியோகத்தர்கள் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வடபுல கல்விப் பணிசார் உத்தி யோகத்தர்கள் என அனைத்துப் பிரிவினரையும் ஒன்று சேரவைத்து அவர்களின் கருத்து வெளிப்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கி திட்ட மொழிவுகளை அலசி ஆராய்ந்து ஏற்றுக் கொண்டமை வடபுல எதிர்கால கல்வி மேம்பாடு தொடர்பான வெளிச்சத்தை சுட்டி நிற்கின்றது.

மேலும், மேற்படி செயலமர்வின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதற்கு மத்திய அரசின் கல்விச் சிந்தனையாளர்கள் 30 பேர் கொண்ட குழுவினருடைய வருகையும் அவர்களுடைய கருத்துப் பகிர்வுகளும் யாழ்ப்பாணத்தின் கல்வி மீளாய்வு தொடர்பான முன் மொழிவுகளை கொழும்பு ஏற்றுக் கொள்கின்றது என்பதையும் இம்முன்மொழிவுகள் ஏனைய மாகாணங்களுக்கும் பரிமாற்றம் செய்யவேண்டும் என்பதையும் வெளிப்படுத்தி நின்றமை செயலமர்வின் கனதியைக் காட்டி நின்றது. மேலும், சில மாநாடுகள் கலகலப்பாக கவர்ச்சியாக கூடிக் கலைவதை மட்டுமே நோக்காக இருக்கின்ற போதும் அதற்கு மாறுபட்ட விதத்தில் மேற்குறித்த கல்வி மீளாய்வு செயலமர்வின் முன் வைப்புக்களின் சில நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்குரிய சாத்தியப்பாடுகள் சாதகமாக இருந்தமையை மத்திய, மாகாண அரசின் அமைச்சர்கள், கல்வி உயர் அதிகாரிகளின் கருத்துக்கள் வெளிப்படுத்தி நின்றமையை மேலும் நம்பிக்கையையூட்டிச் சென்றது.

எது எவ்வாறாக இருந்த போதும் மனித மனங்களிலிருந்து பிறப்பெடுக்கும் நல்ல சிந்தனை நமது சமூகத்தை நம்பிக்கைக்குரியவர்களாக மாற்றுவதற்கு வழி வகுக்கும் என்பதற்கேற்றாற்போல் மேற்படி செயலமர்வில் அனைவரும் கருத்தொருமித்த குரலில் கல்வி மீளாய்வு தொடர்பாக சிந்திக்க வேண்டி உள்ளோம் என்பதையும், சிந்தித்தோம் என்பதையும் கருத்திற் கொண்டு அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு பதவி நிலையில் உள்ளோர் பாரபட்சமின்றி பங்காற்ற வேண்டும் என்பதே நமது சமூகத்தின் வேணவாவாகும்.

---

வாசகர் திருமுகம்

## பொது மக்களின் நன்மதிப்பைக் காப்பாற்றுவார்களா?

தொடர்ச்சியாக 45 நாள்களுக்கு மேலாக நடைபெற்று வரும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் போராட்டத்தால் பொது மக்களே பெரிய அளவில் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர். கடந்த காலங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள், உணவு நிலையப் பரிசோதனைகள், கொல்களக் கடமைகள், பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி நடவடிக்கைகள் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் மிகவும் காத்திரமான பங்களிப்பு வழங்கிய சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்புகளுடனேயே கடந்த பல தசாப்த வருடங்களாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டமையை அனைவரும் நன்கறிவர். இவ்வாறான இரு பகுதியினரதும் ஒத்துழைப்பு மக்களுக்கு வினைத்திறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைகளை வழங்கியது யாவரும் அறிந்ததே.

எனினும் தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத் தலைமையினால் மேற்கொள்ளப்படும் பணிப் புறக்கணிப்பானது பொது மக்களுக்கு பாதிப்புக்களையும், விசனத்தையும் ஏற்படுத்தி வருவதுடன், அது அரசியல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகத்தையும் பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றமை தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது. நியாயமான முறையில் மேற்குறித்த பிரச்சினையை ஒவ்வொரு பொது சுகாதாரப் பரிசோதகர்களும் தமது கவனத்தி லெடுத்து பொது மக்களின் அத்தியாவசியமான சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி சேவை செய்வதற்கு முன்வர வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்ப்பதோடு, ஒரு சிலரின் சுய நலன்களுக்காகவும், அரசியல் தேவைகளுக்காகவும் மேற்கொள்ளப்படும் தவறான வழி நடத்தல்கள் காரணமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மனிதாபிமானமிக்கதும் மதிப்புக்குரியதுமான சேவைகளில் அரசியல் சித்து விளையாட்டுக்கள் இடம்பெறும் நடவடிக்கைகளைப் புறக்கணித்து, இதுவரையில் இவர்களது சேவைகளுக்கு பொது மக்கள் மத்தியில் காணப்பட்ட நன்மதிப்பை பாதுகாக்க முன்வரவேண்டும் என்பது பொது மக்கள் தொடர்பிலான விருப்பமாகும்.

*வை. விவேகானந்தன், பிறவுண் வீதி, கொக்குவில்.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எந்த ஒரு காரியத்திலும் தயக்கம் இல்லாமல் ஈடுபடுவீர்கள். முக்கியஸ்தர்கள் நட்புக் கிடைக்கும். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். கௌரவம் அந்தஸ்து உயரும். உங்களது செயல்களுக்கு எப்போதும் யாராவது துணையாக இருந்து கொண்டே இருப்பார்கள்.

**இடபம்:** வீண் குழப்பங்கள் ஏற்படலாம். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. காரியதாமதம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. திடீர் செலவுகள் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு தற்காலிகமாக வெளியில் செல்ல வேண்டி இருக்கும். பணவரவு தாமதப்படும்.

**மிதுனம்:** முன் கோபத்தைக் குறைத்து நிதானமாகப்போவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருக்கும் போட்டிகள் விலகும். தேங்கி இருக்கும் பொருள்கள் விற்பனை ஆகும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பது போல் இருந்தாலும் சற்று இழுபறி நிலை இருக்கும்.

**கடகம்:** வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்தில் செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு விடயத்தையும் நேராகச் சென்று பார்ப்பது நல்லது. அடுத்த வரை நம்பி இருப்பதைத் தவிர்க்கவும். உறவி னர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். எதிலும் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சிங்கம்:** வெளியூர்ப் பயணம் செல்ல நேரலாம். அவசரமாக எதையும் செய்யத் தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் சகல அனுகூலமும் கிடைக்கப்பெறும். ஆனால் வீண் வாக்குவாதத்தால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**கன்னி:** வாடிக்கையாளர்களிடம் சாதுர்யமாகப்பேச வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குத் துணிச்சல் அதிகரிக்கும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது.

**துலாம்:** குடும்பத்தில் இருப்பவர்களுடன் தன்மையாகப் பேசுவது நல்லது. எந்தக் காரியத்திலும் அவசரம் காட்டத் தோன்றும். நிதானமாகச் செயற்பட்டால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். உத்தியோகத்தில் எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.

**தனுசு:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும்போது எச்சரிக்கை தேவை. வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் மனக்கவலை ஏற்படலாம்.

**மகரம்:** மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச் சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை. எதிர்பாராத தடை, தாமதம் உண்டாகலாம். சிறிய வேலையும் செய்து முடிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். எல்லாவிதமான முன்னேற்றத்தையும் தரும்.

**கும்பம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்புக் கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குச் செயல்திறன் அதிகரிக்கும்.

**மீனம்:** குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும். மனக்குழப்பம் நீங்கித் தைரியம் உண்டாகும். தொலைதூரத் தகவல்கள் நல்ல தகவல்களாக வரும்.

## நாளை

**சித்திரை-17 புதன்கிழமை | 30.04.2014**

திதி: பிரதமை மு.ப.11.55 வரை
நட்சத்திரம்: பரணி மு.ப.09.49 வரை
சுபநேரம்: 04.28-05.58 வரை
இராகுகாலம்: 11.58.01.28 வரை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### இந்து தத்துவம்

சொற்பொழிவின் பொருள் 'இந்துத் தத்துவம்' என்பதால் சொற்பொழிவாளர் அந்தப் பொருளைப் பற்றிச் சிறப்பான விளக்கம் கூறுவார் என்று மிகவும் எதிர்பார்த்த அவையினருக்கு ஓரளவுதான் திருப்தி ஏற்பட்டது. அவர் புத்தரின் கொள்கைகளை அங்கங்கே சுட்டிக்காட்டி, உலகத்தில் முதன் முதலாக ஆன்மிகப் பணி புரிந்த மதம் பௌத்தமே என்றும், இரத்தம் சிந்தாமல் பௌத்தத்தைத் தழுவிய மக்கள் தொகை ஏராளமாகும் என்றும் சுவாமிஜி கூறிய பொழுதெல்லாம் அனைவரும் மகிழ்ச்சி மீதூரக் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். ஆனால், புத்தபிரானின் சமயத்தைப் பற்றியோ, அவரது கொள்கைகளைப் பற்றியோ அவர் கூறவில்லை; கிறிஸ்தவ சமயத்தைக் கூர்மையாகப் பல தடவை தாக்கியே பேசினார். கிறிஸ்தவ சமயம் இல்லாத நாடுகளில் அதைப் புகுத்துவதால் ஏற்படும் துன்பங்களைப் பற்றியும், துயரங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். மேலை நாடுகளின் சமுதாய நிலையையும், தமது நாட்டின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதை மிகவும் திறமையாகத் தவிர்த்து விட்டார். பொதுவாக இந்து தத்துவ ஆராய்ச்சியாளர்கள் தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் போகும் நெறியைக் கற்பித்தார்கள். ஆனால், கிறிஸ்தவ சமயத்தைப் புதிதாகத் தழுவுகின்றவன் தான் முன்பு கொண்ட அத்தனை கொள்கைகளையும் எறிந்துவிட்டுப் புதியதை முழுதும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படித் தான் அந்தச் சமயம் வற்புறுத்துகின்றது: அதைத் தான் அது அவனிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

# கூட்டல் கணக்குகளில் அசத்தும் குரங்குகள்





அமெரிக்காவில் 3 குரங்குகள் ஆர்வமாகக் கணக்குப் பாடம் படித்து வருகின்றன. அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் உள்ள ஹார்வார்ட் மருத்துவப் பல்கலைக்கழக நரம்பு உயிரியல் நிபுணர் மார்கரெட் லிவிங்ஸ்டன் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். 1 - 25 வரையிலான எண்கள் எழுதப்பட்ட அட்டைகளையும், ஆங்கில எழுத்து அட்டைகளையும் காண்பித்து, அந்தக் குரங்குகளுக்குக் கூட்டல் கணக்கு கற்பித்துள்ளனர். குரங்குகளும் இந்த அடிப்படையான கூட்டல் கணக்குகளை அருமையாகப் போட்டு வருகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 1 | 8 | | 4 | 7 | | |
| | 5 | | | 9 | 1 | | 6 | |
| 9 | 4 | | 2 | | | | | |
| 1 | | | 9 | | | | | 7 |
| | | 4 | 5 | 1 | 6 | 9 | | |
| 2 | | | | | 7 | | | 5 |
| | | | | | 9 | | 3 | 8 |
| | 2 | | 6 | 4 | | | 7 | |
| | | 9 | 3 | | 8 | 2 | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 4 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 6 | 1 | 2 | 7 | 3 | 5 | 8 | 4 | 9 |
| 5 | 3 | 4 | 6 | 8 | 9 | 7 | 1 | 2 |
| 2 | 9 | 1 | 3 | 5 | 4 | 6 | 8 | 7 |
| 3 | 4 | 7 | 9 | 6 | 8 | 2 | 5 | 1 |
| 8 | 5 | 6 | 1 | 7 | 2 | 3 | 9 | 4 |
| 1 | 7 | 3 | 8 | 4 | 6 | 9 | 2 | 5 |
| 9 | 2 | 8 | 5 | 1 | 3 | 4 | 7 | 6 |
| 4 | 6 | 5 | 2 | 9 | 7 | 1 | 3 | 8 |



# மக்களின் சுகாதார நலனுக்கு பங்களிப்பு வழங்கும் பஷன்பக்

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு பொது சுகாதாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்தும் வகையிலும் அது அமைந்துள்ளது. பஷன் பக் பணிப்பாளர் ஷீர் சுபியன் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், சமூக பொறுப்புணர்வு வாய்ந்த குடிமகன் என்ற வகையில், மூன்று அடிப்படைக்

பொதுமக்களின் சுகாதார நலனுக்கு பங்களிப்பு வழங்கும் ஃபஷன் பக் நாடு முழுவதும் 17 விற்பனையகங்களைக் கொண்ட இலங்கையின் முன்னணி ஆடை விற்பனையகங்களில் ஒன்றாகும். பஷன் பக் முன்னெடுக்கும் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளுக்கு அமைவாக, ராகம போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தையும் புனரமைத்திருந்தது. தனது சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டங்களுக்கு அமைவாக, ஃபஷன் பக் களுபோவில வைத்தியசாலை, லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் கொழும்பு கண் வைத்தியசாலை ஆகியவற்றை புனரமைத்திருந்தது. வழமையாக மாணவர்களுக்கு வழங்கிவரும் பங்களிப்புக்கும் மேலாக இந்த செயற்றிட்டத்தின் மூலம், பொது சுகாதார நலனில் தான் கொண்டுள்ள அக்கறையை மேலும் உறுதி செய்யும் வகையில் இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. பொது மக்களின் கொள்கைகளான பொது மக்கள், புவி மற்றும் இலாபம் ஆகியவற்றை ஊக்குவிக்க நாம் முயற்சிக்கின்றோம். இதற்கமைவாக, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் புனருத்தாரண செயற்பாடுகளுக்கு நாம் பங்களிப்பு வழங்கியிருந்தோம். இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வைத்தியசாலையாக இது திகழ்கிறது என்றார். சமூகம் என்பதில் மேலும் தனது கவனத்தை செலுத்தும் பஷன் பக், கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் இந்த புனருத்தாரண செயற்பாடுகளை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் வண. துருவில விமலதர்ம மற்றும் உள்நாட்டு மருந்துப்பொருள்களுக்கான பதில் அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க முன்னெடுத்திருந்தது. (த)

# 2013 இல் இலங்கை விமான பயணிகள் கையாள்கை 3.3 வீதத்தால் அதிகரிப்பு



இலங்கையின் பிரதான விமான நிலையத்தின் மூலம் கடந்த ஆண்டில் கையாளப்பட்டிருந்த பயணிகளின் எண்ணிக்கை 3.3 வீதத்தால் அதிகரித்திருந்தது. இதில் வேறு விமானங்களில் மாறிச் செல்வதற்காக வருகை தந்திருந்த பயணிகளும் உள்ளடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த காலப்பகுதியில் விமானங்களின் போக்குவரத்தும் 5 வீதத்தால் அதிகரித்து 50,802 ஆக அதிகரித்திருந்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருந்த தனது ஆண்டறிக்கையில் கடந்த ஆண்டில் கையாளப்பட்டிருந்த சரக்குகளின் எண்ணிக்கையும் 3.9 வீதத்தால் அதிகரித்திருந்ததென அறிவித்துள்ளது.

மத்தல விமான நிலையத்தின் ஊடாக 36,137 விமானப் பயணிகள் கடந்த ஆண்டில் கையாளப்பட்டிருந்ததாகவும், 1,362 விமானச் சேவைகள் இடம்பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# மஞ்சிக்கு தங்க விருது




சிலோன் பிஸ்கட் லிமிடெட்டின் (சிபிஎல்) முன்னணி வர்த்தகநாமமான மஞ்சி, அண்மையில் தேசிய வர்த்தக சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில் தங்க விருதை தனதாக்கிக் கொண்டது. இந் நிகழ்வின் தொனிப்பொருள் உலகளாவிய போட்டித்தன்மைக்கான வர்த்தக செயற்றிறன் ஆக அமைந்திருந்தது. இலங்கை வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவது இந்நிகழ்வின் பிரதான நோக்கமாக அமைந்தது.

இரு தினங்கள் நடைபெற்ற இந் நிகழ்வின் இரண்டாவது நாள் குழு செயற்றிறனுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், உற்பத்தி தரம் மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதற்கு முன்னெடுத்த வெற்றிகரமான திட்டங்களை சமர்ப்பித்த குழுக்கள் அடையாளப்படுத்தப்பட்டன. மஞ்சியின் சுவர்ண சக்தி தர வட்டம் (Quality Circle) குழுவானது தரம் மற்றும் உற்பத்தி செயற்றிறன் போக்கு பிரிவின் கீழ் தங்க விருதை வென்றது.

சி.பி.எல் நிறுவனம், சம்மேளனத்தின் முதலாவது தேசிய விருதுகள் விழாவில் துணை நிறுவனங்களான கன்வீனியன்ஸ் ஃபூட்ஸ்(லங்கா) பிஎல்சி மற்றும் சிபிஎல் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஆகியவை முறையே வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை வென்றெடுத்தன.

இச் சாதனை குறித்து பிரதம நிறைவேற்று அதிகாரி இமல் பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில், எமது தலைவரின் தாரக மந்திரமான தரம் என்பது பழக்கம் அடிப்படையில் எமது நிர்வாக பணிப்பாளர்களின் தலைமைத்துவ திறன் மற்றும் சிரேஷ்ட நிர்வாகிகளின் திறமைகளால் செயற்பட்டு வருகின்றோம். இந் நிகழ்வில் வழங்கிய விருதுகள், தொழிற்சாலை மட்டம் முதல் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் வரையான ஊழியர்களை செயற்பாட்டு ரீதியில் ஊக்குவிப்பதுடன், பணிபுரிவதற்கு சிறந்த இடமாக சி.பி.எல் நிறுவனத்தை உருவாக்கியுள்ளோம் என்றார்.

சுவர்ண சக்தி தர வட்டம் ஆனது, உலக தர தினத்தையொட்டி உற்பத்தி மற்றும் தர அபிவிருத்தி திட்டம் தொடர்பான குழு பங்குபற்றலுடன் நடத்தப்பட்ட உள்ளக போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சான்றிதழ்கள், பயிற்சிகள் மற்றும் பண வெகுமதிகள் மூலம் ஊழியர்கள் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பிரதான பெண் மேற்பார்வையாளர் நிலந்தி எக்கநாயக்க கருத்து தெரிவிக்கையில், எமது குழு சுய விருப்பத்துடன் உருவாக்கப்பட்டதுடன், தொழிற்சாலையின் தற்போதைய கழிவு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குகிறது. கடந்த ஆறு மாதங்களில் தரவுகள் சேகரிக்கப்பட்டு, தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

பிரச்சினைகளை கண்டறிய வேறுபட்ட வழிமுறைகளைக் கையாண்டு இலக்குகளை வெற்றி கொள்கிறோம். எமது தொழிற்சாலையில் இலவச தக்வல்கூடம் அமைந்துள்ளது. நாம் தற்போது கழிவு மட்டத்தை உணர்ந்து கொண்டோம் என தமது ஈடுபாடு குறித்து தர வட்டத்தை வென்ற பொதியிடல் தலைவர் ரமீஷா செவ்வந்தி தெரிவித்தார். (த)

# எக்ளொப் லங்கா லிமிடெட் பெண்களுக்கு இலகு கடன்

மன்னார் மாவட்டத்தில் பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்காக இது வரை 344 பேருக்கு இலகு கடனை எக்ளொப் லங்கா லிமிடெட் ஸ்தாபனம் வழங்கியுள்ளது. இதனால் பெண்கள் தமது வாழ்வாதர முயற்சிகளில் நன்மையடைந் துள்ளனர் என்று எக்ளொப் லங்கா மன்னார் கிளை ஆலோசகர் சின்கிளேயர் பீற்றர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 25 வருடங்களாக கொழும்பில் இயங்கி வரும் இந்த ஸ்தாபனம் தென்பகுதியைச் சேர்ந்த 1000க்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு இலகு கடன் அடிப்படையில் கடன் உதவியை வழங்கியுள்ள நிலையில் கடந்த வருடம் முதல் தமிழ் பிரதேச மக்களுக்கும் குறிப்பாக மன்னார் மாவட்டத்துக்கும் தனது சேவையை விரிவுபடுத்தி இருந்தது.

இதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் 344 இளம் தாய்மார்களுக்கு இந்த இலகு கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனைத் தொடர்ந்து மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கும், மாந்தை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் இவ் உதவி திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாக 90 வீதமான கடன் உதவியும், சிறு குழுக்கள் மூலமாக 10 வீதமான கடன் உதவியும் வழங்கப்பட்டது. மன்னார் மாவட்ட அரச அதிபர், அப்பகுதி பிரதேச செயலாளர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த செயற்றிட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக நானாட்டான் உதவி பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம், ஆவணம், தோமஸ்புரி, மாவிலங்கேணி, சூரியக்கட்டைக்காடு, செம்மண்தீவு, முருங்கன்பிட்டி, கொவ்வங்குளம், நானாட்டன் வடக்கு, வங்காலை மேற்கு, இலந்தைகுளம், பரிகாரிகண்டல், மோட்டைகடை, நறுவலிக்குளம் போன்ற கிராம மாதர் சங்க உறுப்பினர்களும், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடுக்குடா, துள்ளுக் குடியிருப்பு, வெற்றிநாயகி கிராமம் ஆகியவற்றில் உள்ள பெண்களும் பயனடைந்துள்ளனர்.

தமது ஜீவனோபாயத்துக்காகக் கிடுகு பின்னி விற்றல், பனம் விதைகள் சேகரித்து கிழங்கு போட்டு விற்றல், முருங்கைக்காய் சேகரித்து கொழும்புக்கு அனுப்புதல், குளங்களிலும் கடலிலும் மீன் பிடித்தல், இறால், நண்டு, கணவாய் போன்றவற்றை சேகரித்து கொழும்புக்கு அனுப்புதல், கருவாடு பதனிடலும் ஏற்றுமதி செய்தலும், உப உணவுப் பயிர்ச் செய்கை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு பசு மாடு வளர்ப்பு போன்றவகைகளிலும், ஆடை தைத்தல், மதிய போசனம் வழங்கல், சிற்றூண்டி வியாபாரம், உணவுப் பொருள்கள் பைக்கற்றில் அடைத்து விற்றல், சிறுகடை வியாபாரம், மேசன் வேலை, தச்சு வேலை, நடமாடும் மரக்கறி, மீன் வியாபாரம் போன்ற பல வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டு மாதாந்தம் 10ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரை வருமானத்தைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் எக்ளொப் ஸ்தாபனம் வலுவூட்டல் பயிற்சிகளை அடிக்கடி நடத்துவதுடன் முன்னேற்றம் சம்பந்தமான ஆய்வுகளை வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலமாக நடத்தி வருகின்றது.

மன்னாரில் மேற்கொண்ட மேற்படி உதவி திட்டமானது பாதிக்கப்பட்ட பல பெண்களுக்கு நன்மை அளித்துள்ளதால் மாந்தை மேற்கு, மடு, முசலி போன்ற பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தப்படுவதுடன் எதிர்வரும் காலங்களில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் எக்ளொப் ஸ்தாபனம் தனது சேவையை விஸ்தரிக்க ஆலோசித்துள்ளது-என்றார். (த-14)

# ஆயர்கள் குறித்து பொதுபல சேனாவின் கருத்துக்கு செல்வம் எம்.பி.கண்டனம்

மன்னார், ஏப்.29
மன்னார்,யாழ் மறைமாவட்ட ஆயர்கள் தொடர்பாக பொது பல சேனா அமைப்பு தொடர்ந்தும் வெளியிட்டு வரும் கருத்துக்களை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுக்கு எதிரான கருத்துக்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மக்களின் மீள் குடியேற்றத்தில் உள்ள பிரச்சினைகள், இந்திய வீட்டுத்திட்டம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்தல் போன்ற மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலேயே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த பிரச்சினைகளுக்கு அரசு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்காத நிலையிலே அவர்கள் இப்பிரச்சினைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்றுள்ளனர்.

காரணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதேயாகும்.

இறுதியாக மன்னார், யாழ். மறை மாவட்ட ஆயர்கள் இருவரும் தேசத்துரோக குற்றங்களை புரிந்திருப்பதாகவும், அவர்கள் இருவரையும் கைது செய்ய வேண்டும் என்றும் அந்த பொதுபல சேனா அமைப்பு பொலிஸிடம் முறைப்பாடு செய்துள்ளது.

அவர்களுடைய இந்த செயற்பாடுகளை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பொது பல சேனா அமைப்பின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.


செல்வம் அடைக்கலநாதன்

> மன்னார் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றனர்.

எமது ஆயர்கள் அரசியல் செய்யவில்லை. அவர்கள் எமது அரசியலுக்கு பொதுவான கருத்துக்களை முன்வைப்பதோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களை அரசியல் ரீதியாக தொடர்பு படுத்திப் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொதுபல சேனா என்ற இனவாத அமைப்பு பௌத்த மதக் கோட்பாடுகளை மீறி செயற்படுகின்றது. பௌத்த தர்மத்துக்கு எதிராகச் செயற்படுகின்றது.

அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடையர் குழுவாகவே மக்கள் பொதுபல சேனா அமைப்பை பார்க்கின்றனர்.

தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் எமது ஆயர்கள் தொடர்பாக பொதுபல சேனா அமைப்பு வெளியிட்டு வரும் கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு எதிர்வரும் காலங்களில் அவர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் போது சற்று சிந்தித்துச் செயற்பட வேண்டும் -என்றுள்ளது. (வ-56)

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் 69 குடும்பங்களுக்கு உதவி


செஞ்சிலுவையினர் உதவிகளை வழங்குகின்றனர்.

முல்லைத்தீவு, ஏப்.29
முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் 69 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்பட்ட பயனாளிகளைக் கொண்ட குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.


முல்லைத்தீவு விவசாயப் பயிற்சி நிலைய மண்டபத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு கிளை நிறைவேற்று அதிகாரி செ.ததீஸ்வரன் தலைமையில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் இந்த 69 குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவியாக தலா 32 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இதில் முதன்மை விருந்தினராக மருத்துவர் க.அகிலன் கலந்து கொண்டார். (க)

# கிழக்கு மாகாண உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வடமாகாண ஆசிரியர்களால் ஊக்குவிப்பு கற்பித்தல்

யாழ்ப்பாணம், ஏப்.29
கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பயிலும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான பாட ஊக்குவிப்புக் கற்பித்தலை வடக்கு மாகாண பாடசாலைகளின் விஞ்ஞான ஆசிரியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் 4 தினங்கள் நடத்தினர்.

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலையிலும் தம்பலகாமம் மத்திய மகா வித்தியாலயத்திலும் இடம்பெற்ற இந்த ஊக்குவிப்புக் கற்பித்தலில் நூறுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.


கிழக்கு மாகாண ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான ஊக்குவிப்பு வகுப்புகள் நடைபெற்ற வேளையில்...

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். பாஸ்கரன், திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.சுகிர்தராஜன் ஆகியோர் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் சரவணபவானந்தசர்மா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் ரி.குகானந்தன், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ். லோகநாதன், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் டி.பிரபாகரன், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் த.கிருபாகரன் மற்றும் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.மகேந்திரன் ஆகியோர் மாணவர்களுக்கான கற்பித்தலை மேற்கொண்டனர்.

ஆறுதல் நிறுவனத்தினதும் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினதும் அனுசரணையுடனும் நடைபெற்ற இந்த ஊக்குவிப்பு வகுப்புகளில் கலந்து கொண்ட மாணவர்கள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் இது குறித்துக் கருத்துக் கூறுகையில்;

இரண்டு மாகாணங்களும் இணைந்த ஊக்குவிப்பு வகுப்புக்கான செயற்பாடுகள் பயனுள்ளவை. இது போன்ற கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தொடர வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (வ-7)

## பயிற்சிப் பட்டறை

கே.யூ.நிறுவனத்தின் இலக்கிய மன்றத்தினர் அடுத்த மாதம் 3ஆம் திகதி கவிதை எழுதுவது தொடர்பான பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளனர்.

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனத்தின் வளாகத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பயிற்சிப் பட்டறை இடம்பெறும்.

கவிஞர் த.ஜெயசீலன் உள்ளிட்ட முன்னணிக் கவிஞர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் ஆர்வமுள்ளவர்கள் முற்பதிவின் மூலமாகக் கலந்து கொள்ளலாம் எனவும் கே.யூ.நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (க)


கண்ணீர் அஞ்சலி



கே.கே.எஸ். றோட் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த
தர்மலிங்கம் புஷ்பராணி
அவர்கள் கடந்த 26.04.2014 காலமான செய்தி அறிந்து அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
பொன்னையா பவளதாசன்
[குகன்-பிரான்ஸ்]
(47444)(4.6.3)



நினைவலைகள்...

19ஆம் ஆண்டு



தோற்றம் 10.09.1920 மறைவு 22.04.1995

இரண்டாம் ஆண்டு



தோற்றம் 17.10.1925 மறைவு 30.04.2012

மத்தியாஸ் மரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை அன்னம்மா
எங்களை வழிநடத்திய தெய்வங்களே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எமைவிட்டு நீங்காது
எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து ஆண்டவன் அடியில்
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை காலை 6.00 மணிக்கு
குழந்தையேசு கோயிலில் (ஆச்சிரமம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
(47187)(7.6.3)
466/2, முதலாம் ஒழுங்கை,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
077 247 0593



நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சங்கரப்பிள்ளை கந்தசாமி
(முன்னாள் முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம் கைதடிச் சந்தி)
அன்னை மடியில்
22.11.1946
ஆண்டவன் அடியில்
14.05.2010
திதி: பிரதமை 29.04.2014
ஆண்டுகள் நான்கு ஆனதுவோ அப்பா
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
பாசத்துடன் வாழ்ந்த என் அன்புக் கணவரே
எங்கள் உறவில் மீண்டும் கலந்திட உருவெடுத்து
வருவீரா என் பாசமிகு-கணவரே
காலத்தின் கோலமோ விதியின் வேடிக்கையோ
எனப் புரியாத நிலையில் ஏங்கித் தவிக்கின்றோம்
பூமி மீது புகழ் சேர வாழ்ந்துவிட்டு
எம்மை விட்டு போனதேன்- அப்பா
கொடிய நோயினால் ஓர் ஆலமரம் அடிசாய்ந்ததுவோ
அந்த ஆலமரத்தின் கிளைகள் நின்று தவியாய்
தவிக்கின்றோம்-அப்பா
ஆண்டுகள் நான்கு இல்லை நாற்பது ஆண்டுகள் ஆனாலும்
அப்பா என்ற மூன்றெழுத்தை மறவோம் அப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
குககிரி,
கைதடி கிழக்கு, கைதடி
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(47408)(4.3.6)

# இருக்கும் அதிகாரங்களைக் கொண்டு தேவையானதைச் செய்வோம் அதன் பின் குறைகளை நிவர்த்திக்க இணைந்து போராடுவோம்

## வடக்கு மாகாண சபையின் புதிய எதிர்க்கட்சித் தலைவரின் கன்னிப் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப்.29
மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றன என்று சொல்ல முடியாது. ஆனாலும் இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி முதலில் மக்களுக்குத் தேவையானதைச் செய்வோம். அதன் பின்னர் மாகாண சபையிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கு உங்களுடன் இணைந்து நாங்களும் போராடத் தயாராக இருக்கின்றோம் என்று வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சி.தவராசா தன்து கன்னியுரையில் தெரிவித்தார்.


சி.தவராசா

வடக்கு மாகாண சபையின் எட்டாவது அமர்வில் அவர் ஆற்றிய கன்னியுரையில் மேலும் தெரிவிக்கையில்; பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகிய வற்றைக் காட்டிலும் மாகாணசபை முறைமை என்பது அதிகாரங்களை அதிகளவு பகிர்ந்துள்ளது. இதற்கு மேலும் அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்றுதான் எங்கள் கட்சி 25 வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றது.

தற்போது இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி முதலில் செய்யுங்கள். நியதிச் சட்டங்களை இதுவரையில் வடக்கு மாகாணசபை இயற்றாமையினால் வடக்கு மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய பெருமளவான நிதி கிடைக்கவில்லை. அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னைய காலங்களில் தென்பகுதிக்குச் சமமான நிலையில் வடபகுதியில் இருந்தன. நெதர்லாந்திலிருந்து இங்கு வந்து அதனைக் கற்றுச் சென்றார்கள். இன்று இங்கிருந்து அங்கு செல்ல வேண்டியுள்ளது. வடக்கு மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் இதனைச் சீர் செய்வதற்குப் போதும்.

நாங்கள் எல்லா ஒப்பந்தங்களிலும் கேட்ட விடயம், வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழியாக தமிழ் மொழி கொண்டு வரப்பட வேண்டும். பதிவேடுகள் தமிழில் பேணப்பட வேண்டும் என்று. ஆனால் இன்று வடக்கு மாகாணசபையின் கடிதங்கள் ஆங்கிலத்தில் அனுப்பப்படுகின்றன. இவற்றைச் சரிசெய்வதற்கு மேலதிக அதிகாரங்கள் தேவையில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சர் தனது உரைகளில் எல்லாம், இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம், பாதிக்கப்பட்ட மக்களுக்ாக வெளிநாடுகள் கொடுக்கின்ற நிதியிலேயே செய்யப்படுகின்றன என்று சொல்கின்றார். அப்படியல்ல. அவர்களிடம் கடன் வாங்கி - நாட்டை அடைவு - வைத்துப் பெறப்படும் நிதியில் செய்யப்படுகின்றன. முதலமைச்சருக்கு தவறான தகவல்கள் வழங்கி அவரைப் பிழையாக வழிநடத்துகின்றார்கள் - என்று தெரிவித்தார்.

அவரது கன்னியுரையில் குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பில் ஆளும்கட்சி உறுப்பினர்கள், பதிலடிகள் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5)


மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் மேலதிக மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுள்ள திருமதி ஜோய் மகிழ் மகாதேவன், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட வேளை... (ஒ-7)

# பாலைமரக் குற்றிகள் கடத்தியவர்கள் கைது

கிளிநொச்சி,ஏப்.29
சட்டவிரோதமாகப் பாலை மரக்குற்றிகளைக் கொண்டு சென்றவர்கள் முறிகண்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் சிலர் முறிகண்டிப் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் பாலை மரங்களை வெட்டி குற்றிகளாக வாகனம் ஒன்றில் மறைத்து யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முற்பட்டனர். முறிகண்டிப் பொலிஸாரால் குறித்த வாகனம் சோதனை செய்யப்பட்டபோது 45 பாலை மரக்குற்றிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்துக் குறித்த வாகனத்தில் வந்த மூவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வவுனியா, ஓமந்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது. இவர்கள் தொடர்ந்தும் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (கு-402)

# பெண் முயற்சியாளருக்கான பயிற்சி நெறி மே 5 முதல்

தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண் முயற்சியாளரின் தொழில் முயற்சியாண்மைத் திறனை விருத்தி செய்வதற்கும், தெரிவு செய்த தொழிலை சிறந்த முறையில் கொண்டு நடத்துவதற்கான முகாமைத்துவத் திறனை விருத்தி செய்வதற்குமான பயிற்சி நெறியை யாழ்.மாவட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மே 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதில் பெண் தலைமைத்துவமுடையோர், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர் மற்றும் இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட, தொழில் முயற்சியை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி நெறியின் பின்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான மேலதிக உதவிகளும் வழங்கப்படும்.

எனவே மேற்குறித்த பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

2013டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைபெறுபேறுகள் அண்மையில் வெளியாகின பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**
ப.சுதர்ஷன்- 7ஏ2சி, க.பிரியங்கா - 7ஏ2சி, கு.றதீபா- 7ஏபிஎஸ், ம.திலக்ஷன்- 3ஏ 3பி2சிஎஸ், ம.கம்சிகன் - 3ஏ2பி3சிஎஸ், க.கனுஸ்ரிகா - ஏ2பி4சி2எஸ், அ.நிறோஜன்- ஏபி3சி3எஸ், இ.ஆர்த்தி -ஏ2பிசி4எஸ், கு.தனுஷ்யா- 2ஏபி4சிஎஸ், கி.கிருஷாங்கி- ஏ4பி3சி, அ.றம்ஜா-ஏபி3சி3எஸ், க.யசிதா-ஏ2சி5எஸ்.

**கோண்டாவில் இந்து ம.வி.**
க.நிஷஜுனா - 7ஏபிசி, ம.சியாந்தினி - 6ஏ2பிசி, சி.சுபாசினி- 5ஏ3பிஎஸ், ந.நிரூஜன்- 4ஏபி2சிஎஸ், இ.கேதீஸ்வரன் -2ஏ2பி4சிஎஸ், சி.உதயசந்திரன் - 2ஏபி4சிஎஸ், கோ.கஜீபன்- 2ஏ2பி3சிஎஸ், த.சர்விகா- 2ஏ2பி2சி3எஸ்.

**மணற்காடு றோ.க.த.க.பாடசாலை**
மேரி சர்மிளா -2ஏசி3எஸ்.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**
எஸ்.சோவிகா -9ஏ, ஜே.றஜீவினி -8ஏபி, எம்.விவேகா -8ஏபி, கே.ஆர்த்திகா -8ஏபி, எஸ்.வனஜா-8ஏசி, ஏ.டெனிசா -8ஏஎஸ், எஸ்.ஜெயலக்சுமி -7ஏ2பி, வி.சங்கீதா -7ஏ2பி, வி.அபிநயா-7ஏபிசி, யூ.கிரிசாந்தி- 7ஏ2சி, வி.மிதுனா- 7ஏபிசி, ஏ.தரஞ்சா -7ஏபிசி, விவித்யா-7ஏபிசி, என்.மனோஜா- 7ஏபிஎஸ், எம்.ஆராதனா -6ஏ2பிசி, ஏ.சங்கீதா -6ஏபிசி, கே.கீர்த்தனா -6ஏ2பிசி, கே.மாதுலா- 6ஏ2பிசி, எஸ்.சிந்துஜா -6ஏ2பிசி, பி.தஷ்யந்தி -6ஏ2பிசி, கே.கௌதமி -6ஏபி2சி, எஸ்.பிரியங்கா -6ஏ2பிஎஸ், எம்.லக்ஷிகா-5ஏ4பி, ஜே.ஜதுஷா -5ஏ3பிசி, வி.சோபனா -5ஏ3பிஎஸ், பி.மதுஷா -5ஏ3பிஎஸ், ஜே.ஜெயந்தா-5ஏ2பி2சி,ஏ.பிரிந்திகா-5ஏ3பிஎஸ்.

**ஆங்கில மொழிமூலம்**
எஸ்.சுஜிலா -9ஏ, ஆர்.திவேந்தினி -9ஏ, யூ.நிவிதா -9ஏ, எஸ்.மஜிதா -8ஏபி, ஆர்.ஜஸ்ரிகா-8ஏசி, எல்.லாவண்யா -8ஏசி, பி.ஆரணி -8ஏஎஸ், ஆர்.கன்ஜா -7ஏ2பி, பி.துஷ்யந்தினி-7ஏபிஎஸ், எஸ்.கஸ்தூரி-6ஏ2பிசி, எஸ்.புவிதா- 6ஏ2பிஎஸ், வி.தர்சிகா -5ஏ3பிசி, ரி.லஷ்மி -5ஏ3பிசி.

**கற்சிலை அ.த.க. பாடசாலை**
அ.கஜந்தன் - 5ஏ2பிசிஎஸ், தே.கமலதாஸன் - ஏ2சி3எஸ், உ.சங்கீதன் - 2பி3சி2எஸ், ஆர்.தேனுசன் - ஏ4சிஎஸ், க.டினோசன் - பி2சி4எஸ், கா.தாரகா - 2ஏ3பி2சி2எஸ், வ.கீர்த்திகா - 2ஏ2பி2சி3எஸ், ந.மனோசிகா - 2ஏ3பி2சிஎஸ், த.கிருஷா - ஏபிசி5எஸ், த.எழிலரசி - 2ஏபிசி3எஸ், த.அபிசனா - ஏபிசி5எஸ்,க.விதுர்சனா - பி2சி2எஸ்,க.சானுகா - ஏசி3எஸ், ஜீ.புவனலோசன் - பி2சி2எஸ், அ.கீர்த்திகா - பிசி3எஸ்.
(ஒ-173-10-500)

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்
**வருடாந்த வெளிமடை உற்சவம் - 2014**

மேற்படி உற்சவம் **2014.05.02ஆம் திகதி வெள்ளிக்கிழமை** நடைபெறவுள்ள விஷேட உற்சவக்காலக் கடைகளுக்கென நிலத்துண்டுகளைக் குத்தகைக்கு எடுக்கவிரும்புவோர் **நாளை(2014.04.30)புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு** சபை அலுவலகத்துக்கு நேரில் சமுகமளிக்கவும்

**தலைவர்**
தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்,
தர்ம பரிபாலன சபை.
(பி.13562)
(12.3.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




பேராசிரியர் கலாநிதி
**வசந்தி அரசரத்தினம்**
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற துணைவேந்தர் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இரண்டாவது முறையாகவும் பதவிபெற்றுள்ளார்.
அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, சீரும் சிறப்புமாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

செ.மனிவர்னன் (குடும்பம்)
"அன்னை இல்லம்",
கல்வியங்காடு வடக்கு, நல்லூர்.

**வாணிரெக்ஸ்**
இல.81, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
021 222 5578

**மணமகள் தேவை**
யாழ். இந்து 04.12.1977 இல் பிறந்த உத்தர நட்சத்திரம் முதலாம் பாதம், 4 இல் செவ்வாய், உயரம் 5'7", அழகிய வெள்ளைநிற B.Sc விஞ்ஞான பட்டதாரி ஆசிரிய **மணமகனுக்கு** அரச அல்லது தனியார் தொழில் பார்க்கும் அழகான பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 021 321 0480 (47439) (4.3.6)

**தேவை**
நெல் கொள்வனவு செய்யப்படும். 20 அந்தர் தராசு உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 772 2215 (47431) (4.3.6)

**தேவை**
நல்லூரில் உள்ள சிறு கைத்தொழிலகத்திற்கு சுறுசுறுப்பான ஆண், பெண் வேலையாள்கள், சாரதிகள் தேவை.
(47440) (14.3.6)
தொடர்பு: 076 669 5559

**கோயில் மணி விற்பனைக்குண்டு**



- 10kg-500kg வரை வடிவமைக்கப்பட்டுள்ளன.
- சுத்தமான வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.
- தரமான ஒலிநயத்துடன் காணப்படுகின்றன.
- எங்களிடம் செப்பு கொடித்தம்பம் உண்டு.
- செப்பு கலசமும் உண்டு.
- திருவாசியும் உண்டு.

இந்தியாவின் மகாபலிபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல் சிலைகள், ஐம்பொன் சிலைகள் மற்றும் கோயில் தேவைகளுக்கான அனைத்துப் பொருள்களும் எங்களிடம் கிடைக்கும்.

விநியோகம் இலவசம்
உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் எங்கள் சேவைகள் இடம்பெறும்

வேலாயுதம் பத்மலால்
077 676 5504 (47411) (4.3.6)

# பாவனைக்கு உதவாத அரிசிப் பைகள் மீட்பு

ஓட்டமாவடி. ஏப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடியிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து பாவனைக்குதவாத 25 கிலோ கிராம் நிறையுடைய 26 அரிசிப் பைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.ஆர். ஹக்கீம் தெரிவித்தார். இந்த வர்த்தக நிலையத்தில் தரம் குறைந்த அரிசி விற்கப்படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து. வர்த்தக நிலையத்தை சோதனையிட்ட போதே பாவனைக்குதவாத அரிசி கைப்பற்றப்பட்டது என்று அவர் கூறினார்.

பாவனைக்குதவாத அரிசி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகளால் ஓட்டமாவடி ஆற்றில் கொட்டி அழிக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் சி.சிவசண்முகப்பிள்ளை அவர்களின் தாய்

**சிவசிதம்பரப்பிள்ளை செல்வமணி**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும் (47450) (10)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியா திருமதி கேதாரகௌரி செல்வராஜா அவர்களின் தந்தையார் 23.04.2014 (புதன் கிழமை) அன்று K.U. வீதி, கந்தரோடை, சுன்னாகத்தில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு. அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொ/ விவேகானந்தா கல்லூரி,
ஆசிரியர் நலம்புரி சங்கம்

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நல்லையா



யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்டிருந்த சின்னத்துரை நல்லையா (முன்னாள் உத்தியோகத்தர் - யாழ். செயலகம் (கச்சேரி) யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம் and MITSUBISHI MOTORS-ஓமான்) 27.04.2014 ஞாயிறு சுவர்க்க பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னத்துரை-ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் ஆசிரியர் பரிபூரண ஐஸ்வரியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தாவதியின் (மதி) அன்புக் கணவரும், தயாவதி (கோபி), தயாபரன் (ரஜன்), தயானந்தன் (குட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவப்பிரகாசம் (MLT), தருமலிங்கம் (பாலர்), கிருஷ்ணமூர்த்தி (ராசா), பரஞ்சோதி (சுபாஸ்), கருணாகரன் (பாபு) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற நந்தபாலன் (நந்தன்) மற்றும் ஜெயபாலன் (ஜெயா), ஜெயவதி (லதா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தொல்புரம் மேற்கில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (29.04.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: ரஜன் 0777 965998 (47451) (10)

தகவல் : மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தம்பிராசா கந்தசாமி

(முன்னாள் ஆசிரியர், யா/கோண்டாவில் இராம கிருஸ்ண மகா வித்தியாலயம்)



நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும் அருத்துசாலேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா கந்தசாமி நேற்று (28.04.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-இராசம்மா தம்பதியரின் புத்திரரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- தங்கமணி தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், திருமதி சரஸ்வதி சின்னத்துரையின் தம்பியும், சின்னத்துரையின் (இளைப்பாறிய லிகிதர்) மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்வேலியில் நடைபெறும். இறுதிக் கிரியைகள் நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/13594)(4.3.6) தகவல்: சரஸ்வதி (அக்கா)

# முதல் முறைப்பாட்டை பதிவு செய்தது சிங்கள ராவய

## விசேட பொலிஸ் பிரிவில்

கொழும்பு,ஏப்.29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைய நேற்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ள மதப் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் விசேட பொலிஸ் பிரிவுக்கு முதல் முறைப்பாடு கிடைத்துள்ளது. இந்த முறைப்பாட்டை சிங்களராவய அமைப்பு செய்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் நேற்றுக் காலை 10.30 மணிக்கு தனது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். பௌத்த மற்றும் மத விவகார அமைச்சின் 5 ஆவது மாடியில் இந்த விசேட பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாட்டில் இடம்பெறும் அனைத்து சம்ப வங்கள் தொடர்பிலும் விசா ரணை நடத்த பொதுச் சட்டம் இருக்கும் நிலையில், மதப் பிணக்குகள் தொடர்பில் விசாரணை நடத்தத் தனிப் பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட் டுள்ளதைச் சிலர் விமர்சித்துள்ளனர்.

அதேவேளை இந்தப் பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டமை குறித்து பொதுபல சேனா அமைப்பு பாராட்டியுள்ளது. (ச)

## விற்பனைக்கு

NPLH xxxx இலக்க JAC கன்ரர், 10½ அகலம் விற்பனைக் குண்டு.

T.P: 077 301 7484

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45நாள் நிரம்பிய அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 514 1182

இணுவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தையா-கமலநாதன் (B.Com)

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமைபுரியும் கந்தையா கமலநாதன் அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் 27.04.2014 நடைபெற்ற வெளிவாரி பட்டமளிப்பு விழாவில்

வணிகமாணி

பட்டம் பெற்றதை வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல பட்டங்கள் பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகிறோம்.




நண்பர்கள்.

உ. ஆர்பிராப். (47447) (4.3.6)

# கழிவுகளை அகற்றவும் வரி அறவீடு

கொழும்பு.ஏப்.29

கொழும்பு மாநகரின் கழிவு வெளியேற்றம் தொடர்பில் வரி அறவிடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது.

இது குறித்து ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கூறினார். கொழும்பு மாநகரின் கழிவு வெளியேற்றும் கட்டமைப்பு சுமார் 100 வருடங்கள் பழைமையானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனைப் புனரமைப்பதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



புதிய பிரிவுகள் 30.05.2014 அன்று ஆரம்பிக்க இருக்கின்றன.

பயிற்சியில் இணைய விரும்புவோர் நண்பகல் 12 மணி வரை தங்கள் பதிவுகளை பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளவும்.

பயிற்சிக் காலம் - 3 மாதம்

பயிற்சி விவரம் - அழகுக்கலை, Diploma Course, Cake Icing, தையல், Saree Work, Hand Work.

அழகுக்கலை Diploma Course பயிற்சிக் கட்டணம் 8000/= மட்டுமே

தொடர்பு: 077 936 2642 மதுரா அழகுக்கலை நிலையம் பழைய வீதி, கோப்பாய்.

* அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
* பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
* ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
* மகளிர் மட்டுமே.

## வெளிமடை உற்சவம்

பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும், பொங்கல் விழாவும் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளன. வெளிமடை உற்சவ, பொங்கல் விழாவுக்கான திருவிளக்கேற்றல் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம் பெற்றது. (ஓ-173)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சதாசிவம் கோகிலாதரன் BA

யாழ் பல்கலைக்கழகத்தில் 27.04.2014 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்

கலைமாணிப் பட்டம் (BA)

பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்கள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes! வாழ்த்துவோர்: (45521)(7.6.3)

அப்பா, அம்மா, சகோதரர்கள், அத்தான், மருமக்கள்.

நாவற்காடு, வரணி.

இலங்கையின் No1 குடும்ப சஞ்சிகை

ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி

எதிர் வரும் வியாழக்கிழமை வெளிவருகிறது

மே மாத இதழ்

உங்கள் பிரதிகளுக்கு முற்பதிவு செய்து கொள்ளுங்கள்

அன்பு + அறிவு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு ரூபா 60

# வடமாகாண சபையின் நேற்றைய அமர்வில் நிறைவேற்றப்பட்டன 23 பிரேரணைகள்

யாழ்ப்பாணம், ஏப்.29

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரி ஐ.நா சபையில் தீர்மானம் கொண்டு வந்த நாடுகளுக்கு வடக்கு மாகாண சபை நன்றி தெரிவித்த பிரேரணை உட்பட 23 பிரேரணைகள் வடக்கு மாகாண சபையின் நேற்றைய எட்டாவது அமர்வில் நிறைவேற்றப்பட்டன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை, ஐ.நா மனித உரிமைகள் சபையில் சர்வதேச விசாரணை தேவையென்று வலியுறுத்திய அதன் ஆணையாளருக்கும், விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் கொண்டு வந்த நாடுகளுக்கும் நன்றி.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் சர்வதேச விசாரணை தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கிய நாடுகளுக்கு நன்றி.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் இலங்கையில் இடம்பெற்ற மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமான சுதந்திர சர்வதேச விசாரணைக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள்.

புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புக்களையும், தனி நபர்களையும் தடை செய்தமை இலங்கை அரசின் ஜனநாயக விரோதச் செயல் என்றும், தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு இலங்கை அரசுக்கு அழைப்பு விடுப்பதாகவும் முன்மொழிந்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால், இரணைமடுக் குளத்தைப் புனரமைப்பதைத் தனியான திட்டமாகவும், யாழ். குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை இரணைமடுவுடன் இணைக்காது தனியான ஒரு திட்டமாகவும், குடாநாட்டின் கழிவகற்றும் வடிகாலமைப்புத் தேவைகளைத் தனியானதொரு திட்டமாகவும் நிறைவேற்ற வேண்டுமெனவும் குடாநாட்டின் உள்ளே உள்ள நீர் வளத்தை உகந்த முறையில் முகாமைத்துவம் செய்து குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் எனவும் இரணைமடுத் திட்டத்தை முன்னெடுக்க முனையும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையிடமும் இதற்குக் கடனுதவி செய்யும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் கோருகின்றோம் என்றும் முன்மொழிந்தார்.

கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பா.அரியரட்ணம், வடக்கு மாகாணத்தின் சகல திணைக்களங்களினதும் கடந்த 4 ஆண்டு கால நிதி அறிக்கையின் கணக்காய்வை, அரசியல் தலையீடுகளுக்கு அப்பால் சுதந்திரமாக வெளிப்படுத்த வேண்டும் என்று ஒரு பிரேரணையையும், வடக்கு மாகாணசபையின் கொடி, தேசியக் கொடி ஏற்றப்படும் சகல நிகழ்வுகளிலும் ஏற்றப்பட வேண்டும் என்பதுடன், தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று மற்றொரு பிரேரணையையும் முன்மொழிந்தார்.

யாழ். மாவட்ட உறுப்பினர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாணத்தில் சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அனைத்து ஊர்கள், வீதிகளின் பெயர்களும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கு உடனடியாக மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் இது முதலமைச்சரினால் நியமிக்கப்படும் புரதான வரலாற்றாய்வாளர்களை உள்ளடக்கிய குழுவினால் மேற்கொள்ளப்படும் என்றும் முன்மொழியப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலன், மாங்குளம் புகையிரத நிலையத்தில் சகல புகையிரதங்களும் தரித்துச் செல்ல வேண்டும்என்றபிரேரணையையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கலை, கலாசார மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையையும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான ஆசிரிய வள நிலையம், கணினி பயிற்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையையும் முன்மொழிந்தார்.

யாழ்.மாவட்ட உறுப்பினர் அ.பரஞ்சோதி, உள்ளூர் கள் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன், 2009 ஆம் ஆண்டு வரையில் வன்னியில் வசித்து இறுதிக் கட்டப் போரின் பின்னர் சொந்த இடங்களில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் மூலம் 25 ஆயிரம் ரூபாவும், ஏனைய பங்களிப்புக்கள் மூலம் 25 ஆயிரம் ரூபாவும் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இரண்டாவதாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அனைவருக்கும் கிடைக்காத அந்தப் பணத்தை கிடைக்க வழி செய்ய வேண்டும் என்றதொரு பிரேரணையையும்,

முள்ளிவாய்க்கால் மேற்கு மீனவர்கள் ஏற்கனவே பாவித்த இறங்குதுறையை அவர்களுக்கு விடுவித்துக் கொடுக்க வேண்டும் எனவும், கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறையை பொருத்தமான இடத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற மற்றொரு பிரேரணையையும் முன்மொழிந்தார்.

யாழ்.மாநகர சபைக்கான நீடிக்கப்பட்ட பதவிக் காலமும் முடிவடைவதால் அதற்குரிய தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தீர்மானம் முன்மொழிந்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை அந்தப் பகுதியிலேயே காணிகள் வழங்கி குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்மொழிந்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், தமிழ் மொழியை ஊக்குவிப்பதற்காக பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியை சிறப்புக் கல்வியாக கற்க விரும்புவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்தார். அத்துடன் வடக்கின் புராதன சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்என்றபிரேரணையையும் முன்மொழிந்தார்.

அனைத்துப் பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(ற-5)

## அறநெறிப் பாடசாலை அபிவிருத்திக்கு மாவட்டம் தோறும் செயற்றிட்டங்கள்

### முன்னெடுக்கப்படுவதாகக் கூறுகிறார் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப்.29

தற்றைய சூழலில் அறநெறிப் பாடசாலைகள் அவசியமானவை. எனவே அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மாவட்டம்தோறும் அது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் கூறினார்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தர்மாசிரியர்களுக்கான கருத்தரங்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் யாழ்.திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தலைமை யுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன் போது அவர் மேலும் கூறுகையில் : நல்லொழுக்க விழுமியங்களையும், சேவை மனப் பாங்குகளையும் மாணவர்களுக்கு போதிக்கக்கூடியதாக தர்மாசிரியர்கள் எவ்வித சம்பளமும் இன்றிச் சேவை நோக்குடன் எதிர்காலச் சந்ததியினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துபவர்களாக செயற்படுகின்றனர்.


எனவே அவர்களது கல்வி மட்டத்தை உயர்த்த வேண்டியது திணைக்களத்தின் கடமையாகும்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் என்ன தகைமையில் இருந்தாலும், இந்து இறுதி நிலைப் பரீட்சை நடத்தப்பட்டு சித்தியடைந்தவர்களாகவும், தர்மாசிரியர் பரீட்சையில் தகுதியுடையவர்களாகவும் இருக்கக் கூடியதாக அவர்களது கல்வி மட்டம் உயர வேண்டும் என்ற அடிப்படையில் தேவையான வளங்களை வழங்கி வருகின்றோம்.

சைவ சமயம், வரலாறு, வேதாகமம் பன்னிரு திருமுறை, சமய ஞானிகளும், பெரியார்களும், கோயில்களும் , கலைகளும் என்னும் ஐந்து நிலைகளைக் கொண்டது.

இந்த ஐந்து பாடங்களிலும் சித்தியடைந்தோரே தர்மாசிரியராகப் பட்டம் பெற முடியும்.

கருத்தரங்கின் மூலம் பெறப்படும் அறிவு ஆற்றல்கள் எமது மதத்தின் சிறப்பையும் பண்பாட்டையும் எடுத்துக்கூற உங்களுக்கு உந்து சக்தியாக அமையும் - என்றார். (வ-7)



தீவுப்பகுதிக்கு அதிவலுகூடிய மின்சாரத்தை விநியோகிப்பதற்கு முன்னேற்பாடாக பண்ணைக் கடற்கரை ஊடாக மின்கம்பங்களை நடும் பணியில் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

## காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகத்தில் நடைபெற்ற புத்தக தின நிகழ்வு

காரைநகர், ஏப் .29

சர்வதேச புத்தக தின விழா காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகத்தில் கடந்த புதன் கிழமை இரு அமர்வுகளாக இடம்பெற்றது.

காலை அமர்வில் நூலகத்தில் புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது. இதில் காரைநகர் கோட்டப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மாதர் வாசகர் வட்ட ஆரம்ப நிகழ்வு ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதில் 50 க்கு மேற்பட்ட காரைநகர் பெண்கள் கலந்து கொண்டனர். மாதர் வாசகர் வட்ட தலைவியாகக் கலந்துகொண்ட 50 பெண்களிலிருந்து இடைப்பிட்டியைச் சேர்ந்த ஞானாம்பிகை சிவசோதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மாலை நிகழ்வுகள் மாலை 4.30 மணிக்கு தலைவர் சிவா.தி.மகேசன் தலைமையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் மங்கல விளக்கேற்றலுடனும் ஆரம்பமானது. மாணவர்களின் கலை நிகழ்வுகள் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு, ஆசிரியர்களின் சிறப்புப் பட்டிமன்றம் என அறிவியல் சார் நிகழ்வுகள் ஐந்நூறுக்கும்மேற்பட்ட பார்வையாளர்கள் திரண்டிருக்க இடம்பெற்றன. மொத்தத்தில் நூலகத்தின் தேவையையும், அதன் அவசியத்தையும் இந்த நிகழ்வு எடுத்துக்காட்டியது. நூலகத்தை காரைநகர் மக்கள் எந்தளவுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இந்தச் சிறு நிகழ்வு உதாரணமாகும். எனவே அனைத்து மக்களும் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையாக நூலகத்தை முழுமையாகக் கட்டிமுடித்து காரைநகர் மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கவேண்டும் என்பதே தங்களின் எதிர்பார்ப்பாகும் என நிகழ்வுக்கு வருகை தந்திருந்த மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.



மாணவர்கள் நூல்களை ஆர்வமுடன் பார்வையிடுகின்றனர்...

இந்த நூலகம் இரு மாடிக் கட்டடத் தொகுதியாக அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு தற்போது ஒரு மாடியின் ஒருபகுதியே காரைநகர் அபிவிருத்திச் சபையால் பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து பூரணப்படுத்தப்பட்டு மாணவர் நூலகம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(வ-250)



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை காலை பஹ்ரேன் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார். இதன்போது அவருக்கு பஹ்ரேன் பிரதமர் அஹமட் அல் காலிபாவால் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. (ச)

## நாட்டில் விபத்துக்களால் இதுவரை 800 பேர் சாவு

### இந்தாண்டு மட்டும்

கொழும்பு.ஏப்.29

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை ஏற்பட்ட விபத்துக்களில் 800 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் நாட்டில் 9,000 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.



அஜித் ரோஹண

கடந்த ஆண்டில் 38,000 வாகனவிபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 2,350 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

சாரதிகளின் கவனவீனம், மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல் உட்பட பல காரணங்களால் இவ்வாறு உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தால் பொது வேட்பாளரை நிறுத்தமாட்டோம்


## சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பாரேயானால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும் அவசியமில்லை என்று மாதுளு வாவே சோபித தேரர் கூறி னார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உரு வாக்குவது பொது வேட்பாள ரின் பொறுப்பு. அரசை வீழ்த்தும் எண்ணம் எமக்கில்லை.



சோபித தேரர்

தேர்தலில் வெற்றி பெறும் பொது வேட்பாளர் ஆறு மாதங் களே ஜனாதிபதி பதவியில் இருப்பார்.

ஆறு மாதங்களுக் குள் நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கி விட்டு பதவியில் இருந்து விலக வேண்டும்.

நாட்டில் நடைமுறையில் இருக்கும் அரசமைப்புச் சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி, மகா நாயக்க தேரர்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் எதிர்க்கின்றன.

மஹிந்த சிந்தனையிலும் நாடாளுமன்றத்துக்கு அதி காரங்களை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை. பொது வேட்பாளர் தொடர்பாக பேசுவதற்கு இன் னும் காலம் இருக்கின்றது -என்றார். (ச)

## தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் பேச்சு

கொழும்பு.ஏப்.29

தேர்தல் சட்டங்களை திருத்துவது தொடர்பில் பேச்சு நடத்தப்பட உள்ளது .


பவ்ரல் அமைப்பு இந்த பேச்சுக்களை நடத்த உள்ளது.

மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தலின் போது தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பில் பேசப்பட்டிருந்தது. சட்டங்களைதிருத்துவது குறித்து பவ்ரல் அமைப்பு சில யோசனைகளை முன்வைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### வண. பென்ஜமின் ஜெயராஜா

(ஊழியன் தென் இந்திய திருச்சபை, தெல்லிப்பழை)



காரைநகரைப் பிறப்பிடமாகவும், கிறீஸ்தவ இறையியல் கல்லூரி வளாகம் மருதனார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வண. பென்ஜமின் ஜெயராஜா நேற்று (28.04.2014) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இறையியல் கல்லூரி வளாகம்,
மருதனார் மடம். (47461)

தகவல்: குடும்பத்தினர்.
0789131354, 0779059529

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சரவணபவானந்தன்

(சரவணை)



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சரவணபவானந்தன் நேற்று (28.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் தையல்முத்து தம்பதிய ரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், தவறஞ்சன் (SLIIT) மதிவதனி (மாணவி-யாழ்/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், மல்லிகாதேவி (லண்டன்), சவுந்தராம்பிகை, மணிமேகலை, சாரதாதேவி (லண்டன்) ஆகி யோரின் சகோதரனும், சுந்தரலிங்கம் (லண்டன்), சதாசிவம் (பண்டிதன்), கணேசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் நளாயினி, தவறாஜ், சுகந்தி, சுமணன், சுபகலா, சுகிர்தன், கவிதா, சிவறஞ்சன், மயூரன், அபிதன், ஜிவிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (01.05.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பயிரிக்கூடல்,
காரைநகர். (47454) (10)

தகவல் :
பிள்ளைகள், சகோதரர்கள்.

## மணவாளக் கோலம்

கைதடி, ஏப். 29

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மணவாளக் கோல விழாவையொட்டி நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு லிங்கேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

பகல் 11 மணிக்கு விசேட பூசை, திருவூஞ்சல் ஆகியவற்றை அடுத்து பெருமான் உள்வீதி, வெளிவீதியுலாவும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஓ)

## வீட்டுடன் கடை விற்பனைக்கு

கடற்கரை வீதி, குருநகரில் நான்கு புதிய கடையுடன் கூடிய சகல வசதிகளுடனான வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775386295, 0775515588

## தேவை

கணினியில் கணக்குகள் பதிவு செய்வதற்கு கணக்குப் பதிவாளர் தேவை. (பகுதி நேரம்)

தொடர்பு: 0714312730

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய நல்ல இன (லயன் செப்பேர்ட்) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (47455) (10)

தொடர்புகளுக்கு: 077 977 3488


## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அரு கில் பலாலி வீதியில் அறைகள் வாடகைக்கு உண்டு (படிக்கும் ஆண்களுக்கு மட்டும்) (47456) (10)

தொடர்புகளுக்கு: 071 825 3255

## மரண அறிவித்தல்

### புஸ்பராணி தர்மலிங்கம்



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புஸ்பராணி தர்மலிங்கம் (26.04.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், விமலச்சந்திரன் (கொலண்ட்), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சுதாயினி, சதீஸ்குமார் (பிரான்ஸ்), சசிகரன் (குட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபி, கவிதா, தேவராசா, சுரேகா, கமலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### அருட்திரு சுப்பையா தேவகரன்

Rev. Suppiah Thevaharan



யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தும்பளை பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் குருவான அருட்திரு சுப்பையா தேவகரன் நேற்று (28.04.2014) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் தவமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் செல்லம்மா தம்பதியரது அருமை மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரது மருமகனும், தேவவசீகரன், தேவசுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், டேவிட், புனிதகுணமலர், நந்தினி, தயாபரன் ஆகியோரது மைத்துனரும், தனலட்சுமியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணி முதலாக உடுப்பிட்டி தென் இந்திய திருச்சபை ஆலயத்தில் வைக்கப்பட்டு, பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆராதனையின் பின்னர், உடுப்பிட்டி தென் இந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: தவமலர் தேவகரன் (மனைவி)
வளலாய் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

# யாழ்., வவுனியா மேலதிக அரச அதிபர்கள் வடக்கு மாகாண சபைக்கு திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர்கள் இருவரும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் இவர்கள் இருவரும் இடமாற்றம் தொடர்பில் செய்த மேன்முறையீட்டுக்கான பதில் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என்று தெரியவருகின்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன் ஆகிய இருவரையுமே மத்திய அரசிலிருந்து விடுவித்து மாகாணசபைக்குள் இணைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இருவரும் நிர்வாகசேவை வகுப்பு - I ஐச் சேர்ந்தவர்கள். அவர்களது பதவிநிலைக்குரிய வடக்கு மாகாண செயலாளர் பதவிகள் எதுவும் வெற்றிடமாக இல்லை. இதனால் இருவரும் மத்திய அரசிலிருந்து தம்மை இடமாற்றம் செய்வது தொடர்பில் மேன்முறையீடு செய்திருந்தனர். ஆனாலும் அதற்குரிய பதில் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சரினால் கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபை பொறுப்பேற்கப்பட்ட போது இரு சிரேஷ்ட அலுவலர்கள் தேவை என்று அவர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே சபை அமைக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் மத்திய அரசினால் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-5)

# முகம் தெரியாது 'ஹெல்மட்' அணிந்து சென்றால் சோதனை

## கொள்ளைகளை அடுத்து நடவடிக்கை

கொழும்பு.ஏப்.29

நாடு முழுவதும் முகத்தை முழுவதுமாக மூடிய நிலையில் தலைக் கவசங்களை அணிந்து செல்லும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளை சோதனையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இவ்வாறான தலைக் கவசங்களை அணிந்து செல்வோர் வங்கிகளிலும் நகைக்கடைகளிலும் நடத்திய கொள்ளைகளை அடுத்தே சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முகத்தை மூடிய தலைக்கவசங்கள் இலங்கையில் இன்னமும் தடைசெய்யப்படவில்லை. எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என்று பொலிஸார் கூறினர். (ச)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பயங்கரவாத

வேற்றப்பட்ட மேலதிக முன்மொழிவுகளின் அடிப்படையில் நிரந்தரச் சட்டமாக்கின.

இந்தச் சட்டத்தை இலங்கை வாழ் தமிழ் தேசியத்தின் இன ஒடுக்கு முறைச் சட்டமாக தமிழ் மக்கள் மீது காலத்துக் காலம் ஆட்சியில் அமரும் அரசுகள் நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும், பயங்கரவாத தடைச் சட்டம் இரத்துச் செய்யப்படாது. மீண்டும் எமது இனத்தின் அமைதி வாழ்வைக் குலைப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வருவது கவலையளிக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தினால், எந்த விதமான பயங்கரவாத செயல்களுடன் தொடர்பில்லாத நபர்களைக் கூட பயங்கரவாதம் தொடர்பான தகவல்களை வழங்கத் தவறினார் என்ற ஒரு பொய்யான குற்றத்தை சுமத்தி 7 ஆண்டுகள் வரை விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்க முடியும். பிணையில் விடுவிக்க முடியாதவாறு தடுப்புக் காவலைத் தொடர முடியும். பொலிஸாரால் எந்த நேரமும் ஒரு காரணத்தைக் கூறி கைது செய்ய முடியும்.

கைது செய்யப்படும் எவரும் 72 மணி நேரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு சித்திரவதை மூலம் ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்று நீதிமன்றம் ஒன்றின் முன்னிறுத்தி மூன்று மாத காலத்திற்கு ஒரு தடவைப்படி ஆறு தடவைகள் தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

ஊடகங்களை ஏதாவது ஒரு காரணம் கூறி தடை செய்ய முடியும். இதன் மூலம் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படும் சரத்து உள்வாங்கப்பட்டுள்ளது. பொதுவாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாத குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்து வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

எனவே மேற்படி சரத்துக்கள் எமது இன ஒடுக்குமுறைக்காக பேரினவாத அரசுகள் பாவித்து வருகின்றமை வெளிப்படையானது. 1966 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நிறைவேற்றப்பட்ட சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாட்டு ஒப்பந்தமானது. சட்டவிரோத கைதுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பாரபட்சமான இன - மத - பாகுபாடுகளுடனான விசாரணைகளை ஏற்றுக்கொள்ளவில்லை, மனித சித்திரவதைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டமானது முற்று முழுதாக ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கை உள்பட சகல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச அரசியல் குடியியல் உரிமைக்கான உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானது.

இந்தச் சட்டம் இன்னமும் ஒழிக்கப்படாமையினால் புலிகள் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட எமது இளைஞர்கள் மீண்டும் கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன நல்லிணக்கம் காணப்பட வேண்டும் என்று எமது ஜனாதிபதி உள்பட பல முக்கிய அமைச்சர்கள் மிக வலுவாக பேசி வருகின்றார்கள். இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் முதலில் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அரசின் இந்த நடவடிக்கையிலேயே தற்போது சகலராலும் பேசப்பட்டு வரும் இன நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன"- என்று தெரிவித்தார்.

குறித்த பிரேரணை ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது. (ஈ-5)

## மஹிந்த

அரசால் நியமிக்கப்பட்டுள்ள விசேட பிரதிநிதி சிறில் ரமபோஷ. புதிய அரச முறைமை ஒன்றைக் கட்டியெழுப்புவதில் தென்னாபிரிக்காவின் மீளெழுச்சி பலநாடுகளை எம்பக்கம் திரும்ப வைத்துள்ளது. ஜனநாயக விழுமியங்களைப் பேணி, மனித உரிமைகளை மதிக்கும் எமது போக்கால் நாம் மேலும் மதிக்கப்படுகின்றோம். அதனாலேயே இலங்கை உட்படப் பல நாடுகள் எம்மை மதித்து நோக்கத் தொடங்கியுள்ளன - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு எமது ஜனாதிபதி ஜேக்கப் சூமோ சென்றிருந்தார். அப்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "ஜனாதிபதி சூமோ அவர்களே, இலங்கையில் எமது மக்கள் மத்தியில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு உதவ மாட்டீர்களா?. இலங்கை மக்களை இணைப்பதில் தென்னாபிரிக்கா முக்கிய பங்காற்றுவதை நாம் விரும்புகின்றோம்"- என்று கூறியிருந்தார். அதன் அடிப்படையிலேயே நாம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளோம்.

எம்மைத் தோற்றுப் போன நாடாகவே பல நாடுகள் முன்னர் கருதின. அத்தகைய நாடுகள் தற்போது எம்மைத் தேடி வருகின்றன."- என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் விசேட பிரதிநிதி என்ற பொறுப்பை ஏற்ற பின்னர் சிறில் ராமபோஷ வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்துள்ளமை இதுவே முதற்தடவையாகும்.(ற)

## யாழ்.பல்கலை

னம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் எட்டாவது அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் கழகம் தொடர்பில் இரண்டு தீர்மானங்கள் உறுப்பினரால் கொண்டு வரப்பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக வவுனியா வளாகத்தில் இதுவரை காலமும் நடைபெற்று வந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகிய கற்கை நெறிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரி சமர்ப்பித்த தீர்மானத்தை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வழிமொழிந்தார். இது தொடர்பில் எதிர்கட்சி உறுப்பினர் தவராசா, மத்திய அரசுக்கு உட்பட்ட விடயம் என்று குறிப்பிட்டார். இருப்பினும் மத்திய அரசைக் கோரும் உரிமை வடக்கு மாகாண சபைக்கு இருக்கின்றது என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார்.

இரண்டாவதாக, அண்மைக் காலமாக யாழ்.பல்கலைக் கழகத்தினுள் புலனாய்வுப் பிரிவினரின் உட்பிரவேசமானது, குழப்பத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எமது மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை செம்மையாக மேற்கொள்வதற்கு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் பொலிஸ், இராணுவம், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தலையீடுகளையும், அவர்களின் உட்பிரவேசத்தினையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோருகின்றோம் என்று ஜி.ரி.லிங்கநாதன் முன்மொழிந்த பிரேரணையை பா.அரியரட்ணம் வழிமொழிந்தார். (ற-5)

## பேச்சுகளின்

குறித்த அமைதி முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்பட்டிருந்த எரிக் சொல்ஹெய்ம், தற்போது அது தொடர்பான நூல் ஒன்றை எழுதி வருகின்றார். அது குறித்து டுவிற்றர் சமூக வலைத் தளத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அமைதி முயற்சிகளின் போது என்ன நடந்தது என்பதை நேர்மையாக எடுத்துக் காட்டுவதே எனது நோக்கம். விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுடன் நடத்தப்பட்ட பேச்சு பற்றிய அனைத்துத் தகவல்களும் இந்தியாவுடன் பரிமாறப்பட்டன. அமைதி முயற்சிகளுக்கு, வெளியே இருந்து ஆதரவளித்த நாடுகளில் முக்கியமான நாடு இந்தியா"-என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## உறுதியளித்ததை

கட்சித் தலைவர் சி.தவராசா ஆற்றிய கன்னி உரைக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"கதிரை ஒன்றின் நான்கு கால்களையும் உடைந்த தடிகளை வைத்துச் சரிசெய்து தந்து விட்டு, 'கதிரை தந்தாகி விட்டது அதில் இருங்கள், அதில் இருங்கள்' என்று கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கதிரையில் இருந்தால் நிச்சயம் கீழே தான் விழ வேண்டும்.

வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்ற பின்னர் சட்டத்தின் பிரகாரம் எங்களுக்கு வழங்கப்பட்டவற்றை தாருங்கள் என்று கேட்டிருந்தோம். போர் இடம்பெற்ற காலத்தில் வடக்கு மாகாணத்தை ஆண்ட ஒருவரையே ஆளுநராக வைத்திருக்காதீர்கள், எங்களுக்கு சிவில் சமூகத்தில் இருக்கும் ஒருவரை ஆளுநராகத் தாருங்கள் என்று கேட்டிருந்தோம். அதற்கு முடியாது என்றார்கள். இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் அவருடைய பதவிக் காலம் முடிவடையும் வரையில் பொறுத்திருங்கள் என்று சொன்னார்கள்.

மாகாணசபையின் 32 ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதியும் முதலமைச்சரும் சேர்ந்து கருத்தொருமித்து வைத்திருக்கும் ஒருவரைத்தான் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு (பிரதம செயலாளர்) நியமிக்க வேண்டும் என்று உள்ளது. அதனடிப்படையில் அவரை நியமியுங்கள் என்று கேட்டோம். அதற்கும் அவர் (ஜனாதிபதி) சரி என்று கூறி இன்றே கடிதம் தரப்படும் என்று கூறினார். ஆனால் இன்று வரையில் நொண்டிச் சாட்டுக்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்"- என்று தெரிவித்தார் முதலமைச்சர்,

"இன்னொரு அமைச்சர் (பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்) வடக்கு மாகாணத்திற்கு நாங்கள் பல்வேறு அபிவிருத்திகளையும் செய்து விட்டோம். அந்த மக்கள் எங்களுக்கு வாக்களிக்கவில்லை. அதனால் வடக்கு மாகாண சபையை செயற்பட விடமாட்டோம் என்று கூறியுள்ளாராம். எனக்கு இப்போது சொன்னார்கள்" என்றும் தனது உரையில் குறிப்பிட்டார். (ற-5)

## திருவடிநிலை

திருவடிநிலைக் கடற்பரப்பில் நேற்று பிற்பகல் வட்டு பிளவத்தையை சேர்ந்த இளைஞர்கள் குளிப்பதற்காக சென்றுள்ளனர். அவர்கள் அங்கு உள் நீச்சலில் ஈடுபடும் போது வெள்ளை வேட்டியினால் சுற்றப்பட்டிருந்த இந்த வைரவர் சிலை அவர்களின் கைகளில் சிக்கியுள்ளது.

உடனே சிலையை கரைக்கு கொண்டு வந்து அயல் கிராமங்களில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து நேற்றிரவு 8 மணியளவில் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்திற்கு எடுத்துச் சென்று அங்குள்ள நரசிங்க சித்தர் சுவாமிகளிடம் ஒப்படைத்தனர். தற்போது குறித்த வைரவர் சிலைக்கு பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு விக்கிரகம் அங்கேயேவைக்கப்பட்டுள்ளது. (ற-21)

## கமலை

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சி.தவராசாவை வரவேற்று உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தவராசா நாடாளுமன்றத்தில் இருந்தவர். அனுபவம் மிக்கவர். எனவே எங்களின் வருங்கால நடவடிக்கைகள் காரசாரமாகவும்நன்றாகவும் இருக்கலாம் என்று எதிர்பார்க்கலாம். அதேநேரத்தில்முன்னர் இருந்த நண்பர் கமலேந்திரனை நீதிமன்றம் அவரை குற்றவாளி என்று காணாதவிடத்து, கட்சி அவரை குற்றவாளி என்று கண்டு வெளியேற்றி நண்பரை இங்கு கொண்டு வந்தது வேதனையாக இருக்கின்றது.

சட்டத்தைப் பொறுத்த வரையில் கமலேந்திரன் நிரபராதி என்றுதான் நம்பிக் கொண்டிருக்கின்றோம். வழக்கு முடிவடைவதற்கு முன்பே அவரைக் குற்றவாளி என்று கண்டு கட்சியை விட்டு வெளியேற்றி நண்பரைக் கொண்டு வந்தது ஏதோ போல் இருக்கின்றது"- என்று உரையின்போது குறிப்பிட்டார் முதலமைச்சர். (ற-5)

## சுற்றாடல்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை பிரதிபொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தினவுடன் கலந்துரையாடி நடைமுறைபடுத்தலாம் என்றும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொல்கள பரிசோதனைகள் தற்போது நடத்தப்படுவதில்லை. அதனால் சில இடங்களில் கொல்களங்கள் செயற்படுத்துவதில்லை மற்றும் சில இடங்களில் பரிசோதனை செய்யப்படாமல் செயற்படுகின்றன. அதற்கான மாற்று ஏற்பாடாக அரச கால்நடை மருத்துவர்களை இணைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது என்றும் மருத்துவ சங்கம் தகவல் கூறியுள்ளது.

எனினும் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண,

"அவ்வாறு சுற்றாடல் பொலிஸாரை பணிகளில் இணைப்பதாக இருந்தால் பொது சுகாதார பரிசோதகர்கள் நாடளாவிய ரீதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையைக் கைவிடுவர். தவிர பொது சுகாதார பரிசோதகர் விடயத்தில் தலையிட மருத்துவ சங்கத்துக்கு எந்த உரிமையும் இல்லை. கொல்கள பரிசோதனைக்கு கால்நடை மருத்துவர்களை இணைப்பது பற்றி மருத்துவ சங்கம் கூறமுடியாது. அதனை குறித்த பிரதேச சபைகளது தவிசாளர்களே முடிவெடுக்க வேண்டும். பொது சுகாதார பரிசோதகர்கள் விடயத்தில் மருத்துவ சங்கம் முடிவெடுக்க முடியாது"- என எச்சரித்துள்ளார். (ற-4)

## வாகனக்

வடக்கு மாகாணசபை அமைக்கப்படுவதற்கு முன்பாகவே தீர்வையற்ற வாகன இறக்குமதி தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சால் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. அதன்படி இரண்டரை வருடங்கள் உறுப்பினராக இருந்த ஒருவருக்கே தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். அதனால் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எவராலும் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரத்தை பெற முடியவில்லை. இந்த நிலையிலேயே அவைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறும்போது,

"வடக்கு மாகாணசபை உறுப்பினர்களும் அதனைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, ஆறு மாத காலம் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதியை வழங்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். இது தொடர்பில் குறித்த சுற்றறிக்கையை விடுத்த உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா மற்றும் ஜனாதிபதியிடமும், இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

அதேவேளை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் தொலைபேசிக் கொடுப்பனவை, அவர்களது மாதாந்தச் சம்பளத்துடன் படியாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டு ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

# கிளிநொச்சி உதைபந்தாட்டத்தில் 2 பிரிவுகளிலும் பூநகரி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.29

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்களில் இரு பிரிவிலும் பூநகரி பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பரவிப்பாஞ்சான் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவு வரை எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் பூநகரி பிரதேச செயலக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

**இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவு வரை எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.**

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் பூநகரி பிரதேச செயலக அணி 2:1 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

# வவுனியா மாணவர்களின் கபடிப் போட்டி ஆரம்பம்



கபடிப் போட்டியில் பங்கு பற்றும் அணிகள்

வவுனியா,ஏப்.29

வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான மாவட்ட மட்ட கபடிப் போட்டி கடந்த 26ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பட்டாணிச்சூர் புளியங்குளம் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றிய தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய. சு.குமாரசாமி, வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றிய செயலாளர் கு.சஜிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதமவிருந்தினர் தேசமான்ய.சு.குமாரசாமி தனது உரையில்,எமது வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும், விளையாட்டுத்துறையையும் உன்னிப்பாக அவதானிப்பதாகவும், இவ் இரு துறையிலும் மாணவர்கள் முன்னேறிச் செல்வதற்கு எமது வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் உதவிபுரியும் எனவும் தெரிவித்தார். (த-421)

# கரப்பந்தாட்டம் இன்று மன்னாரில்

யாழ்ப்பாணம், ஏப்.29

மன்னார் மாவட்ட பாடசாலைகளின் 15 வயது, 17 வயது, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கருங்கண்டல் றோ.க.த. மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை புதன்கிழமை கருங்கண்டல் றோ.க.த. மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

15 வயது, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் கருங்கண்டல் றோ.க.த. மகா வித்தியாலய மைதானத்தில் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளன. (த-23)

# இறுதி ஆட்டத்துக்கு சங்கானை ஸ்ரீ பாரதி

வலி. வடக்கு, ஏப். 29

தெல்லிப்பழை இளைஞர் சம்மேளனம் யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்துடன்இணைந்து நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் சங்கானை ஸ்ரீ பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகமும் சங்கானை ஸ்ரீ பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப்போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் சங்கானை ஸ்ரீ பாரதி விளையாட்டுக்கழகம் 25:20, 25:19, 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் பிரதீப் விளையாட்டுக் கழகத்தை வெற்றி, பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

# ஆட்டம் சமநிலையில்


யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் 'சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2 லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன்.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்றஆட்டத்தில்ஊரெழுறோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மோரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# வென்றது தெல்லிப்பழை



கயிறிழுத்தல் போட்டி ஒரு காட்சி

வலி. வடக்கு. ஏப். 29

யாழ்.மாவட்ட நலன்புரிச் சங்கம் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பிரதேச செயலகங் களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கயிறு இழுத் தல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் செவ்வாய்க் கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களைத் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வென்று சம்பியனாகியது. (த-86)

# 15 வயது பெண்களுக்கான கபடியில் பருத்தித்துறை மெதடிஸ்த வெற்றி

வலி. வடக்கு. ஏப். 29

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாவட்ட சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயமும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்டாலும் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி அணியின் கைகளே மைதானத்தில் மேலோங்கிக் காணப்பட்டன.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி 34:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் இளவாலைகன்னியர்மடம்மகா வித்தியாலயத்தைவெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பெற்றுக் கொண்டது. (த-86)

# இறுதியாட்டம் இன்று



மன்னார், ஏப்.29

மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க் கிழமை அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து முருங்கன் மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் அரிப்பு றோ.க.த. பாடசால்ல அணியை எதிர்த்து பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (த-23)

# ஜொனியன்ஸை வீழ்த்தியது யாழ்.பல்கலைக் கழக அணி

வலி. வடக்கு. ஏப். 29

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும், கிரிக்கெட் அணியும் இணைந்து, அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 15 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் யாழ்ப்பாண ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

அதில விஷ்ணுராம் 76 ஓட்டங்களையும் அச்சுதன் 51 ஓட்டங்களையும் சற்குணேஸ்வரன் 20 ஓட்டங்களையும் தேவவிதுரன் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அகிலன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் காணாமிர்தன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் காண்டிபன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வவேந்திரா 63 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 47 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

லவேந்திரா 79 ஓட்டங்களையும், காணாமிர்தன் 45 ஓட்டங்களையும், விதுசன் 18 ஓட்டங்களையும், காண்டீபன் 17 ஓட்டங்களையும், சஞ்சயன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பல்கலைக்கழக அணி சார்பில் பந்து வீசிய அச்சுதன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் விதுஷ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 52 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் தரணிதரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் தேவவிதுரன், தசிந்தன் முறையே 30, 36 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினார்கள்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லவேந்திரா தெரிவு செய்யப்பட்டார். (ந-86)

# கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட்

கிளிநொச்சி,ஏப்.29

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி வியாழக் கிழமை முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

# முல்லைத்தீவு முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வடமாகாண ரீதியிலான ஆண்களுக்கான மல்யுத்த போட்டி கடந்த வாரம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி முதலாம் இடத்தையும் யாழ்.மாவட்ட அணி இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன. (த-23)

# பஞ்சாப்புக்கு தொடர் வெற்றி



பெங்களூர்ரோயல்சலஞ்சர்ஸ் அணியை 5 இலக்குகளால்வெற்றி பெற்றது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி. ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் தொடரில் நேற்று டுபாயில் நடைபெற்ற 18ஆவது ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்- கிங்ஸ் லெவன் பஞ்சாப்அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனை அடுத்து முதலில் விளையாடிய பெங்களூர் அணிக்கு, பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் கடும் சவாலாக விளங்கினர். குறிப்பாக முன்வரிசை வீரர்கள் சந்தீப் சர்மாவின் மிரட்டல் பந்துவீச்சில் இலக்கைப் பறிகொடுத்து வெளியேறினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கெய்ல் 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். விராட் ஹோக்லி 4 ஓட் டங்களில் இலக்கை இழந்து ரசிகர்களை ஏமாற்றினார். நெருக்கடியான நேரத்தில் கைகொடுத்த யுவராஜ் சிங் 32 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் உட்பட 35 ஓட்டங்கள் சேர்த்து ஆறுதல் அளித்தார். இதேபோல் டிவில்லியர்ஸ் 17 ஓட்டங்களும், மோர்கல் 15 ஓட்டங்களும் சேர்க்க, பெங்களூர் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகள் இழப்பிற்கு 124 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில் சந்தீப் சர்மா 3 இலக்குகளையும் ஜோன்சன், ரிஷி தவான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் பாலாஜி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 125 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பஞ்சாப் அணி 18.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 127ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றியை தமதாக்கியது. அவ்வணி சார்பாக விரேந்தர் சேவாக் 32 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 26 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததோடு பெய்லி 16 ஓட்டங்களையும் ரிஷி தவான் 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பந்து வீச்சில் வருன் ஆருன், சகால் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் டின்டா ஒரு இலக்கையும் கைப் பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சண்டீப் சர்மா தெரிவு செய்யப்பட்டார். (400)

# கும்ளேயின் ஆலோசனை உதவியாக அமைந்தது

கும்ளேயின் ஆலோ சனை உதவியாக இருக் கிறது என்று கோரி அண் டர்சன் கூறியுள்ளார்.

நியூசிலாந்தின் அதிரடி ஆட்டக்காரர் கோரி அண் டர்சன் ஐ.பி.எல். கிரிக் கெட்டில் மும்பை இந்தி யன்ஸ் அணியில் விளை யாடி வருகிறார்.

மும்பை அணியின் சிறப்பு ஆலோசகர் அனில் கும் ளேயின் ஆலோசனைகள் தனக்கு உதவிகர மாக இருப்பதாக அண் டர்சன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறி யதாவது:-

சிறந்த சுழற்பந்து வீர ரான அனில் கும்ளே எனக்கு சுழற்பந்து வீச்சை எப்படி எதிர்கொள்வது என்று ஆலோசனைகள் வழங்கியுள்ளார்.

இது எனக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அந்த ஆலோசனைகள் உலகத் தரம் வாய்ந்த சுழற் பந்து வீரர்களுக்கு எதிராகச் சிறப்பாக விளையாட பயன்படும், நாங்கள் கடுமையாக உழைக்கிறோம் என்றும்விரைவில்வெற்றிப் பாதைக்குத் திரும்பு வோம் எனவும் கூறியுள்ளார். (கு)

# இப்படியும் பந்தயம்

லிவர்பூல் அணி வெற்றி பெற்றால் என்னுடைய மனைவியை நிர்வாணமாக ஓட வைப்பேன் என்று உதைபந்து ரசிகர் ஒருவர் வித்தியாசமான பந்தயத்தைக் கட்டியுள்ளார்.


இங்கிலாந்து நாட்டில் இங்கிலீஷ் பிரிமியர் உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

நேற்று முன் தினம் லிவர்பூல் அணி செல்ஸி அணியுடன் மோதிய போட்டி லண்டனில் நடந்தது. இப்போட்டியில் லிவர்பூல் அணி வெற்றி பெற்றால் தன்னுடைய ஆண் உறுப்பில் லிவர்பூல் அணியின் இலச்சினையில் இடம் பெற்றுள்ள பறவையின் படத்தை பச்சை குத்திக்கொள்வதாக ஒரு ரசிகர் நண்பர்களிடம் பந்தயம் கட்டியுள்ளார்.

ரஷித் என்ற மற்றொரு ரசிகர் லிவர்பூல் அணி வெற்றி பெற்றால் அதே மைதானத்தில் தன்னுடைய மனைவியை நிர்வாணமாக ஓடவைப்பதாக பந்தயம் கட்டியுள்ளார். இவருக்கு மூன்று மனைவிகளும் ஐந்து குழந்தைகளும் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நல்லவேளையாக நேற்று முன் தினம் நடந்த போட்டியில் லிவர்பூல் அணி 0-2 என்ற கோல் கணக்கில் செல்ஸி அணியிடம் தோல்வி அடைந்தது. இதனால் இந்த விபரீதப் பந்தயங்கள் நடைபெறாமல் போனது.

இது போன்ற விவகாரமான பந்தயங்களை ரசிகர்கள் மேற்கொள்வதற்கு தடைவிதிக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் இங்கிலாந்து அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (கு)



பத்ரிநாத்

# ட்ராவிட்டை பின்பற்றுகிறேன்

இந்திய கிரிக்கெட் வீரர் பத்ரிநாத், தாம் ராகுல் ட்ராவிட்டைப் பின்பற்றி விளையாடுவதாக மாவட்ட கிரிக்கெட் சங்க நிகழ்ச்சியில் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில், மாவட்ட அளவில் நடந்த கிரிக்கெட் போட்டிகளில் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு இடையே நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கும், சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இந்திய கிரிக்கெட் வீரர் பத்ரிநாத் கூறுகையில், நான் சிறுவயதில் இருந்தே கிரிக்கெட் மீது அளவு கடந்த ஆர்வம் கொண்டவன்.

எனது விளையாட்டு, இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல் ட்ராவிட் ஆட்டத்தைப் போல் இருப்பதாக பலர் கூறுகிறார்கள். நான் ராகுல் ட்ராவிட் ஆட்டத்தை மிகவும் ரசிப்பேன். வரும் காலத்தில் அவரைப் போலவே வரவேண்டும் என்று என் சிறுவயதில் இருந்தே ஆசைப்பட்டேன். அதன்படி அவருடைய ஆட்டத்தைப் பின்பற்றி விளையாடி வருகிறேன். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என கூறியுள்ளார்.(கு)

# விருதுகள் விழாவை புறக்கணித்த யுவராஜ்



ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பத்ம விருதுகள் வழங்கும் விழாவில் கிரிக்கெட் வீரர் யுவராஜ் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதி மாளிகையில் பத்ம விருதுகள் வழங்கப்பட்டன, இவ்விழாவில் பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் சுஷில்குமார் ஷிண்டே, ஆனந்த் சர்மா ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் யுவராஜ் சிங், ஷார்ஜாவில் நடைபெறும் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதால் கலந்துகொள்ள முடியவில்லை. (கு)

# ஷரபோவா வெற்றி

போர்சே கிரோன் பிரிக் தொடரில் தொடரின் இறுதிப் போட்டிக்கு ரஷ்யாவின் மரியா ஷரபோவா தெரிவாகியுள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற சாரா ஈரானி உடனான போட்டியில் 6:1, 6:2 என்ற கணக்கில் வெற்றி பெற்ற தன் அடிப்படையில் அவர் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளார்.

மரியா ஷரபோவா கடந்த வருடம் செய்திருந்த சத்திர சிகிக்சை காரணமாக கடந்த நான்கு மாதங்களாக எந்தப் போட்டிகளிலும் விளையாடாதிருந்தார்.

இந்த நிலையில் சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் பங்கேற்கும் முதலாவது தொடரில் தொடர்ந்து 12 போட்டிகளில் வெற்றியைப் பதிவு செய்துள்ளார். (கு)



ஷரபோவா

# தோல்வியை மறப்போம்



கோஹ்லி

ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்ததை மறக்க விரும்புகிறோம் என்று பெங்களூர் அணித் தலைவர் கோஹ்லி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில 14ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி ராஜஸ்தானின் அபாரமான பந்துவீச்சில் திணறியது. அந்த அணி 70 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக அணித் தலைவர் கோஹ்லி 21 ஓட்டங்கள் எடுத்தார். 3 வீரர்கள் டக் அவுட் ஆனார்கள்.

ராஜஸ்தான் வீரர் தாம்பே 4 இலக்குகளை வீழ்த்தினார். பெங்களூர் அணியின் குறைந்தபட்ச ஓட்டம் இதுவாகும். இதற்கு முன்பு கொல்கத்தாவுக்கு எதிராக 82 ஓட்டங்களில் ஆட்டமிழந்திருந்தது. 71 ஓட்டங்கள் இலக்கை ராஜஸ்தான் அணி 13 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. இந்தத் தோல்வி குறித்து பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில், இந்த மோசமான தோல்வி வருத்தம் அளிக்கிறது. ஒவ்வொரு பந்துப் பரிமாற்றத்திலும் இலக்கு சரிந்தால் நெருக்கடி ஏற்பட்டுவிடும். இதுபோல் இந்த ஆட்டத்தில் நடந்துவிட்டது. ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால நாங்கள் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும் இந்த மோசமான தோல்வியை சீக்கிரம் மறக்க விரும்புகிறோம் எனவும் கூறியுள்ளார். (கு)

**இன்று குதூகல ஆரம்பம்**

**MASTER INSTITUTE**
(மனோகரா தியேட்டர் சந்தி அருகே
நாவலர் வீதியில்- (தாரணி ஆர்ட்ஸ்)
CHEMISTRY திங்கள் தோறும் (3.30 P.M- 5.30 P.M)
BY : Singam Master (Royal) 0771966558
BIOLOGY செவ்வாய் தோறும் (3.30 P.M- 5.30 P.M)
BY : வித்தியா மாஸ்டர் (தினக்குரல்) 0717730838
நாடறிந்த ஆசான்களின் நற்சேவை
எவரும் சேரலாம் English/ Tamil Medium


**வீட்டுப்பணிப்பெண் தேவை**

கச்சேரிக்கு அருகில் வசிக்கும் அரச உத்தியோகத்தரின் சிறிய குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
வேலை நேரம் காலை 7 முதல் பி.ப.4 வரை.
(47446) (12.3.6)
**தொடர்பு: 077 233 4288**

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
மீண்டும் இங்கே
எமது நிறுவன புகழ் பூத்த கணித ஆசான்
C.K.B தயாளன்
O/L Day class, தரம் 9,10
O/L Evening Batch.
சிறப்பாக துரித மீட்டல் பயிற்சியுடன்
(C/13578)(7.6.3)

40ஆவது வருட சேவையில்
**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
பிரிவு II
**O/L DAY CLASS**
8.00-2.00p.m வரை
ஆரம்பம்: 30.04.2014
* கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
* இப்பிரிவிற்கு 60 பேர் மட்டுமே. அனுமதிகளை 29ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும்
* யாழ்.நகரில் O/L DAY CLASS இங்கு மட்டுமே சிறப்பாக நடைபெறும்.
* 2013 ஆம் ஆண்டு 99% சித்தியடைந்த பெருமை இந்நிறுவனத்திற்கே.
(C/13577)(7.6.3)

# சிறப்பாக ஆடுகிறோம்



சிறப்பான ஆட்டத்தால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற உதவிய சுமித், மக்கலத்துக்கு அணித் தலைவர் டோனி தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். ஐதராபாத்துக்கெதிரான போட்டியில் சென்னை அணி தொடர்ந்து 4ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த வெற்றி குறித்து சென்னை அணியின் தலைவர் டோனி கூறுகையில், பந்தை மாற்றம் செய்த பிறகு ஆட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. பனித் துளிகள் இருந்ததால் ஐதராபாத் வீரர்களால் திட்டமிட்டபடி பந்துவீச முடியவில்லை.

இதனால் நாணயச் சுழற்சியில் தோற்றது எங்களுக்கு உதவியாகவே இருந்தது. ஒட்டு மொத்தமாக நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம். சுமித், மக்கலம் தொடக்கம் மிகவும் சிறப்பாக இருந்தது என்று கூறியுள்ளார்.

(த)

hp Indigo **DIGITAL COLOUR PRINTING**
12 COLOUR - 2800dpi
New Syenthetic Album Print
10 x 30 -12 x 30 - 225.00
4R ( 4x6) - 8.50 - invitation,visiting card
A4 - 12.00 -A3 - 25.00
A2 - 75.00 -A1 -150.00
(minimum order 100 print)
200 YEARS NOT COLOUR FADE
மூர்த்தி டிஜிற்றல்கலர் லாப்
62/20,ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்- 021 221 9399
(C/13511)

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
**பயிற்சி நெறி**
**HND in PHARMACY**
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
LAVA HOSPITALS
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)
(47172) (7.6.3)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



அடிப்படை
**ஆங்கிலம்**
அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத,வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்.
பயிற்சிநெறி ஆரம்பம் - 01.05.2014 வியாழன்
பிரிவு 1 : காலை 08.00-09.00 பிரிவு 2 : மு.ப 11.00-12.00
பிரிவு 3 : பி.ப 03.00-04.00 பிரிவு 4 : மாலை 04.00-05.00
வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.
Note:- ஒரு பிரிவில் 16 பேர் மட்டும். பயிற்சியில் இணையும் அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்.
SAAMSON LANGUAGE SCHOOL 371, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

**அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 2014**

95ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சரஸ்வதி இளைஞர்கள் 2ஆவது வருட மாக நடத்தும் அரியாலையூர் ஜேர்மனி வாழ் திருமதி மாலினி வசந்தகுமார் அவர்களின் ஆதரவில் வடமாகாண ரீதியிலான மாபெரும் Over game ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி.
* 30 000 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிமிக்க பரிசில்களைக் கொண்ட சுற்றுப்போட்டி (வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்)
* முடிவுதிகதி - 01.05.2014
மேலதிக தொடர்புகளுக்கு:
077 309 5745/077 778 2192
நிர்வாகம்
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
(47436) (7.6.3)

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
May 01 02 2014





01,02 மே 2014
அக்ஷய திருதியை
தினங்களில் நகைகள் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்

இல. 111, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4134
இல. 30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5511

தங்கத்தை இல்லங்களுக்கு எடுத்துச் சென்று. மேலும் செல்வத்தைச் செழிக்கச் செய்யுங்கள்

அன்றைய தினம் தங்க நகைகள் கொள்வனவு செய்வோருக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்

**நியூ நகுலா ஜுவல்லறி**
இல. 109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9119
இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4101
(சி/13743)(10)

இப்பத்திரிகை, நியூ உ தயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.